எண் 382 ட

# மகளிர் மருத்துவம்

ஆக்கியோன் :

டாக்டர் பு. மு. வேணுகோபால், எச். பி. ஐ. எம்.,
தனி அலுவலர்,
சித்த மருத்துவ பாடநூற் குழு,
மருத்துவக் கல்வி இயக்குநர் அலுவலகம்,
சென்னை-5

மற்றும்

முன்னாள் முதல்வர்
அரசினர் இந்தியமுறை மருத்துவக் கல்லூரி,
பாளையங்கோட்டை.

தமிழ்நாடு அரசு சித்த மருத்துவ வாரிய வெளியீடு.

1984

# மகளிர் மருத்துவம்

ஆக்கியோன் :

டாக்டர் பு. மூ. வேணுகோபால், எச். பி. ஐ. எம்.,
தனி அலுவலர்,
சித்த மருத்துவ பாடநூற் குழு,
மருத்துவக் கல்வி இயக்குநர் அலுவலகம்,
சென்னை–5

மற்றும்

முன்னாள் முதல்வர்
அரசினர் இந்தியமுறை மருத்துவக் கல்லூரி,
பாளையங்கோட்டை.

தமிழ்நாடு அரசு சித்த மருத்துவ வாரிய வெளியீடு.

1984

முதற் பதிப்பு 1971
மறு பதிப்பு 1982

## பதிப்புரை

மகளிர் மருத்துவம் என்னும் இந்நூல் பாளையங்கோட்டை சித்த மருத்துவக் கல்லூரியில் பயிலும் சித்த மருத்துவ மாணவர்களுக்கான பாட நூலாகும். மருத்துவக் கல்லூரி பாட நூற்களும், ஆதார நூற்களுமாக 13 நூற்கள் இருப்பில் தீர்ந்துவிட்டபடியாலும், இந்நூற்களின் அவசரத் தேவையை நிறைவு செய்வான் வேண்டி குறைந்த காலத்தில் மிக விரைந்து இந்நூற்களை அச்சிட்டு வெளியிட வேண்டும் எனத் தமிழ்நாடு சித்த மருத்துவ வாரியம் நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளது. 13 நூற்களும் அச்சேறி மறு பதிப்பாக வெளிவர இருக்கின்றன. இந்நூல் பதிப்புச் செய்து உரிய காலத்தில் வெளிவருவதற்கு உதவிய சித்த மருத்துவ வாரிய அலுவலர்களுக்கு என் மனங்கனிந்த நன்றி உரித்தாகுக.

திருமதி. குத்சியா காந்தி, இ. ஆ. ப.,
உறுப்பினர்-செயலாளர்,
தமிழ்நாடு சித்த மருத்துவ வாரியம்,
சென்னை-106.

# நூன்முகம்

நம் தமிழ் மொழி எத்தகைய தொன்மையையும் தன்மையையும் பெற்றதோ அவ்வாறே சித்த மருத்துவக் கலையும் முதன்மையையும் மேன்மையையும் அடைந்துள்ளது. அத்தகைய அருந்தமிழால் திருந்திய சித்த மருத்துவம் பல பாகுபாட்டையுடையதாகும் அவ்வகையில் ''மகளிர் மருத்துவம்'' ஒன்று. இம்மருத்துவங்களின் விரிவுகளனைத்தும் தொன்றுதொட்டு தொடர்ந்து சிறப்புற நடந்து வந்துள்ளன. இடையே அன்னியர்கள் பலரின் கூட்டுறவால், அவை மாறத் தொடங்கின. அங்ஙனம் தொடங்கிய காலத்து அரும்பாடுபட்டு நிலை நாட்டியவைகள் யாவும் அமைதியாக மறைக்கப்பட்டும், மாற்றப்பட்டும் வழக்கில் வீழலாயின. அங்ஙனம் செய்யும் குழுவினரும், அன்று தொட்டு இன்று வரையிலும் நம்முடனிருக்கின்றனர். ஆனால் நம் அருந்தமிழ் மருத்துவம் எத்தனையோ இடுக்கண்களைக் கடந்து இன்று வளங்குன்றாது சித்த மருத்துவமாய் நிலைத்திருக்கின்றது என்றால், அதற்குக் காரணம் தமிழ்த்தாயின் எழில் நலம் வாய்ந்த தெய்வத் தன்மையேயாகும்.

ஆனால் மகளிர் மருத்துவம், சூல் மருத்துவம், அறுவை மருத்துவம் போன்றவைகள் ஒரு காலத்தில் மேம்பட்டிருந்தன. அதனை முன் கூறிய காரணங்களால் சுவடிகளில் எழுதி வைக்கப்படவில்லை. எனினும் திருமூலர், யூகிமுனி, அகத்தியர் போன்ற சித்தர்கள் அங்குமிங்குமாக சிற்சில மகளிர் நோய்களைச் செய்யுட்களாக ஏட்டில் எழுதி விட்டு சென்றனர். பிற்காலத்தில் அதனை வளப்படுத்தி மேற்கொண்டு செய்வாருமிலதாகிப் போய்விட்டது. எனவே சித்த மருத்துவ மாணவர்களுக்குக் கல்லூரிப் பயிற்சி முறையில் மகளிர் மருத்துவம் பாடத்திட்டமாக எழுதும் பணியைச் சித்த மருத்துவப் பாட நூற்குழுவினரால் எந்தனுக்கு அளிக்கப்பட்டது.

ஆகவே, சித்தர் நூற்களில் ஆங்காங்குக் கூறப்பட்ட மகளிர் நோய்களையும், விடுபட்ட நோய்களையும் தற்காலத்துக்குரியனவாய் விளங்கும் மகளிர் நோய்களையும் சேர்த்து ஒருவகையாக எழுதி முடித்துள்ளேன். ஆனால் அவைகளுக்கான பிணி நீக்க முறைகளைச் சிற்சில நோய்

களுக்குப் பொதுமருத்துவங்களாகக் கூறி, ஏனையவற்றிற்கு ஆசிரியர்கள், சித்த மருத்துவர்களேயாகின்றபடியால், அவரவர்கள் அனுபவத்தில் கண்ட பிணி நீக்க முறைகளை மாணவர்களுக்கு வகுப்பில் போதிப்பார்களென்று ஆசிரியர்களிடம் விடுத்தனம் என்று பெருமிதத்துடன் கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால் பரிகார முறையில் அநேக பாடபேதங்களுள்ளபடியால் இந்நூலைப் போதிக்கும் ஆசிரியரிடம் விடுவது பெரும் நன்மையைப் பயக்கும் என்று விடுத்தனம்.

நிற்க, பெண்கள் தங்களுக்குற்ற பிறப்புறுப்பு நோய்களை வெளிப்படையாகக் கூறாத காரணங்களால் சித்த மருத்துவர்கள் நூல் வடிவமாக வரையாமைக்குக் காரணமாகலாம் என்று நினைக்க ஏதுவாகலாம். முற்காலங்களில் பிறப்புறுப்பு நோய்களின் குறிகுணங்களைப் பெண்கள் பிறரிடம் சொல்ல வாய்ப்பு கொள்ளவேயில்லை என்று தெரிய வருகிறது. வெளிப்படையாகக் கூறினால் தன் பெண் தன்மைக்கு இழுக்கு வருமோ என்றெண்ணி, சமூகக் கட்டுப்பாட்டிற்குப் பயந்து தன் கணவனிடமும் கூறாதிருந்தனர் போலும்! மேலும் தன் கணவனின் அன்பை இழக்க நேரிடும் என்ற பேதைமை குணம் போலும். அதிலும் பெண்களில் பிறப்புறுப்புகளின் நோய்கள் மிகவும் மறைக்கப்பட்டேயிருந்ததினாலும் பெண்களுக்குள்ளே தலைவியானவளாலோ நமது முதிர்ந்த மூதாட்டியாலோ தனக்குத் தெரிந்த வகையில் ஆலோசனைகளும் பரிகாரங்களும் நடந்தனவே அன்றி மக்கள் யாவரும் அறியும்படியான அறிவு விளக்கமாக நூலினால் அறிந்தனர் என்று சொல்லுவதற்கில்லை.

அந்நிய நாட்டார் ஆட்சியில், பெண் மக்களின் சமூகக் கட்டுப்பாடு மிகவும் தளர்ந்துவிடவே, பெண்களே மருத்துவத்துறையில் புகுந்து பயிற்சி பெற்றதன் காரணமாக மகளிர் நோய்க்கான காரணங்கள், குறிகுணங்கள் விளக்கமாகத் தெரியவந்தது. மேலும் மனோதத்துவ விஞ்ஞான இயலும் பல்கிப் பெருகவே, மகளிர் மருத்துவம் மருத்துவ விஞ்ஞானிகளால் எழுதவும் முடிந்தது. அம்மகளிரின் நோய்களை நீக்கவும் பயன்படும்படியான நிலமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே மகளிர் மருத்துவத்தைத் தற்கால நவீன மருத்துவ நுட்பங்களைத் தழுவியும், சித்த மருத்துவ நூற்களில் கூறியுள்ளவைகளையும் கருத்தில் வைத்து, சித்த மருத்துவத் துறைக்குப் பெரிதும் பயன்படும்படியாக எழுதியுள்ளேன். இனி, இந்நூல் வெளிவரக் காரண

மாயிருந்த அனைவருக்கும் நன்றியினைச் செலுத்த கடமைப்பட்டவனாவேன். இந்நூல் வெளிவரக் காரணமாக இருந்த தமிழக அரசினருக்கும், பொது நலத்துறை அமைச்சக முன்னாள் செயலாளர் உயர்திரு என். ஆனந்த பத்மநாபன், இ.ஆ.ப. அவர்கள், முன்னாள் மருத்துவக் கல்வி இயக்குநர் டாக்டர் திரு டி. சனார்த்தனன், எம்.பி.,பி.எஸ்., எம்.எஸ்ஸி. அவர்கள், புதிய மருத்துவக் கல்லூரிகளின் திட்டத் தனி அதிகாரி டாக்டர் திரு T. நாராயணசாமி, எம். பி., பி.எல்., எம். எஸ்ஸி. அவர்கள் சித்த மருத்துவப் பாட நூற்கள், தமிழில் இயற்றப்படுவதால் நூலினைச் செம்மையாக்கிட அரசினரால் அப்பணிக்கு அமர்த்தப்பட்ட திரு. மு. கோவிந்தராசன், எம்.ஏ., பி.எட்., அவர்கள் இந் நூலிற்குரிய படங்களை வரைந்தளித்த கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரியைச் சார்ந்த ஓவியர் திரு சம்பந்தம் அவர்கள், அழகிய முறையில் அச்சிட்டுத் தந்த எழுதுபொருள் அச்சுத்துறை இயக்குநர் திரு. மா. குமார் கோமேதகவேல், இ.ஆ.ப. அவர்கள் ஆகியோருக்கும் என் இதயம் நிறைந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் பு. மு. வேணுகோபால்,

சென்னை–5,
10—3—1970.

## உட்பொதிந்தலை

—.—.—


பக்கம்

பிரிவு 1

உடற் கூறும் உடல் தத்துவமும்

அத்தியாயம் 1 — 1—8

கூபகம் :

பொய்க் கூபகம்—விட்டங்கள்—அச்சு—
மெய்க் கூபகம்—கூபகத்தரை.

அத்தியாயம் 2 — 9—12

மகளிர் புறப்பிறப்பு உறுப்புக்கள்
அகல்—யோனி

அத்தியாயம் 3 — 13—17

கருப்பையும் சினைப்பாதைகளும்

அத்தியாயம் 4 — 18—22

சினைப் பைகள் :

வியூகனம்—பரிசினைகள்—சினைகள்
பீதகம்

அத்தியாயம் 5 — 23—30

பூப்பு :

பூப்படைதல்—பூப்பு முடிவு—பூப்படைதலும்
சினைப்பையின் தொழிலும்.

பிரிவு 2

அத்தியாயம் 6 — 31—89

பூப்புச் கோளாறுகள் :

பூப்புத் தடை—போலி சூதகத் தடை—மெய்சூதகத்
தடை—குகரணச் சூதகத்தடை

பெரும்பாடு :

சாதாரணப் பெரும்பாடு—அசாதாரணப் பெரும்பாடு—
வாதப் பெரும்பாடு, பித்தப் பெரும்பாடு—
சேட்பப் பெரும்பாடு—தொந்தப் பெரும்பாடு

பக்கம்

அத்தியாயம் 7 40—43

சூதகவலி :

அகச் சூதகவலி—புறச்சூதகவலி—சவ்வு சூதகவலி—
புணர்ச்சிவலி.

அத்தியாயம் 8 44—46

ரத்த மலடு—கதலி மலடு—காக மலடு—கன்ம மலடு—
ஆண் மலடு—பெண் மலடு—நிரந்தர மலடு

அத்தியாயம் 9 47—50

யோனிக் கசிவு :

அகல் நமை—முதுகு வலி

அத்தியாயம் 10 51—64

அகல் தாபிதம்—யோனித் தாபிதம்—பெண்குறி ரோகப்
படலம்—கழுந்து தாபிதம்—கருப்பை உளர் கவசத்
தாபிதம்—சினைப்பை தாபிதம்—புணர்ச்சி நோய்கள்—
மகளிர் கொருக்கு நோய்—மகளிர் வெள்ளை நோய்.

அத்தியாயம் 11 65—70

மகளிர்க்கு ஏற்படும் சில நோய்கள்.

சிறுநீர் வேகக் கோளாறுகள்—நிதம்பசூலை—கர்ப்பசூலை—
தூரசூலை—கர்ப்பக்கிராணி—சூல் மகோதரம்—
மாமிச மகோதரம்

அத்தியாயம் 12 71—79

வன் கழலைகள், புற்று நோய்கள்

தசைவுன் கழலைகள்—காம்புக் கழலைகள்—கருப்பைப்
—புற்று, கருப்பைப் புற்று நோய்

மகளிர் நோய்களினால் ஏற்படும் மனோவிகற்பங்கள்

# பிரிவு ஒன்று

## அத்தியாயம் 1

### கூபகம்

"மகளிர் மருத்துவம்" பற்றிய செய்திகளை அறிந்து கொள்வதற்கு முன், கூபகத்தின் உடற்கூற்றை அவசியந் தெரிந்தே ஆக வேண்டும். "அங்காதி பாத உடற்கூறு" நூலில் இதனை விரிவாக கற்கலாம். இங்கு "மகளிர் மருத்துவம்" பற்றிய செய்திகளைப் புரிவதற்குத் தேவையான கூபக உடற் கூற்றை மட்டும் காணபோம்.

### என்புக் கூபகம்

கூபகத்திற்கு முக்கியமானதும், சிறப்பானதுமான தொழில்கள் (1) பிறப்புறுக்களின் உள்ளுறுப்புகளைத் தன்னும் அமைத்துக் காக்கின்றது. (2) மகப்பேறு காலத்தில் மகவு என்பு வளையத்துள் நுழைந்து வெளிவர வேண்டும். இது இரண்டு அனுமி என்புகளாலும்—எதிர்பக்கவாட்டில் (பீடிகையோடு கூடிய புச்ச) என்புகளாலும்—(பின்பக்கம்) இவைகளின் பொருத்துகளாலும் வீசிகளாலும் உண்டாகிறது.

**பொருத்துகள் :—** நான்கு வகைப்படும். அவையாவன ;—(1) வலது பீடிகைப் பாலிகைப் பொருத்து, (2) இடது பீடிகைப் டாளிகைப் பொருத்து, (3) மேகனப் பொருத்து, (4) பீடிகைப் புச்சப் பொருத்து என்பனவாம். பீடிகைப் பாலிகைப் பொருத்து—பீடிகை என்பின் இரு பக்கவாட்டில் பெரிய பொருத்துப் பக்கங்களுண்டு. இரு பாலிகை என்புகள் அவைகளின் பொருத்துப் பக்கங்களால் பீடிகை என்போடு இரு பக்கமும் பொருத்தப்பட்டிருக்கின்றன.

அனாமிகளின் மேகனப் பாகச் சந்திப்பால் மேகனப் பொருத்தாகிறது. பீடிகையின் அடிப் பாகத்தில் புச்ச என்புத் தொடுகிறது. இப் பொருத்துகளுக்கிடையில் விசிகள் பற்றுகின்றன. எனபு முகப்புகளோடு பேசிவிசிகள் இங்குமங்குமாகப் பற்றி இணைக்கின்றன. அதில் சிறு சிறு பள்ளக்குழிகள் கிடக்கின்றன. அக் குழிகளில் வசாநீர் தேங்குகிறது. இப் பொருத்துகளுக்கு முன்னும் பின்னும் விசிகள் பற்றுகின்றன.

சூல் காலத்தில் பொருத்துகளுக்கு முன்னும் பின்னுமுள்ள விசிகள் மிருதுவடைகின்றன. அதன் பயனாய் நீளமுறுகின்றன. இம் மாறுதல் சூலில் ஏற்படும் தசிரங்களின் சஞ்சயமே பார்க்குமிடத்துச் சிலருக்குப் பொருத்தில் இடைவெளி அகனறு, பெருத்துத் தளர்ந்து விடுகிறது. மகப் பேறு காலத்தில் மிகவும் தளர்ந்து கர்ப்பிணிக்கு ஆபத்தையும் விளைவிக்கும். பேசிவிசிகளும் மிருதுவாகின்றன. பள்ளக் குழிகள் ஆழ்ந்தும் அகன்றும் காணும். வசாநீர் பெருகி நிற்கும். சூலில் கருப்பாதை விரிந்து கொடுப்பதற்காக இம் மாறுதல்கள் முன்கூட்டியே நடக்கின்றன. பீடிகையின் இரண்டாவது வம்சி எனடீன் கீழோரத்திற்கு எதிரில் இம் மாறுதல்கள் நடுமையமாகின்றன. இம் மாறுதல்களில் பீடிகையின் போல் வரம்பு பங்கு கொள்வதில்லை. ஆனால், அது தலை அசைத்தல் போல கொஞ்சம் முன்பாகவோ அல்லது பின்னரோ சாய்வுறும். புச்சம் பின்புறம் நகரும். மேற்சொன்ன அம்சங்கள் குறுகலான கூபகச் சோதனைக்குத் தேவைப்படும். பரிகாரம் செய்யவும் உதவும். சூலில் முதுகுவலி ஏற்படுவது இவைகளால்தான் என்பதும் விளங்கும்.




படம் 1 :—மேற்பந்தையின் வலது பாதி.

1. பீடிகை அடியின் முன்னோரம்
2. பாலீகை ரேகை
3. மேகனப் புருவம்
4. ஆசனம்
5. ஆசனமுள்

**மேகனம்.**—அனாமியின் மேகனப் பாக எல்புகளின் முனைகள், சந்தித்து மேகனப் பொருத்தாகிறது. முனைகளைத் தட்டைப் பேசிவிசிகள் பற்றுகின்றன. விசிகளுக்கிடையில் இடைவெளியுண்டு அதனிடத்து வசாநீர் நிற்கும். மாதர்களுக்கு இந்த இடைவெளிச் சற்று அதிகமாகவுண்டு. சூலில் சற்று அதிகரிக்கிறது. சிலருக்கு அதிகம் அதிகரித்து நடக்கும்போது வலியையுண்டாக்குகிறது.

**பீடிகை புச்சப் பொருத்து** :—இப் பொருத்து, விசிகளால் சுற்றி இணைக்கப்பட்டுள்ளது. சூலில் மிருதுவாகி மகப்பேற்றின்போது பின்வாங்கி விலகும்.

கூபகத்தை இரு பிரிவுகளாகப் பிரிக்கின்றனர்: (1) மெய்க் கூபகம், (2) பொய்க் கூபகம். கீழ்ப் பாகத்தை மெய்க்கூபகமென்றும், மேல் பாகத்தைப் பொய்க் கூபகம் என்றும் கூறுவர். இவ் விரண்டையும் பிரித்துக் காட்ட ஒரு வரியுள்ளது. அதனை மேகனப் பாலிகை ரேகை என்பர்.

**பொய்க் கூபகம் (மேல் கூபகம்)**:—பொய்க் கூபகத்தை, வல, இட மாகப் பாலிகங்களும், பிற்பக்கத்தில் முள்ளந்தண்டின கீழ்ப்பகுதியும் சூழ்ந்திருக்கின்றன. இது தளர்வதில்லை. இதைப் பற்றும் பாலிகைப் பேசு, சூலுண்ட கருப்பைக்குப் பக்கை அல்லது மெத்தையைப் போலிருக்கின்றது. மகவின் தலையை மெய்க் கூபகத்துள் தள்ள புனல் போலுதவுகின்றது. பொய்க் கூபக அளவுகளில் இரண்டு முக்கிய மானவை. அவைகள்.—(1) இடைமுனை விட்டம்:—இரு முன்மேல் பாலிகை முனைகளுக்கு இடையிலுள்ள தூரம் இடை முனை விட்டம் எனப்படும். இதன் அளவு 23·75—25 செ.மீ. (9 1/2—10 அங்குலம்).




படம் 2:—பொய்க் கூபகத்தின் குறுக்கு விட்டங்கள்.

1. இடைப்பாலிகை புருவ விட்டம். 2. இடைமுனை விட்டம்.

(2) இடைப் பாலிகைப் புருவ விட்டம்:—(பெரிய குறுக்கு விட்டம்) இருபாலிகைப் புருவங்களுக்கு இடையிலுள்ள தூரம் அல்லது கோடாகும். இது 25·25—27·5 செ. மீ. ($10\frac{1}{2}$—11 அங்குலம்) அளவாகும்.

புருட கூபகத்திற்கும் பெண் கூபகத்திற்கும் உள்ள சில வித்தியாசங்கள்: புருட கூபகத்தின் என்புகள் தடிப்பும், பெலப்பும். உரப்புமானவைகள். அதன் அறை ஆழமும் ஒடுக்கமுமாய் இருக்கும். பெண் கூபகத்தின் என்புகள் இலேசாயும், அழுத்தமாயும் இருக்கும். பாலிகைப் பள்ளங்கள் பெருத்தும் ஒக்கலைகள் அகன்றும் இருக்கும். மேல்கீழ்ப் பந்தைகளும் அறையும் விசாலமாக இருக்கும். அறையின் ஆழம் குறைவாகவும், ஆசனக் கணுக்கள் அதிக தூரப்பட்டும் இருக்கும். குந்தகத் துளை முக்கோணமாயும் மேகனத்தமா விரிவாயுமிருக்கும்.

## மெய்க் கூபகம் (கீழ கூபகம்)

**மேற்பந்தை:**—மேகனப் புருவத்திலிருந்து மேகன முள், மேகனப் பாலிகை ரேகை, பீடிகை அடியின் முன ஓரம, பீடிகைப் புடைப்பு என்ற கீழ்க் கூபக விளிம்பிற்கு வட்டமாக எல்லைப்படுத்துவது மேற் பந்தை (உள் வாசல்) எனப்படும்.




படம் 3—கூபகத்தின் மேற்பந்தை.

1. பீடிகை அடியின் முன்னோரம்
2. பாலிகை ரேகை
3. மேகனப் புருவம்
4. மேகன அணுசங்கி

**கீழ்க் கூபகத்தின் அறை;**—இது முன்னே மேகன அணுசங்கியாலும் பின்னே பீடிகை புச்ச வளைவினாலும் பக்கத்தில் ஆசனக் காண்டத் தின் உட்பக்கத்தினாலும் எல்லைப்படுத்தப்படுகின்றது. இதன் ஆழம் ஏக சகட்டுக்கு முற்பகுதியில் மேகன அணுசங்கியிலே $1\frac{1}{2}$ அங்குலம், நடுவில் $3\frac{1}{2}$ அங்குலம், பின்னே $4\frac{1}{2}$ அங்குலம் இருக்கும் இவ்வறைக்குள் கடைக்குடலும், சலப்பையும், பிறப்புறுப்புக்களில் சிலவும் தங்கும். இவைகட்குள் கடைக்குடல் பின்னுமாகப் பீடிகைக்கவிவுடனும் சலப்பை முன்னுமாக மேகன அணு சங்கிக்கு அடுக்கவும் கிடக்கும். பெண் களின் கருப்பையும் யோனியும் இவைகட்கிடையில் இருக்கும்.

**கீழ்ப்பந்தை:**—பார்வைக்கு கீழ்ப்பந்தையானது முக்கோணமாகிய மூன்று குடாக்களையுடையதாய், பல வளைவுகள் கொண்ட பெறும் வாயிலாகத் தோற்றமளிக்கும். இவற்றுள் பீடிகாசன குடாக்கள் இரண்டும் பீடிகாசன விசிகளால் கீழ்ப்பந்தையினின்று பிரிவுபட்டிருப் பதால் கீழ்ப்பந்தை சதுரமாகின்றது. கீழ்ப்பந்தையின் பின்னே, புச்ச என்பின் நுனியும் பக்கங்களில் ஆசனக் கணுக்களாகிய இம் மூன்று புடைப்புக்களால் எல்லைப்படுத்தப்பட்டிருக்கின்றது. முன்குடாவை, மேகன அணுசங்கி, மேகன ஆசனப் புருவங்களின் ஓரங்கள், ஆசனக் கணுக்கள் ஆகியவை எல்லைப்படுத்துகின்றன.



படம் 4:—மெய்க் கூபக அறை

கூபகம் உடம்பின் நேர் அச்சுக்குச் சரிவாய் மேசன என்பின் உள்பக்கம் பின் மேல் நோக்கியும், பீடிகைப் புச்சத்தின் கவிவுமுன் கீழ் நோக்கியும் இருக்கும். பீடிகையினடி மேகன அணுசங்கியின் மேலோர மட்டத்திற்கு ஏறக்குறைய நான்கு அங்குலம் மிதந்தும் புச்ச நுனி அதன் கீழோரத்திற்கு அரை அங்குலம் சற்று மிகுதியாய் மிதந்தும் நிற்கும். கூபகத்தின் மேல் வாயில் பின் கீழ் நோக்க மாயும் கீழ்வாயில் முன் கீழ் நோக்கமாயும் இருக்கும். முழு கூபக அறையின் நேர் அச்சு, பீடிகை வளைவிற்குச் சரியாய் அந்நேரைக் காட்டும் வரி மேல் கீழ் வாயில்களின் மையங்கட்கு ஊடாகச் சென்று நீட்டித்தால் நாபியில் தொடுக்கும்.



படம் 5:—மேற்பந்தையின் விட்ட அளவுகள்

## மெய்க் கூபகத்தின் அமைப்பும், உருவமும்

பெண் கூபகமானது ஒரேதரமாக எல்லாவிதத்திலும் ஒத்திருக்கும் என்பதற்கில்லை. சில நோய்களாலும், அடிபடுதலாலும் கூபகம் பாதிக்கப் படுவதால் பொதுவான இலக்கணம் கூறலாம்.

(1) மேல் பந்தச் சுற்றளவு :—மேகனப் புருவத்திலிருந்து மேகனப் பாலிகை ரேகை, பீடிகை அடியின் முன்னோரம், பீடிகைப் புடைப்பு எனறு கீழ்க் கூபக விளிம்புக்கு வட்டமாக எல்லைப்படுத்தும் சுற்றளவு.

(2) நீண்ட கூபக விட்டம் :—மேகனச் சங்கியின் பின் பக்கத்திலிருந்து இரண்டாம் மூன்றாம் பீடிகை என்பின் மையத்திற்கும் இடையிலுள்ள தூரம்.

(3) கீழ்ப் பந்தச் சுற்றளவு:—மேகனச் சங்கியின் கீழ் ஓரத்திலிருந்து ஆசன முற்கள் புச்ச என்பு முனைவரையுமுள்ள சுற்றளவு.




படம் 6 :—கீழ்ப்பந்தை

1. மேகன அணுசங்கி
2. ஆசனம்
3. ஆசனமுள்
4. பீடிகைப் புச்சப்பொருத்து

கூபகத்தரை:—கூபகத் தரை பல திசுப்படைகளால் ஆனது. உள்ளிருந்து வெளியாக—

(1) பேராவளிகைச் சவ்வு
(2) பரிபேராவளிகைச்சவ்வு
(3) கூபகவிருதி
(4) பாயுரேற்றி
(5) பாயுரேற்றியைத் தழுவிய விருதி
(6) விடப விருதி
(7) சுமரிப் பேசி
(8) விடபப் பேசி
(9) விடப விருதிகள்
(10) தோல்




படம் 7:—கூபகத் தரையில் பேசிகள்

1. யோனித் துவாரம் 3. பாயுரேற்றி

2. ஆசனம் 4. வெண்வரிக் கோடு.

கூபகத் தரை, கீழ்ப்பந்தைக்கு இரண்டு கதவுகளைப் போல கருதப் படுகிறது. முன் அல்லது மேகனக் கதவு, பின் அல்லது பீடிகைக் கதவு என இரண்டாகும். கீழ்ப்பந்தையைத் திறக்க ஒரு கதவைத் தள்ள வேண்டும். மற்றொன்றை இழுக்க வேண்டும். இவ்விரண்டு கதவுகளுக்கு யோனி வாசல் திறக்கப்படும் வரம்பாகிறது, யோனி முன் சுவர் சலவாகி, சலப்பை, கூபகவிருதி. விடபச் சவ்வு இவைகளுக்கு அடுத்துள்ள பேசிகள், விடப விருதி, தோல் என்பவைகள் முன் கூபகத்தரை ஆகின்றன. பின் யோனிச் சுவர், விடபம், பாயுரேற்றிப் பேசி




படம் 8:—பெண் கூபகத்தரையின் பேசிகள்

1. சுமரிப்பேசி
2. யோனிச் சுருக்கிப் பேசி
3. சுமரிப்பேசி
4. குறுக்கு விடயப் பேசி
5. பாயுரேற்றி
6. பெருஞ்சகனிப் பேசி
7. பாயுச் சுருக்கி

புச்சப்பேசி விரேகி. கூபக விருதி, விடப விருதி, தோல் என்பவைகள் பின் கூபகத்தரை ஆகின்றன. மகப்பேறு காலத்தில் இவ்வீரண்டு கதவுகளான கூபகத்தரைகள் மிகவும் பயன்படுகின்றன.

விடபம்.—ஆசன வாயிலுக்கும் யோனி வாசலுக்கும் நடுவாகக் கழலையைப் போல திரண்ட பேசிப்பதார்த்தம் விடபம் எனப்படும். ஆனால் உடல் கூறு இயலாளர்கள் கூறும் விடபம் மிகவும் பரந்த தொன்றைக் குறிப்பிடுகின்றனர். மகப்பேறு மருத்துவர்கள் முற் சொன்னதை விடபம் என்று குறிப்பிடுகின்றனர்.

மகப்பேறு காலத்தில் இவ்விடபம் மிகவும் அபரிமிதமாக விரி வடைகிறது. திசு சவ்வுக் கனத்திற்கு விரிவடைந்து கிழிவதற்கும் ஏதுவுண்டு. விடபக் கிழிசலைத் தடைப்படுத்துவது கர்ப்பிணிகளுக்குப் பேருதவியாகும்.

# அத்தியாயம் 2

## மகளிர் புறப்பிறப்பு உறுப்புக்கள்

**மகளிரின் வெளிப் பிறப்பு உறுப்புக்கள்:**—(1) அகல், (2) பேரிகம், (3) சிற்றிதழ், (4) சுமரி, (5) சலவாசல், (6) யோனி வாசல் என்பவைகளே. அல்குல் என்பதில் இவைகளெல்லாம் அடங்கும்.




படம் 9—மகளிர் புற பிறப்புறுப்புக்கள்.

1. சுமரியின் முன் தோல் குசை
2. வேசம்
3. யோனி வாசல்
4. வேசப் பள்ளம்
5. சுமரிமணி
6. சுமரிக் குகாப்பங்கு
7. பேரிதழ்
8. சிற்றிதழ்
9. சலவாசல்
10. விரேகி வாசல்.

**அகல்:**—அகல் என்பது அடிவயிற்றின் மேகன என்புக்கு முன்னே தோன்றும் நிணமேடாகும். இது அல்குலின் முன் மேற் பகுதியாகும். பருவ காலத்தில் இது மயிரால் மூடப்பட்டிருக்கும்.

**பேரிதழ்:**—அகலிலிருந்து இருபக்கமும் இறங்கி விடபத்தின் முற்பகுதிகளுக்குச் சென்று ஒன்றாக இணைந்து விடுகின்றன. பின்னே போகப்போக இவற்றின் பருமை குறையும். இவைகளுக்கு இடையிலுள்ள பிளப்பு, பிறப்பு அமரிவாசல் எனப்படும். இதழ் ஒவ்வொன்றும் வெளிப்பக்கத்தில் உரோமங்களுள்ள தோலினாலும் உட்பக்கத்திற் சளிச்சவ்வினாலும் மூடப்படும். இவ்விருபடைகளுக்கு இடையில் நிணமும், ஆனாய நெசவு அண்டகியைப் போன்ற இசிச் சவ்வும், தசிரங்களும், நரம்புகளும், கோளங்களும் உண்டு. இதழ்கள் இரண்டும் முன்னந்தத்தில் முன் உகமாகவும் பின்னந்தத்திற் பின் உகமாகவும் ஒன்றோடொன்று இணைந்திருக்கும். பின் உகத்திற்கும் ஆசனத்திற்கும் இடையே ஏறக்குறைய ஒரு அங்குல நீளமுள்ளதாய் இருக்குமிடம் விடபமாகும். பின உகத்திற்குள்ளே குறுக்காகக் கிடக்கும் சவ்வு மடிப்பு அல்குற்குசை எனப்படும். பின் உகத்திற்கு, கவை என்றுஞ் சொல்லப்படும். இது முதல் மகப்பேற்றில் பெரும்பாலும் கிழிந்து போகின்றது. அல்குற்குசைக்கும் பின் உகத்திற்கும் இடையிலிருக்கும் பதிவு 'வடிசக் குழி' எனப்படும்.

**சிற்றிதழ்கள்:**—இவை பேரிதழ்களுக்கு அடுத்து அண்மையிலிருக்குஞ் சளிச் சவ்வு, மடிப்புகள் இரண்டுமே சிற்றிதழ்கள் எனப்படும். இவைகளுக்கு 'நிம்வி' என்றும் பெயர். இவை மெல்லிய ஆவரகத்தால் மூடப்படும். நிணம் அதிகமாயுறும். அநேகப் பருங்குதுவங்களுள்ளதும் உள்ளுக்கு இரத்தக் குழற பின்னலுள்ளதுமாக இருக்கும். இவை அல்குலின முன் மேற்பகுதியிற்றுவங்கிச் சுமரியில் நின்று சரிவாய் அக்கம் பக்கத்தில் ஒன்றரை அங்குல நீளத்திற்கு இறங்கி யோனி வாசலுக்கு அருகில் முடியும். இவை புறவளத்திற் பேரிதழ்களோடும் அகவளத்தில் யோனியின் சுவரோடும் தொடர்பாகும். இவை முற்பகுதியில் ஒன்றையொன்று கிட்டி இணைந்து இவ்விரண்டு மடிப்பாய்ப் பிரியும். இப்படி மேல் மடிப்புகள் பொருந்திச் சுமரிக்கு முன் தோலாகும். கீழ் மடிப்புகள் அதன் மணியைக் கட்டும் நூலாகிய குசையாகும்.

**சுமரி:**—இது அல்குலின் முற்பகுதியில் சிற்றிதழ்கள் பொருந்துமிடத்துக்குப் பதியவிருக்குஞ் சதையான முளையாகும். இது மேகன ஆசன என்புகளின் சாகைகளோடு இரண்டு பாகங்களால் தொடுக்கப்படும் மணி எனப்படும். இதன் மேலந்தம் திரண்டதும் மிக உணர்வுள்ளதுமாகும். சுமரி குகாப்பங்கு எனனும் குழல் போன்ற இரண்டு பாதிகளாலாகும். இவை தடித்த வன் சவ்வாலாகி விம்மும் நெசவால் நிறைந்து நடுவிற் பொருந்தி வலம் இடமாகக் கிடக்கும். சுமரிக்கு, தூக்கு விசி, சுமரி நிமிர்த்தி ஆகிய இரண்டு சிறு பேசிகளுமுண்டு.

சுமரிக்கும் யோனிக்கும் இடையிலும் சிற்றிதழ்கள் இரண்டிற்குமிடையிலும் முக்கோணமும் அழுத்தமுமான இடம் ஒன்றுண்டு. இதற்கு 'வேசம்' என்று பெயர்.

**சலவாசல்:**—இது வேசத்தின் பிற்பகுதியிற் சுமரிக்கு ஓர் அங்குலம் கீழே யோனியருகில் இருக்கின்றது.

**யோனிவாசல்:**—சலவாசலுக்கு அடுத்துக் கீழே நீண்டு வட்டித்த யோனி வாசலிருக்கும். இது கன்னிகளாயின் அரணியென்னும் சவ்வினால் அடைபட்டிருக்கும்.

**அரணி:**—அரணி என்பது யோனி வாசலின் பிற்பகுதியை அடைத்துக் கொள்ளும் சளிச் சவ்வின் மெல்லிய மடிப்பாகும். இதன் மேலோரம் கவிவு. சிலருக்கு இச் சவ்வு யோனியை முற்றும் அடைத்துக் கொள்வதுண்டு. சிலருக்கு இதன் நடுவிற் பெருந் துவாரம் இருக்கும். இதற்கு மூன்பாகத்திலோ, வலமிடப் பாகத்திலோ, முன்னும் பின்னுமோ துளைகளமைந்திருப்பதுண்டு. அரணி, சற்றும இல்லாதிருப்பதுமுண்டு. யோனி வாசலுக்கு அருகில் சுற்றிவர சற்றே உள்ளுக்கிருக்கும் சிறு சிறு பருக்கள் அரணிச் சவ்வு அழிவதாலுண்டாகும். இவைகளுக்கு அரணிச் சேடம் என்று பெயர்.

**பர்துலின் கோளகம்:**—பர்துலின் கோளகங்கள் திரண்ட சதையான ஒவ்வொரு உறுப்புகளின் வாசலின் இரு பக்கத்திலுங் கிடக்கும். இக் கோளகங்கள் ஒவ்வொன்றும் நீண்ட தாரையாற் சிற்றிதழின் அகளத்தில் அரணிக்கு வெளியே திறக்கும். இவை புருடரிலுள்ள கவுபர்க் கோளகங்களுக்கு ஒப்பாகும்.

**சலப்பை:**—இது கூபகத்தின் முற்பகுதியில் மேகன என்புக்குப் பின்னும் கருப்பைக்கு முனனுமாகக் கிடக்கும். இதன் அடி கருப பையின் கழுந்தோடும் யோனியின் முற்சுவரோடும் அணைந்திருக்கும்.

**சலவாகி:**—இது சலப்பைக் கழுத்திலிருந்து சலவாசல் வரைக்குமிருக்கின்ற வறக்குறைய ஒன்றரை அங்குல நீளமுள்ள ஒடுங்கிய சவ்வுக் குழலாகும். இது மேகனானுசங்கிக்குக் கீழே யோனியின் முற்சுவருக குளளே புதைந்து சறறு மேல் வளத்தில் கவீர்த்ததாய்க் கீழும் முனனுமாக நேரிற் கிடக்கும்.

**விரேகி:**—இது ஆண்கனைள விட விசாலமும் வளைவு குறைந்தது மாகும். மேற் பங்கு, இடது பீடிகைப் பாலிகைப் பொருத்திலிருந்து பீடிகையின் மையம் வரைக்கும் இருக்கும். இதன் பற்றும் சகவாசமும் ஆண்களைப் போலவே இருக்கும்.

நடு பங்கு புச்சவென்பின் நுனி வரைக்கும் நீடித்திருக்கும். இது முன் மேற்பகுதியில் மாத்திரம் பரியாந்திரச் சவ்வால் மூடப்பட்டதாய். யோனியின் பிற் சுவரோடு அணைந்திருக்கும்.

கீழ்ப்பங்கு, யோனியில் நின்று பின் நோக்கி வளைந்து ஆசனத்தில் முடியும். யோனிக்கும் ஆசனத்துக்குமிடையே இருக்குமிடம் விடபமாகும். மலசுருச்சுருக்கி என்ற பேசிகள் இதன் இறுதியைச் சூழ்ந்திருக்கும். பாயுசேற்றிப்பேசிகள் இதன் வல இடப் பக்கங்களைத் தாங்கிக்கொள்ளும்

**யோனி:—** இது அல்குலிலிருந்து கருப்பைக்குச் செல்லுஞ் சவ்வுக் குழலாகும் இது கூபக அறைக்குள்ளே சலப்பைக்குப் பின்னும், விரேசிக்கு முன்னுமாக இருக்கின்றது. இது முன் நோக்கிக் கவிந்த வளைவுள்ளதாய்க் கூபகமேருவாகிய வளைவிரியோடிசைந்திருக்கின்றது. இது திரண்ட குழலாயிருந்தாலும், முன்பின் பக்கங்கள் தட்டையாய் ஒன்றையொன்று கிட்டி அணைந்தாற் போல கிடக்கும். இதன் நீளம் முற் சுவர் நீட்டில் நான்கு அங்குலமும் பிற்சுவர் நீட்டில் ஐந்தாறு அங்குலமுமாக இருக்கும். இக் குழலின் துவக்கமாகிய வெளிவாசல் ஒடுக்கமாகவும், மேற்பகுதி விசாலமாகவும், மேலந்தம் கருப்பை வாய்க்கு மேலேறி அதை வளைந்து கழுந்திலே முற்பக்கத்தை விட பிற்பக்கத்தில் அதிகம் ஏறியுமிருக்கும். ஆனகயாற் கருப்பைக் கழுந்தின் பிற பக்கமே, முற்பக்கத்தை விட, யோனிக் குழலுள் அதிகம இறங்கி நிற்கும்.

இதன் முற் பக்கங்கவிவாய் சலப்பையின் அடியோடும் சலவாகியோடும் அணைந்திருக்கும். பிற்பக்கங் குவிவாய் அதன் கீழ் மூன்று பங்கும் கடைக் குடலுக்கும் யோனிக்கும் இடையிற் பையாக இறங்கி நிற்கும். பரியாந்திரச் சவ்வின் மடிப்போடு அணைந்துமிருக்கும். பக்கங்களின் மேற் பகுதியில் கருப்பைச் சிறையும், கீழ்ப்பகுதியிற் பாயு ரேற்றிப் பேசிகளும் விரேகிக்கிலோம விருதி என்ற சவ்வும் பிடிக்கும்.

# அத்தியாயம் 3

## கருப்பையின் உடற் கூறு

**கருப்பை:**—கருப்பை என்பது கருவைத் தரித்து, காலம் வந்தவுடன் அதை வெளித் தள்ளிவிடும் ஓர் உறுப்பேயாகும்.

இது சப்பையாகவும் அத்திப் பழ வடிவமாகவும் இருக்கும். இது கூபக அறைக்குள் சலப்பைக்கும் கடைக் குடலுக்கு (விரேகி) மிடையே இருக்கின்றது. இது பந்தங்களால் நிலையில் கட்டப்பட்டு யோனியின் மேற் பகுதிக்குள் இறங்கி நிற்கும். அதன் மேல் பகுதியாகிய அடி மேலும் முன்னும் நோக்கியிருக்க, கீழ் அந்தமாகிய கழுந்து கீழும் பின்னும் நோக்கியிருக்கின்றது. இதன் நேரும், யோனியின் நேரும் ஒன்றையொன்று கோணலாய் சந்திக்கும். இதை அடி, காண்டம், கழுந்து, முகம் என நான்கு பகுதிகளாகப் பிரிக்கலாம்.

**அடி:**—அடி என்பது விசாலமான மேல் அந்தம். இது குவிவாய், பரியாந்திரச் சவ்வால் மூடப்பட்டு, கூபக விளிம்பு மட்டத்திற்குச் சற்றுப் பதிந்திருக்கும்.

**காண்டம்:**—அடியிலிருந்து கழுந்து வரைக்கும் அகன்றும், பருத்தும் பின் ஒடுங்கிக் கழுந்தாகும். இதன் முதற் பக்கம் தட்டை; மேல் மூன்று பங்கும் பரியாந்திரத்தால் மூடப்படும். சிறு குடலின் தடங்கல் சில இதற்கும் சலப்பைக்கும் இடையில் இறங்கியும் கீழ் ஒரு பங்கு சலப்பையோடு இணைந்தும் இருக்கும். பிற்பக்கம் குளவு. இது முழுவதும் பரியாந்திரச் சவ்வால் மூடப்பட்டிருக்கும். சிறு குடலின சில தடங்கல் இதற்கும் கடைக் குடலுக்கும் இடையே இருக்கின்றன. வல, இட ஓரங்கள் கவிவு. இவைகளின் மேற் பகுதியிற் சிசு ப்பாதையும் இதற்கு முன்னும் கீழுமாகக் கொடிப்பந்தமும் இவைகளின் இரண்டுக்கும் பின்னும் கீழுமாகச் சினைப் பையின் பந்தமும் பிடிக்கும்.

கருப்பையின் முன்னுக்கும் பின்னுக்கும் இரண்டு வெற்றுப் பள்ளங்கள் உள. அவை, கருசலப்பை வெற்றுப் பள்ளம் என்றும் கருவிரேகி வெற்றுப் பள்ளம் என்றும் பெயர் பெறும். இப்பள்ளங்கள் பரியாந்திரச் சவ்வினால் உண்டானவை, கருசலப்பைப் பள்ளம் கருப்பைக்கும் சலப்பைக்கும் பரியாந்திரச் சவ்வினால் ஏற்பட்ட பள்ளமாகும். கருவிரேகிப் பள்ளம் கருப்பைக்கும் விரேகிக்கும் பரியாந்திரச் சவ்வினால் ஏற்பட்ட பள்ளமாகும்.

**கழுந்து:**—கழுந்து என்பது யோனியோடு தொடுப்பதாய் அதற்குள்ளே இறங்கி நிற்கிறது. இது திரண்டதுமான ஒடுங்கியதுமான கீழந்தமாகும்.

**முகம்:**—கழுந்தின் இறுதியில் உள்ள துவாரம் முகம் எனப்படும். இது கன்னிகளாயின் வட்டமாகவும், பிள்ளைப் பெற்றவர்களாயின் குறுக்குப் பிளவாகவும் இருக்கும். இதற்கு இரு விளிம்புகள் உண்டு. அவைகளின் முன் விளிம்பு தடித்தும் பின் விளிம்பு ஒடுங்கி நீண்டதுமாகும். கழுநதுக்கு மட்டும் நரம்புக் கூந்தல்கள் செருகப்பட்டிருக்கவில்லை.

**கருப்பை அறை**.—கருப்பை அறை இவவுறுப்பின் பருமத்துக்கு மிக சிறியது. காண்டத்துக்குள்ளடங்கிய அறையின் பங்கு முக்கோண வடிவமாகும். அதன் அடி, கருப்பையின் அடியை நோக்கியிருக்கும். இதன்முன் பின் சுவர்கள் ஒன்றோடொன்று குடா விழுந்திருக்கும். அக்குடாவின் மூலையில் சினைப் பாதையின வாசல்களாகிய நுண்ணிய துவாரங்கள் காணும். கீழ்க்கோணத்தில் கழுந்தோடு தொடத்து ஒடுங்கிய சிறு துணையாகிய உள் முகம் காணும்.



படம் 10—கருப்பை—சினைப் பாதையின் உள் அமைப்புகள்.

கருப்பையின் அறைக்கும் கழுந்தறைக்குமுள்ள சந்திப்பு.

**கழுந்து அறை**.—கழுந்தின் அறை சற்றே தட்டையாயும் அந்தங்களிற் பார்க்க நடுவில் விசாலமாயும் கீழ் பகுதியின் யோனிகுள்ளே திறக்கும். கழுந்துறையின் முன்பின் சுவர்களின் சளிச்சவ்வில் மரத்திலிருந்து கிளைகள் செல்வதுபோல் மையமான நெடுவரிகளும் அவைகளிலிருந்து செல்லும் சாய்வரிகளும் தோன்றும்.

**பந்தங்கள்**.—முற்பந்தங்கள் இரண்டு, பிற் பந்தங்கள் இரண்டு, பக்க பந்தங்கள் இரண்டு ஆகக் கருப்பையின் பந்தங்களாக ஆறு உள்ளன. இவை, பரியாந்திரச் சவ்வால் ஆகின்றன.

முதற் பந்தங்களின் வலம், இடம் ஆகிய இரண்டும் பரியாந்திரச் சவ்வினாலானவைகள். இதேபோல் பிற் பந்தம் வலம் இடம் இரண்டும் பரியாந்திரச் சவ்வினாலானவைகளே. பக்க பந்தங்கள் சினைப்பாதைக்கு முன்னுங் கீழுமாகக் கருப்பைச் சிறையின் படைகளுக்கிடையே செல்லுகிற நாலைந்து அங்குல நீளமுள்ள திரண்ட இரண்டு கொடிகளாகும். இவைகள் ஒவ்வொன்றும் கருப்பையின் மேற் கோணத்தில் தொடங்கி உதரவுள் வலயத்தினூடே, வஞ்சன காதம் நெடுகச் சென்று பேரிதழுள் முடியும். இப் பந்தங்கள் வன்னிழைக் கச்சும் பேசியிழைகளும், ஆனாய நெசவும் தசிரங்களும் நரம்புகளும் திரண்டு சேர்வதாலுண்டாகிப் பரியாந்திரச் சவ்வின் மடிப்பாற் சுற்றப்படும். இக் கொடியை மூடுவதாகிய பரியாந்திரச் சவ்வு வஞ்சனகாதத்திற் சற்றுத் தூரத்திற்குக் குழல் போல சிசுக்களில்

இறங்கி நிற்கும். இக் குழலுக்கு நுக்கல் உறையென்று பெயர். வளர்ந்தவர்கட்கு இது பெரும்பாலும் கண்ணடைந்துபோகும். சிலருக்கு முது வயதுவரைக்கும் குழலாக இருப்பதுமுண்டு. இவ்வுறை பீசத்தோடிறங்குப் படியாந்திர உறையைப் போன்றது.

**கருப்பைச் சிறை.**—கருப்பைச் சிறைகள் கருப்பைப் பக்கங்களிலிருந்து கூபகத்தின் சுவரில் பிடித்துக் கூபக அறையை இரண்டு பங்காகப் பிரிக்கும் பரியாந்திரச் சவ்வினாலாகியது. மேலோரத்தில் கொடிப் பந்தத்தைப் பிடித்திருக்கிறது முன் பாகத்தில் சலப்பை, சலவாகி, யோனி என்பவைகளும், பின் பாகத்தில் கடைக்குடலும் தங்கும்.

**தசிரங்களும் நரம்புகளும்.**—கருப்பைக்குள் குருதியைச் செலுத்தும்படியான கூபக நாடிகளின் சராயுக்கிளைகள் ஆகிய இரண்டும், இறங்கு கண்டவையின் சினைப்பைக் கிளைகளுமேயாகும். இவைகள் பலவளைவுகள் கொண்டவைகளும் அநேக அனுமுகங்கள் உள்ளவைகளுமாகும். நாளங்கள் பருத்தவைகளாய் நாடிகளோடுகூடச் செல்லும். சூல் கொண்டிருக்கும் காலத்தில் இவைகள் பருத்திருப்பதால் சராயுதாரணிகள் எனப்படும். இவைகள், சராயுச் சரலங்களில் முடிகின்றன. சோடணிகள் சூல் கருப்பையில் அதிகம் பருத்திருக்கும். இவைகள் கூபகக் கிரந்திகளிலும் இடுப்புக் கிரந்திகளிலும் முடியும், நரம்புகள் கீழுதரசாலம், பீச சாலங்களிலிருந்தும் மூன்றாம் நாலாம் பீடிகை நரம்புகளிலிருந்தும் வரும்.

**கருப்பைத் தொடுவைகள்.**—சினைப்பாதைகள், சினைப்பைகள், சினைப்பைப் பந்தங்கள், கொடிப்பந்தங்கள் என்பவைகளே. இவைகளும் இவைகளின் தசிரங்களும் நரம்புகளும் கருப்பையை மூடும் பரியாந்திரச் சவ்வின் மடிப்பாகிய கருப்பைச் சிறையின் பட்டுகளாற் சுற்றப்பட்டிருக்கும். இவைகளுள் கொடிப்பந்தம் முற்பக்கத்திலும், சினைப்பாதை கருப்பைச் சிறையின் மேலோரத்திலும் சினைப்பையும் அதன் அணைகளும் சினைப் பாதைக்குப் பின்னும் கீழுமாக இருக்கும்.

## கருப்பையின் வியூகனம்

கருப்பை, தாதுப்படைகளால் ஆக்கப்பட்டது. அப்படைகளைக் கவசங்களென்பர். (1) வசாக்கவசம், (2) பேசிக் கவசம், (3) சளிக்கவசம் என மூன்று கவசங்கள் உள்

**வசாக்கவசம்:**—கருப்பையின் வெளிப்படையாகிய வசாக்கவசம் பரியாந்திரச் சவ்வின் பங்காகும் இது கருப்பையின் அடியையும் பிறபக்கத்தையும், முற்பக்கத்தின் மேல் முக்கால் பங்கையும் மூடும்.

**பேசிக்கவசம்:**—பேசிக்கவசமே கருப்பைச் சுவரின் மிகுதியான பங்காகும். சூல் கொள்ளாத கருப்பையின் பேசிப் பதார்த்தம் திண்மையும் உறப்பும் நரை நிறமுமாய் வெட்டுக்கு முருந்துபோல் வைரமாயிருக்கும். படலத்திற் படைபடையான பேசி இழைகளும் அவைகளுக்கு இடையில் ஆனாய நெசவும்; இரத்தத் தசிரங்களும் (தந்துகிகள்) சோடணிகளும் செறிந்திருக்கும். கருப்பையின் பேசிக்கவசம் மூன்று படைகளால் அமைந்தது. அவை (1) வெளிப்படை, (2) நடுப்படை, (3) உட்படை என மூன்று பிரிவுகளாகும்.

(1) **வெளிப்படை:**—பரியாந்திரச் சவ்வால் மூடப்பட்டதாய், கருப்பையின் முற் பக்கத்திலும் பிற் பக்கத்திலும் மெல்லிய படலமாகயிருக்கும். இதனடியிற் குறுக்கே சென்று மேற்கோணங்களிற் கூடிச் சேர்ந்து, சினைப் பாதைகளிலும் கொடிப்பந்தங்களிலும், சினைப்பைப்பந்தங்களிலுமேறு கின்ற இழைகளாலாகும். இவைகளிற் சில இழைகள் அக்கம் பக்கத்திலுள்ள சிறைகளிலேறும். வேறு சில கழுத்தில் நின்றும் பிற்பந்தங்களிற் செல்லும்.

(2) **நடுப்படை:**—நடுப்படையில் உள்ள இழைகள் நெடும் பாட்டிலும் குறிக்கேயும், சரிவிலும் செல்லும்.

(3) **உட்படை:**—உட்படையில் உள்ள இழைகள் கோணங்கள் இரண்டிலும் துவங்கி, கருப்பையை விரிந்தது போல சுற்றி ஓடும். கழுத்தில் உள்ள இழைகள் அதைத் திகந்தமாய் சுற்றியோடும்.

**சளிச்சவ்வுக்கவசம்:**—சளிச் சவ்வு மெலிந்ததும் அழுத்தமும் உள்ள தாய் பேசிப் படலத்தோடு இறுக்கமாய் ஒட்டிக்கொள்ளும். இது சினைப் பையின் குஞ்சாந்தம் வழியாய், பரியாந்திரச் சவ்வோடு தொடர்பாகும். கருப்பைக் காண்டத்தில் இது அழுத்தமும் சிவந்த நிறமுமாய் இருக்கும். சூக்கும ஆடியின் வழியாய் இதனை நோக்கினால் குதுவங்களின் நுண்ணிய வாசற்கள் தெற்றெனத் தோன்றும். கூபக நாடிகளின் கிளை நாடிகள், சராய்வு நாடிகள் இரண்டும் கருப்பையின் காண்டப் பேசிப் படைகளினூடாகச்சென்று போடணிக்கின்றன. இந்நாடிகள் பல வளைவுகள் கொண்டவைகளாகும். நாளங்கள் பருத்தவைகளாய் நாடிகளோடு செல்லும் கீழ் உதர சாலததிலிருந்தும் மூன்றும் நாலாம் பீடிகை நரம்புகளிலிருந்தும நரம்புகள் சளிச் சவ்வுக் கவசத்தைப் பற்றுகின்றன.

**சினைப் பாதைகள்.**—சினைப் பாதைகள் வழியாய் சினைப் பைகளிலிருந்து சினை, கருப்பை அறைக்குச் செல்லும். சினைப் பாதைகள் பக்கத்திற் கொன்றாகக் கருப்பையின் மேற்கோணங்களிலிருந்தும் கருப்பைச் சிறையின் மேலோரம் நெடுக கூபகத்தின் பக்கத்துற்குச் செல்லும். இவை ஒவ்வொன்றின் நீளம் நான்கு அங்குலம் வரையிருக்கும்.




படம் 11—கருப்பையும், அதன் பந்தங்களும்.

1. வெளி வாசல்
2. கருப்பைச் சிறைப் பந்தம்
3. குஞ்சாந்தம்
4. சினைப்பை
5. சினைப்பை விசி.

இதன் குழல், ஒரு துரும்பு அரிதாய் செல்லக்கூடிய மிக நுண்ணிய துவாரமாய் கருப்பையின் மேற்கோணத்தில் துவங்கிப்போகப்போக நடுவரைக்கும் ஒடுங்கினதாகவே சென்று அப்பாற் படிப்படியாகப் பருத்து முடிவிற் சுருங்குகின்றது. இறுதி துவாரம் பரியாந்திர அறையில் திறக்கிறபடியால் அகட்டுமுகமெனப்படும். இதன் விளிம்பிற் குஞ்சம் போன்ற தளிர்கள் அநேகம் உண்டு. இவைகளிலொன்று சினைப்பையின் புறவந்தத்தோடு தொடுத்திருக்கும். இப் பகுதி குஞ்சாந்தம் எனப்படும். இது காமக் கிளர்ச்சியிற் சினைப்பையைக் கவ்விக் கொள்ளுமாதலாற் "பேய்க்கவ்வு" என்றும் சொல்லப்படும்.

**வியூகனம்.**—சினைப்பாதையானது (1) வசாக்கவசம், (2) பேசிக் கவசம், (3) சளிக் கவசம் என மூன்று படைகளாலுண்டானதாகும்.

(1) **வசாக் கவசம்.**—இது வெளிப்படைக் கவசம், பரியாந்திரச் சவ்வின் ஓர் பங்கு.

(2) **பேசிக்கவசம்.**—இது நடு கவசமாகிறது. கருப்பைப் பேசி இழைகளின் தொடர்பாகிய நெடும் பாட்டிழைகளான வெளிப்படையும் சுற்றிழைகளாலான உட்படையுமுண்டு.

(3) **உட்கவசமாகிய சளிச் சவ்வு.**—கருப்பையின் சளிச்சவ்வோடு தொடர்பாகியும், இக்குழலின் புறவந்தத்திற் பரியாந்திரச் சவ்வோடு தொடர்பாகியுமிருக்கும். இது யூபவகையைச்சேர்ந்த ஆவரகத்தால் மூடப்பட்டதாயும் குழலின் புறப்பகுதியில், விரியத்தக்கதாகச் சுருக்குகள் நெடும்பாட்டுக்கு விழுந்ததாயுமிருக்கும்.

# அத்தியாயம் 4

## சினைப் பைகள்

**சினைப் பைகள்.**—கருப்பையின் வல, இடப் பக்கங்களில் சினைப் பாதைகளுக்குக் கீழே கருப்பை சிறைகளின் பின் பள்ளத்திற்கிடக்கிற வட்டித்த சப்பையான இரு உறுப்புகளாகும். இரு பாதாங்கொட்டையின் அளவினையொத்திருக்கும். சினைப்பாதையின் ஒவ்வொன்றினது அகவந்தம் சினைப்பைப் பந்தத்தாற் கருப்பையோடு தொடுக்கப்பட்டிருக்கும். புறவந்தம் ஓர் குறுங்கொடியாற் சினைப் பாதையின் குஞ்சாந்தத்தோடு இணைக்கப்பட்டிருக்கும். இதன் தோற்றம் அளவில் மிகவும் விகற்பகங்கள் இருந்தாலும் சராசரியாக $1\frac{1}{2}$ அங். $\times 3/4$ அங். $\times 3/8$ ($3{\cdot}75 \times 2 \times 1$ செ மீ.) அளவாக ஒவ்வொன்றும் இருக்கின்றன. எடை 6 கிராம் (90 குன்றி) ஆகும்.

**வியூகனம்.**—சினைப் பைகள் பரியாந்திரச் சவ்வினால் மூடப்படவில்லை. சினைப்பை (1) காரை—வெளிப் பதார்த்தம் (2) களி—உள் பதார்த்தம் ஆகிய இருவித பதார்த்தங்களால் ஆக்கப்பட்டதாகும்.

**களி.**—இரத்த நாடிகளும், தசிரங்களும் ஏராளமாகச் செறிந்த இணைப்புத் திசுக்களும் பேசித் திசுக்களும், நிறைந்த பதார்த்தமாகும். களிக்கு மேல் காரை பரவலாக அமைந்துள்ளது. இதனுள் பரவலாகயிருந்த தசிரங்கள் ஒன்று சேர்ந்து தட்டையான காம்புக் குழல் உண்டாகி, கருப்பைச் சிறையில் பின் படையின் திசுக்களைப் பற்றுகிறது. இது கருப்பைச் சிறையையும் சினைப் பையையும் இணைக்கின்றது. இதனூடே உள் வெளித் தசிரங்கள் தாராளமாய்ச் செல்லுகின்றன. தசிரங்கள் பெருமளவில் செறிந்து கிடக்கின்றன.

**காரை.**—இது மூன்று ஆவரகவிலப்படைகளையுடையன. அவையாவன.—(1) மூலாவரக விலப்படை, (2) தறி விலச இணைப்புத் திசு, (3) பரிசினைகள் என்பனவாம்.

(1) **மூலாவரகப்படை.**—இது சினைப்பை முழுவதும் மேலெழுந்தவாரியாகவும், பரவலாகவுமுள்ள மூலாவரக இணைப்புத் திசுவாகும்.

(2) **தறிவிலச இணைப்புத் திசு.**—தறியைப் போன்றுள்ள விசங்கசாலமைந்துள்ள விலங்களாலான இணைப்புத் திசுவாகும். இது மூலாவரகப்படைக்குகீழ் அணைத்தாற்போலிருக்கும். தடித்தும் கனத்தும் காணும். வெண்மை நிறம் கொண்டுள்ளது. ஏராளமான தசிரங்களைக் கொண்டது.

(3) **பரிசினைகள்.**—பரிசினைகள் பரவலாகச் சிதறிக் கிடக்கின்றன. ஒவ்வொன்றும் சக்தி வாய்ந்த சினை (நாத அணு)யை உள்ளடக்கியுள்ளன. குழந்தைப் பருவத்தில் சினைப்பையில் 1,00,000 சினைகளைக் கொண்டுள்ளன. சினைப்பை, சுகரண ரீதியாக தன் தீவிர வேலையைச் செய்யும். சக்தி வருவதற்குள் சினைகளின் எண்ணிக்கை

35,000-க்குக் குறைகிறது. இயற்கை, கூடுமானவரையில் இனப் பெருக்கத்தைப் பெரும்பாலும் இவ்வாறு அடக்கி ஆட்சி செய்கிறது போலும்! குழந்தைப் பருவம் தொடங்கி மகப்பேறு காலம் வரை (சூல் பூப்பு) பரிசினையிலிருந்து சினைகள் இடைவிடாமல் தோன்றி வளர்ந்து முற்றிக் கொண்டேயிருக்கும். பெண், மங்கைப் பருவம் (பக்குவப் பருவம்) எய்தும் காலத்திற்கு முன் சினைப்பைகள் சிறுத் தவைகளையும், அவைகளுக்குள்ளேயிருக்கும் பரிசினைகள் மிக நுண் ணியதாயுமிருக்கும். இவைகள் வளர்ந்து முற்றுவது அரிது. இவை களில் உள்ள சினை கருவாக மாறாமல் சுருங்கி அற்றுப் போகும். பெண்ணின் பூப்புக் காலத்தில் சினைப்பைகள், தசிர நிறைவு அடைந்து பரிசினைகள் வளர்ந்து பெருகி அவைகளில் உள்ள சினைகள் வளர்ந்து கருவாகத் தக்கதாக ஆகும்.



படம் 12.—பரிசினையும் சினையும்.

1. சினை.
2. பரிசினை.

வளர்ந்து கொண்டிருக்கும் பரிசினைக்குள் சினையும் வளர்ந்து கொண்டே இருக்கும். சினையைச் சுற்றி மூன்று ஆவரக விலப் படைகள் சூழ்ந்திருக்கும். அதனைச் சினை உறை என்பர். வெளி யாவரகப் படையானது மூலாவரக விலச் சமுள்ள விலசவ்வுப் படையாம். நடு உள்ளாவரகப் படைகளானது சவ்வுத் திசுப்படைகளாலானது. உள், வெளிச் சவ்வுத் திசுப்படைகளாலான சினை உறைக்குள் சினை வளருகிறது. முதிர்கின்ற காலத்தில் பரிசினைவுறைக்குள் ஓர் வகை நீர் நிரம்பும். படைகளினிடையே தசிரங்கள் ஏராளமாகவுண்டு. முதிர்ந்த பரிசினை சினைப்பையின் மேற்பரப்பை முட்டி நிற்கும். (முதிர்ந்த பரிசினையைக் கண்ணால் பார்க்கும் நிலைமையிலுள்ளது) முதிர்ந்த சினைப்பையின் வெளிப்பகுதிக்கு வந்து சுவரை

மென்மையாக்கி, பரிசினை வெடிக்கின்றது, அப்போது சினை சினைப் பையை விட்டுக் கழன்று உந்தி அறையில் விழுகின்றது. முதிர்ந்த பரிசினை இவ்வாறு சினையை வெளிப்படுத்தும் நிகழ்ச்சியைக் காமக் கிளர்ச்சி என்பர். கழன்று சென்ற சினை, சினைப் பாதையின் குஞ்சாந்தத்தால் கவ்வி உறிஞ்சப்பட்டு சினைப்பாதையை அடைகின்றது. சினைப்பாதையினூடே சென்று கருப்பை அறைக்குச் சினை செல்லும்.

**சினை.**—சினை என்பது முற்றாத பரிசினையின் மையத்திலிருக்கும் நுண்ணிய உண்டை. பரிசினை முற்ற இது பையில் மிதந்து காட்டும் பக்கத்திற்கு வந்து சவ்வுப்படலத்தோடு அணைந்து நிற்கும். இது கவுரவுறை என்னும் உருவொளியுள்ள பையும் இப்பையிற்குள்ளே அத்தோடணைந்ததாய் கவுரம் என்ற சிவப்புக் கருவும், இக் கருவுக்குள்ளே கபுடனவிலம் என்னும் சிறு உண்டையும், உண்டைக் குள்ளே கபுடனக் கண் என்னும் புள்ளியுமுடையது.

**கவுரவுறை.**—இது தடித்தும் நிறமற்றதும், உருவொளியுள்ளது மான சவ்வாகும். இதைச் சூக்கும ஆடியில் வைத்துப் பார்த்தால் உள்ளுக்கும் வெளிக்கும் கருமையான வரிகளையுடைய தெளிவுள்ள வளையம் போல் தோன்றுமாதலால் இதற்குத் தெளி வளையம் என்ற பெயரும் வந்தது. இது கருவிலுள்ள கரைச் சவ்வுக்கு ஒப்பாகும்.

**கவுரம்.**—இது சற்றே பசையுள்ள நீரும் சிற்றுண்டைகளும் அணுக்களும் சேர்ந்துண்டான உண்டை. அணுக்கள் வருண அணுக்களைப் போன்றவைகளாகும். வெளிப்பகுதிக்கு அருகில் அநேகமாயிருக்கிற பருத்த அணுக்கள் நிணவுண்டைகளைப் போன்றவைகளே. மனித சினையிற் சொற்பத் தொகையான கவுர அணுக்களுண்டு.

**கபுடன விலம்.**—இது உருவொளியுள்ள நுண்ணிய சவ்வினையும் சவ்வுக்குள்ளே நீரையும், சில வேளை இந்நீரிற் சில அணுக்களையுமுடையது. இது மிக நுண்மையாய் முற்றாத சினையிற் கவுரத்தின் மையத்திலிருக்கும். சினை முற்றிய பின் இது வெளிப்பகுதிக்கு வரும். இது கவுரத்தைப் பார்க்கத் தாமதமாய்ப்பருக்கும்.

**கபுடனக் கண்.**—கபுடன விலத்துக்குள்ளே கவுரத்தின் சுற்றுப் பக்கத்திற்கு மிக அண்மையில் அதன் வலத்திற்கிடக்கும். இது நுண்ணிய மாவு போன்றவொன்றாய் உருவொளியற்றதும் மஞ்சனிறமுமாயிருக்கும்.

**பீதகம்.**—பரிசினை வெடித்துச் சினை கழன்றவுடன் இப்பை இரத்த நிறமுள்ள நீரால் நிரவுண்டு அதன் சுற்றுப் பகுதியிற் பையின் சுவரிலிருந்தூறின பீத நிறமான உரத்தச் சத்துப் பிடிக்கும். இச் சத்துப் பரிசினையின் சவ்வுகள் இரண்டுக்கும் வெளியில் வைக்கிற தென்பது ஒரு கருத்து. பரிசினையின் வெளிக் கவசத்தின் உட்படைத் தடிப்பதால் இது உண்டாகிறதென்பது மற்றொரு கருத்து. இச்சத்து முதலிற் செங்கபில நிறமுள்ளதாயிருந்தும் அதிவிரைவில் வெளிறலாகி இறுகும். சினை கழன்ற பரிசினை ஒவ்வொன்றுக்கும் பீதகம் உண்டு. பீதகத்தின் தன்மையும் அதில் நடக்கும் மாறுதல்களும்

அதனின்று கழன்று போன சினை, கருவானதற்கும் கருவாகாததற்கும் தக்கதாகவேயிருக்கும். கலவியோ, கருத்தரித்தலோ இல்லாமற் சினை கழன்று பின்னும் சினைப்பையிற் பீதகமிருக்கும் என்பதற்குச் சந்தேகம் இல்லையாயினும் கருவுக்குரிய பீதமாகிய மெய்ப்பீதகத்துக்கும் கருவாகாத சினை கழன்ற பின்னுண்டான பொய்ப் பீதகத்துக்கும் வித்தியாசமுண்டு.

**மெய்ப் பீதகம் (சூல் பீதகம்).**—பரிசினை வெடிக்கப்பட்டதும் சினை கழன்று சினைப்பையை விட்டு வெளியேறுகிறது. சினை கழன்று பரிசினைவுறைக்குள் உதிரசலையுண்டாகிறது. அதே சமயத்தில் உள்ளாவாரகச் சவ்வுக்கவசம் தடிப்புறுகின்றது. உதிரச்சலையால் உண்டான குருதிக் கட்டிகள் தசிரபாகம் அடைகின்றன. அந்நிலையில் பீதகச்சத்தைத் தோற்றுவிக்கின்றன. இறுதியில் பீதகம் சுருங்கிச் சூலுடைமையின் பிற்காலத்திற் பலமும் களையுடைய தழும்பாகாமலும், மேலும் மெய்ப் பீதகம், தசிர ந்றைவுள்ளதாகவும் சுருக்குகள் விழுந்ததாகவும் உரப்பாகவும், பீத நிறமாகவும்மிருக்கும்.



1



2

3



**படம் 13—பீதங்கள்.**

1. பொய்ப் பீதகம்
2. மெய்ப் பீதகம்
3. எட்டாவது வாரத்தில் பீதகம்.

சூல் முடிந்ததும் மெய்ப் பீதகம் பல மாறுதல்களை அடைந்து பொய்ப் பீதகத்தைப் போலாகின்றது. பிறகு அற்றுப் போகின்றது. இப்பீதகம் சூல் முடியும் வரையில் வளர்ந்தும் பின்னும் இரண்டொரு மாதங்கள் சினைப் பையில் தங்கியிருக்கின்ற காரணத்தால் சூல் பீதகம் எனப்பட்டது.

**பொய்ப்பீதகம்**—சினைப்பையை விட்டுக் கழன்று சென்ற சினை கருவுறாவிட்டால் பரிசினை சிறுத்தும், துன்னாமலும் தழும்பும், அறையும் காட்டாமலிருக்கும். சுருக்கும் விழுந்து காட்டாது. இது மெதுவாகவும் உறைந்த இரத்தம் போலவுமிருக்கும். சினையின் அறைக்குள்ளே வசா நீரோ இரத்தமோ பொசியாததாற் பொய்ப் பீதகமுண்டாகிப் பின்பு பல மாறுதல்களை அடைந்து இறுதியில் அற்றுப்போகின்றது.

## அத்தியாயம் 5

### பூப்பு

பூப்புச் சுழற்சி என்பது மகளிரின் பிறப்புறுப்புக்களில் திரும்பத் திரும்ப ஒரே மாதிரியாக நடக்கும் நிகழ்ச்சிகளைக் குறிக்கும். உள் நடக்கும் நிகழ்ச்சிகளின் முடிவே வெளிப்படையாக, பூப்பாகக் காணப் படுகிறது. கருப்பை அறையினின்று யோனி வழியாக வெளித்தள்ளப் படும் குருதி ஒழுகலையும் அதனோடு சேர்ந்து வரும் கருப்பைச் சளிச்சவ்வையும் பூப்பு என்கின்றோம். இது மகளிரின் மங்கைப் பருவ முதற்கொண்டு ஏறத்தாழ நாற்பத்தைந்து வயது வரையில் திங்களுக் கொருமுறை திரும்பத் திரும்ப நிகழும் நிகழ்ச்சியாகும். பிள்ளை தரித்திருக்கின்ற காலத்திலும், பிள்ளை பாலுண்ணுகின்ற காலத்திலும் இந்நிகழ்ச்சி நிகழுறாது. பூப்பிற்கு உலக வழக்கில் அநேக வேறு பெயர்களுண்டு. தூரம், தீட்டு, வீட்டு விலக்கம், உடல் நலக் குறைவு, மாத விடாய், சாபம், சூதகம் என்றெல்லாம் வழங்கப்படுகின்றன. இவ்விதமாக வேறு பெயர்கள் உலகெங்கும் அவ்வம் மொழிகளுக் கேற்ப வழங்கப்படுகின்றன.

முதற் பூப்படைதலே மகளிர் மங்கைப் பருவம் அடைந்தனர் என்பதைக் குறிக்கும். ஒருத்திகருப் பிள்ளைப்பேறு எய்துவதற்கான வளர்ச்சிகள் ஏற்பட்டுவிட்டன என்பதை உணர்த்தும் நிகழ்ச்சியே பூப் பாகும். பூப்படையும் வயது ஒவ்வொருவருக்கும் தேக, கால, தேசங் களைப் பொறுத்து வித்தியாசப்படுகின்றன. மேனாட்டில் 11 வயது முதல் 15 வயது வரையுள்ள மகளிர் பூப்படைகின்றார்கள். நம் நாட்டில் 13 முதல் 18 வயது வரையில் பூப்படைகின்றனர். சிறுபான்மை யினராக 9 முதல் 13 வயது வரை பூப்படைகின்றனர்.

மங்கையர்களுக்கு பூப்படைந்தது முதற்கொண்டு உடலிலும் உள்ளத் திலும் அநேக மற்ற மாறுதல்களும் நிகழ்கின்றன. கூபகம் பெருத்து வளரும். புறப் பிறப்புறுப்புக்கள் பருத்து வளரும். மேகனத்திலும் அக்குளிலும் மயிர் வளரும். கொங்கைகள் (முலைகள்) வளரும். அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு முதலிய குணங்கள் தோன்றும். இக் குணங்கள் மெல்ல மெல்லத் தோன்றி இருபது வயதிற்கு முதிர்ச்சியடையும். பூப்படைதலைத் தக்க காலத்தில் திடீரென்று காணலாம். சிலருக்குத் தலைவலி, குமட்டல், அடிவயிற்று வலிகள் போன்ற சிற்சில உடல் நலிவுகள் சில மாதங்களாகக் கண்டதன் பின்னர் பூப்படை வார்கள். இக்காலங்களில் மங்கையர்களின் உடல் நலத்தை மிகுந்த கவனமாகப் பராமரிக்கவேண்டும்.

**கடை பூப்பு அல்லது பூப்பு முடிவு** :—திரும்பத் திரும்ப மகளிர்க்கு நடந்த பூப்பு நிகழ்ச்சிகள் முழுமையும் நின்ற காலத்திற்குப் பூப்பு முடிவு எனப்படும். அதனை மகளிரின் பருவமாறுதல் என்பர். சாதா ரணமாக நாற்பது வயது முதல் ஐம்பது வயது வரையில் முடிவு பெறும். அநேகமாக நாற்பத்தைந்து வயதிற்கு பிறகே முடிவுறும். நாற்பது வயதிற்கு முன்னர் முடிவு பெறுவது அரிது. பூப்படைதலுக்கும் பூப்பு முடிவுக்கும் உள்ள இடைக்கால ஆண்டுகளை மதிப்பிட்டுக்கூற முடியாது. ஆனால், எவ்வளவுக்கெவ்வளவு அதிக விரைவில் பூப்

படைகின்றார்களோ அவ்வளவுக்கவ்வளவு பிற்பட்டு பூப்பு முடிவடைகின்றது. பூப்பு முடிவு காலங்களில் மகளிரின் உடல் நலங்கள் பாதிக்கப்பட்டு அநேக மாறுதல்கள் தோன்றுகின்றன. இம் மாறுதல்களுக்குச் சினைப்பை உள்ளிடைச் சுரப்பியின் நிறுத்தமும் கருப்பையினிடமிருந்து வெளிப்படும் குருதி ஒழுகலின் நிறுத்தமும் காரணமாகலாம். முக்கியமாக மனதைப் பற்றிய கோளாறுகளும் இரத்தாசயம், அன்னாசயம், நரம்பாசயம் போன்ற கோளாறுகளும் காணலாம், பூப்பு முடிவு திடீரென்றோ அல்லது மெல்ல மெல்லவோ முடிவுறும். பூப்பு முடிவு எய்தியதும் பிறப்புறுப்புக்கள் முதுமைக்குரிய மாறுதல்களையடைகின்றன. பிறப்புறுப்பின் உள்ளுறுப்புகள் சுருங்கிவிடுகின்றன. கொங்கைகள் தளர்ந்து சுருங்குகின்றன. தூல சரீரம் ஏற்படும். சிலருக்கு முகத்தில் மீசை, தாடி மயிர்களும் வளரும்.

இக் காலங்களில் மகளிரின் உடல் நலத்தை கூர்ந்து கவனிக்க வேண்டும். சுகாதார விதிகளை வலியுறுத்தல் வேண்டும். பூப்பு முடிவு எய்தி சிலமாதங்களுக்குப் பிறகு மறுபடியும் குருதி ஒழுக்குத் தோன்றினால் அம்மகளிரை மிக்ககவனத்துடன் பரிசோதனை செய்வது அவசியமாகும். பூப்பு முடிவு ஏற்பட்டுவிட்டது என்று நிர்ணயமாகி விட்ட பிறகு, குருதி ஒழுக்கு ஏற்படுகின்ற மகளிரின் கருப்பையில் புற்று நோய் உண்டாகியுள்ளது என்று கருதவேண்டும். கருப்பை புற்று என்று நிதானித்து விட்டால் உடனடியாக மேற்கொண்டு அறுவைப் பரிகாரம் செய்வதற்கு ஆயத்தப்படுத்த வேண்டும். அதனால் மகளிரின் வாழ்க்கையை நீடிக்க வைக்கலாம். புற்று நோய்க்கு நிரந்தரப் பரிகாரம் இல்லையென்றாலும உடனடியாகப் புற்று நோயை நிதானித்து அறுவைப் பரிகாரம் செய்வதன் மூலம் மகளிரின் ஆயுள் காலத்தைச் சற்று நீடிக்கவைக்கலாம்.

**பூப்பு வகை**—பூப்புச் சுழற்சியின் இடைக்காலத்தைப் பூப்பு வகை என்பர். ஒரு பூப்படையும் ஆரம்ப நாளிலிருந்து அடுத்து வரும் பூப்படையும் ஆரம்ப நாள் வரையும் கணக்கிடும் நாட்களே பூப்பு வகை எனப்படும். இடைக்கால கணக்குகள் வித்தியாசப்படுகின்றமையால் பிரிவுகள் ஏற்பட்டுள்ளன. சிலருக்குப் பொதுவாக இருபத்தெட்டு நாட்களுக்கொரு தரமும், வேறு சிலருக்கு முப்பது நாட்களுக்கொரு தரமும் மற்றும் சிலருக்கு இருபத்தொன்று நாட்களுக்கொரு தரமும் பூப்புச் சுழற்சி உண்டாகின்றன. வழக்கில் இருபத்தெட்டு நாட்களுக்கொரு தரம் பொதுவாக நடக்கின்றது. ஆனால் மேற்சொன்ன மற்றவைகளை அசாதாரணம் என்று கொள்ளக்கூடாது. மேற்சொன்ன மூன்று வகைகளும் ஒவ்வொருவருககும் வாழ்க்கை கூடிய மட்டும் ஒரே சீராக நடைபெறுமானால் அவர்களின் உடல் நலம் சுகமெனக்கொள்ளலாம். மாறுபட்டு நடக்குமானால் உடல்நலக் குறைவென்றும் தாதுக் குற்றங்கள் ஏற்பட்டுள்ளனவென்றும் கருதவேண்டும்.

**பூப்பு நடக்குங் காலம் (பூப்புக் காலம்)**—குருதி ஒழுகல் நாளிலிருந்து குருதி நிற்கும் நாள் வரைக்கும் கணக்கிடுவதை பூப்புக்காலம் என்பர். சராசரி பெரும்பாலும் பொதுவாக ஐந்து நாட்கள் நடக்கும். இந்நிகழ்ச்சியானது மிகவும் ஒவ்வொருவருக்கும் வித்தியாசப்படுகின்றது. சிலருக்குச் சில மணிநேரமே கண்டு மறையும். சிலருக்கு எட்டு நாட்கள் அல்லது பத்து நாட்கள் வரை நடக்கும். எனினும் இரண்டு நாட்களுக்கு உட்பட்டும் எட்டு நாட்களுக்கு மேற்பட்டும் நடந்தால் விபரீதம் என்று கொள்ளவேண்டும். பூப்புக்காலம் வெப்பதேசங்களில் அதிகரித்தும், குளிர்

தேசங்களில் குறைந்தும் ஆடம்பர வாழ்க்கையும், காமத்தை தூண்டும் உணவுப் பொருள்களை அதிகம் புசிப்பதாலும் அதிகரிக்கும். காமக் கிளர்ச்சி, காமப் பழக்க வழக்கங்களில் எண்ணம் செல்வதாலும் அதிகரிக்கும்.

**பூப்புத் தடை (பூப்பு மறைவு - சூதகத் தடை):**—பூப்பு அடைந்த காலம் முதல் பூப்பு முடிவு வரையிலுள்ள காலத்தில் பூப்பு வராமல் தடைப் பட்டாலும், நின்றாலும், மறைந்தாலும் அதற்குப் பூப்புத் தடை அல்லது பூப்பு மறைவு எனப்படும். 'பூப்பு மறைவு பிள்ளைப்பேறு காலத் தின் ஆரம்ப முதற் குறியாக விளங்குகின்றது' பிள்ளைப்பேறு காலம் முழுமையும் பெரும்பாலும் அநேகருக்குப் பூப்பு மறைவு அவசியம் காணப்படும். சிலருக்குக் குழந்தை பாலுண்ணும் காலம் வரைக்கும் நீடிக்கும்.

**இடைப் பூப்பு :**—பூப்புச் சுழற்சியின் இடை இடையே காணும் பூப்புவே இடைப் பூப்பு எனப்படும்.

**பெரும்பாடு**—பூப்புக் காலங்களில் அதிக அளவாகவும் அபரிமித மாகவும் காணும் பூப்புவை பெரும்பாடு என்றழைப்பர்.

**பூப்பு வலி (சூதக வலி)**—வலியோடு கூடிய பூப்புவே பூப்பு வலி எனப்படும்.

**வெள்ளைப்படுதல் (வெள்ளை)**—குருதியில்லாமல் யோனி வழியாகச சீழ் போன்று வெளிவரும் கசிவை வெள்ளைப்படுதல் என்பர். பொது வாக "வெள்ளை" எனப்படும். வெள்ளை ஒழுக்கு என்றும் கூறுவர்.

**பூப்புச் சுழற்சியின் நிகழ்ச்சிகள்**—இக்கால அறிவியல் அறிஞர்களால் கண்டு கூறப்பட்டுள்ள பூப்புச் சுழற்சியின் நிகழ்ச்சிகளைப் பின்வருமாறு கவனிப்போம்:—

பூப்புச் சுழற்சி காலத்தில் கருப்பையின் உள் கவசத்தில் நடக்கும் மாறுதல் நிகழ்ச்சிகளை நான்கு பிரிவுகளாகப் பிரிக்கின்றனர். அவை யாவன.—(1) தடிப்புறும் காலம், (2) சுரப்புக்காலம், (3) பூப்புக்காலம், (4) மறுமலர்ச்சிக்காலம்.

(1) **தடிப்புறும் காலம்.**—பூப்பு அடைந்து மறுமலர்ச்சி பெற்று முடிந்ததும் சளிச் சவ்வு தடிப்புற ஆரம்பிக்கின்றது. இது காமக் கிளர்ச்சி தோன்றும் வரையில் நீடிக்கும் அதாவது பூப்படைந்த நாளிலிருந்து சராசரி பதினைந்து நாட்களாகும். முன்பு கூறியுள்ள கருப்பையின் உள் கவசத்தைப் போலவே அமையும். ஆனால் தடித்தும் கனத்தும் காணும். கடைசியில் சுரப்பிக் கோளங்கள், வளைந்து வளைந்து காணும். தசிரங்கள் தஞ்சன்முற்று அவைகளில் சிறு பிளவுகள் ஏற்படுகின்றன. அதனால் குருதி கொஞ்சம் கொஞ்சமாக கசிய ஆரம் பிக்கின்றன. இதனைக் "காமக்கிளர்ச்சி குருதி ஒழுகல்" என்பர்.

(2) **சுரப்புக் காலம் :**—பூப்புத் தொடங்கிய பதினைந்தாம் நாளிலிருந்து மறு பூப்பு ஆரம்பிக்கின்ற நாள் வரையில் நடக்கின்றது. இக்காலத்தில் சளிச்சவ்வு ஆவரகப்படையிலும், தசிரங்களிலும், சுரப்பிக் கோளங்களிலும் மாறுதல்கள் அடைகின்றன. இம்மாறுதல்களினால் சளிச்சவ்வு மிகவும் தடித்தும் புடைத்தும் கனத்தும் நிற்கும். சளிச்சவ்வின் ஆவரக விலங்கள் பெரிதாகி ஒன்றோடொன்று நீர்க்கோர்த்த வீக்கத்தினால் பிரிந்து காணப்படும். வெண் விலங்கள் இவ்விடத்திற்கு விரைந்துவரும் கூட்டங்களும் காணலாம்.

முதல் வாரத்தில் கோளங்கள் நீட்டியும் விரிந்தும் மிகவும் வளைந்து வளைந்து கோணுறும். பிற்பகுதி காலத்தில் ஆவரக விலங்கள் தொழிலில் மிகவும் ஈடுபடும். இந்த இரு ஆவரகவில் மாறுதலும் கோளங்கள் மாறுதலும் முக்கியமாகச் சளிச் சவ்வின் வெளிப்படை நடுப்படைகளில் காணலாம். உள்படை உள்ளபடியே எவ்வித மாறுதலுமின்றிக் கிடக்கும். ஆகையால் இப்படைகளை இக்காலங்களில் வெகு சுலபமாக வேறு பிரித்துவிடலாம். தசிரங்கள் சளிச்சவ்வில் மிகவும் சஞ்சயமுறுகின்றன. கடைசியில் சஞ்சயமுற்ற தசிரங்களிலிருந்து கசிவும், ஆவரக விலங்களில் நீர்க்கோர்வை வீக்கமும் வெண் வில வருகையுமான மாறுதல்கள் நிகழ்கின்றன.

மேற்சொன்ன மாறுதல்கள் சளிச் சவ்வை கனக்கச் செய்கின்றன. பார்வைக்குச் சிவந்தும், சஞ்சய முற்றும் மிகவும் தளதளவென்று சளிச்சவ்வு காணப்படும். இம்மாறுதல்கள் அடைய ஏறக்குறைய பதின் மூன்று நாட்கள் ஆகின்றன.

(3) **பூப்புக் காலம் :**—பூப்புக் காலம் பொதுவாக நான்கு அல்லது ஐந்து நாட்களுக்கு நீடிக்கும். இக் காலத்தில் சளிக் கவசத்தின் மேற்பரப்பு நசிவுற்று, சளிச் சவ்வும் இரத்தமும் கலந்து கருப்பையினின்று வெளிப்படும். சளிக் கவசத்தின் அடிதளத்தில் உள்ள தந்துகிகளும், சிறு சிறு நாடிகளின் தசைகளும் நசைப்படுகின்றன. இதனால் சின்னஞ் சிறு இரத்த ஏரிகளாகச் சளிக் கவசத்தின் மேற்பரப்பின்கீழ்க் காணப்படும். இவ்வாறு தந்துகிகளின் சுவர்களும் சின்னஞ் சிறு நாடிகளின் சுவர்களும் குவிந்தும் விரிந்தும் இரத்தத்தைச் சளிக் கவசத்தின் மேற்பரப்பின்கீழ் சின்னஞ் சிறு தட்டையான ஏரிகள் அநேகம் ஏற்படுவதால் சளிக் கவசம் பேசிக் கவசத்தினின்றும் பிரிக்கப்பட்டுச் சின்னா பின்னமாகக் கருப்பை அறையினுள் தள்ளப்படுகிறது. ஆகவே சளிக் கவசத்தின் மேற்பரப்பு இரத்தம், நசைந்த சளிச் சவ்வுத்துகள்கள் ஆகியவைகள் கருப்பையினின்று வெளித்தள்ளப்படுகின்றன. சாதாரணமாகப் பூப்படையும் காலத்தில் வலி உண்டாகாது. குருதி, கட்டிப்போதலும் கிடையாது. அது கருஞ்சிவப்பாகவோ அல்லது செஞ்சிவப்பாகவோ காணப்படும். சிறிது துவர்த்து உவர்ப்பாயும் இருக்கும். துர்நாற்றம் உண்டு. அளவு 120 மி.லி.—200 மி.லி. ஆகும்.

(4) **மறுமலர்ச்சி காலம்:**—சளிச் சவ்வுக் கவசத்தின் மேல்தளம் வேறு ஒன்று தோன்றி கருப்பை அறை முழுவதும் பரவி எப்பொழுதுமிருப்பதுபோல் தோன்றும். இவ்வாறு உண்டாகிய மேல்தளம் சளிச்

சவ்வுக் கவசத்தில் அடித்தளந்தான் காரணமாகிறது. தன் சுய வல்லமை யினால் ஆவரக வில் இனப்பெருக்கத்தை ஏற்படுத்தி மேல் தளத்தை நிரப்புகிறது. இவ்வாறு இபண்டொரு நாட்கள் நடக்கும். மிகுதி இரத்தம் இருந்தால் நாடிகள் உறிஞ்சிக் கொள்கின்றன.

பூப்பு நடக்கின்ற காலத்தில் மகளிர்கள் சில பொது குறி குணங்களை அனுபவிக்கின்றனர். பெரும்பாலும் உடல் பருத்துக்காணும். சோம்பல், உளைச்சல், மந்தம் ஆகியவைகள் ஆரம்பத்தில் காணப்படும். கருப்பு வளையக் கோடுகள் கண்களைச் சுற்றியோ அல்லது கீழ் இமைகளுக்குக் கீழிலோ காணப்படும். நரம்பு சம்பந்தமான கோளாறுகள் காணலாம். சிலர் சினங்குவார்கள். எரிச்சல் கொள்வார்கள். மற்ற நோய்வாய்ப்பட்ட வர்கள் பூப்புக் காலத்தில் அந்நோயினால் மிகவும் பெரிதும் பாதிக்கப்படுவர்.

உடற் காங்கையும் விகற்பப்படுகின்றது. முற்பகுதியின் உடல் காங்கை பிற்பகுதி உடற்காங்கையைவிட, குறைந்து காணும். பிற்பகுதியில் உடற்காங்கை பூப்புத் தோன்றும் வரையில் மிகுந்து காணும். இடையில் அதிகரித்த உடற் காங்கை காமக் கிளர்ச்சிக்கு ஏற்ப தோன்றியுள்ளது என்று அறியவும். பிற்பகுதியில் உடற் காங்கை பீதகழுப்பூவின் செய லினால் நீடிக்கச் செய்கிறது என்று நம்பப்படுகிறது.

சில மகளிருக்கு முகம் அதைத்துக் காணும். விரல்கள் வீக்கமுறும், மேற்சொன்ன குறி குணங்களும் தென்படும். இவை "பூப்பு முற்குறி கள்" எனப்படும். இவைகள் அதிகரித்துத் தோன்றினால் பூப்புக் காலத் திற்கு ஒரு வாரத்திற்கு முன்பு உப்புகளான பேதி மருந்து கொடுத்தல் வேண்டும்.

பரிகார முறையில் பூப்புக் காலத்தை மூன்று பிரிவுகளாகப் பிரிக் கலாம். (1) சளி விழல்—குருதி ஒழுகளுக்குச் சில மணி நேரத்திற்குமுன் சளி போன்ற பிசு பிசுத்தக் கசிவு வெளித்துள்ளல். (2) சளி விழுதலுக்கு உடனடியாகத் தொடர்ந்து குருதி ஒழுகுதல். இது இரண்டு முதல் ஐந்து நாட்கள் வரை நிகழும். (3) குருதி ஒழுகல் குறைதல்—குருதி ஒழுகல் உச்சக் கட்டத்தை அடைந்த பிறகு மெல்ல மெல்ல, படிப்படியாகக் குறைந்து கொண்டே வரும். கடைசியில் பிசு பிசுத்த சளிக் கசிவு முன் போல் ஏற்படும். இது இரண்டு அல்லது மூன்று நாட்கள் வரை நடக்கும். இத்துடன் பூப்புக் காலம் பூர்த்தியாகி விடுகின்றது.

**பூப்பிற்குக் காரணங்கள்:**—பூப்படைதலைப்பற்றிப் பண்டைக் காலத்தில் வெகு விநோதமாகக் கூறப்பட்டுள்ளது. இன்றைய அறிவியல் அறிஞர் கள் பண்டைக் கால கருத்துக்களையும் கொள்கைகளையும் மூட நம்பிக்கை என்றும், விநோதக் கொத்து என்றும் அறிவுரைக்கிறார்கள். பூப்பைப் பற்றி பாமர மக்கள் கொண்டுள்ள கருத்துக்களும் இற்றைக் காலத்திற்குப் புரியா வண்ணம் இருக்கின்றன. பழக்க வழக்கங்களும் அவ்வாறே. அவைகளைப்பற்றி ஆராய்வதும் ஆராய்ந்து கூறுவதும் பயனற்றதாக முடியும். எனவே இன்றைய அறிவியல் அறிஞர்கள் கூறுவதைக் கவனிப்போம்.

பூப்பிற்குக் காரணங்கள் இரண்டு உள்ளன.—(1) சினைப்பையின் இச்சையும் அதன் சினைப்பை முப்பூவும், (2) கருப்பை அறையின் சளிச்சவ்வின் மேல், சினைப்பை முப்பூவின் ஆட்சி. இம்முப்பூவின் ஆட்சி குருதி மூலமாகக் கருப்பையினூடே சம்பந்தப்படுத்துகிறது. பிறப்பு உறுப்புகளின் உள்ளிடைச் சுரப்பிக் கோளங்களைப்பற்றி பெருவாரியாக அநேக அறிவியல் அறிஞர்கள் ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளனர். ஆராய்ச்சியாளர்கள் தாங்கள் கண்ட முடிவைக் கட்டுரையாக எழுதியுள்ளனர். அப் புத்தகங்களில் குழப்பத்தை விளைவிக்கும்படியான தாங்கள் கண்ட காரணப் பொருளுக்கு அநேகமான பெயர்களை ஈந்துள்ளனர். அப்பெயர்கள் மருத்துவ வாசகர்களுக்குக் குழப்பத்தை உண்டுபண்ணுகின்றன. ஒருவர் கூறியதற்கு மாறாக மற்றொருவர் விகற்ப முறுகின்றனர். பொதுவாக நோக்கினால் பூப்பவதற்குரிய காரணங்களை அறிய ஏதுவாகிறதே ஒழிய அதன் ஆராய்ச்சி தடுமாற்றமாகவே உளது. இன்னும் மறை பொருளாகவே உளது. மேலும் இதனை ஆராய வேண்டும் என்ற நிலையிலுமுள்ளது.

சினைப் பைகள் இருவித முப்பூக்களைச் சுரப்பிக்கின்றன. ஒன்று முதிர்ந்த பரிசினைகளினின்று தோன்றியது. மேலும் பீதகத்தினின்று சுரப்பிக்கப்படுகிறது, இவ்வுள்ளிடைச் சுரப்பிகளின் சத்துக்களைச் சினைப்பை முப்பூ என்பர். இம் முப்பூக்களைக் கர்ப்பிணியின் அமரி நீரினிற் காணலாம். ஆனால் தனிப்பட்டிராமல் மற்ற காரசாரங்களோடு கலப்புற்றிருக்கும். நாற்கால் பிராணிகளில் இது காமக் கிளர்ச்சியை உண்டாக்கிப் பிறப்புறுப்புகளில் காங்கையை ஏற்படுத்துகின்றது. மகளிர்க்குக் கருப்பைச் சளிச் சவ்வின் சஞ்சயத்தையும் கருப்பையையும் பெருக்கச் செய்கிறது. சளிச் சவ்வைத் தடிப்புறச் செய்தும் தள தளவென்று கணக்கவுஞ் செய்யும். காமக் கிளர்ச்சி முடிந்ததும் வெடித்துப் பரிசினைப் பீதகமாக மாறுகிறது. இப்பீதகம் சினைப்பை முப்பூவை மேலும் தொடர்ந்து சுரப்பிக்கச் செய்கிறது. நிற்க, பீதகம் மற்றொரு இரண்டாம் முப்பூவைச் சுரப்பிக்கிறது. அது பீதகமுப்பூ எனப்படும். இதுவும் கர்ப்பிணி அமரி நீரில் காணலாம். பீதக முப்பூ கருப்பையின் சளிச் சவ்வைச் சுரப்புக் காலத்தில் ஆட்சி செய்கிறது. இதனுடைய சளிச் சவ்வின் ஆட்சி கருப்பைக்கு வருகின்ற கருவுற்ற சினையைப் பதிய வைக்கின்றது. ஆராய்ச்சித் துறையில் சினைப்பையின் கிரியை ஊக்குவிப்பது முன் சுவலி உள்ளிடைச் சுரப்பிக் கோளமேயாகும். கண்ணுக்குக் காணமுடியாத இடமாகிய கபாலத்துள், இது சிறிய மிக்க உன்னதமான கோளமாக விளங்கும். சுவலி அநேக முப்பூக்களைச் சுரப்பித்து உடலிலுள்ள மற்றைய உள்ளிடைச் சுரப்பிக் கோளங்களை ஆட்சி செய்கிறது. சாதாரணமாக, பிருகோபரி, வீதன கோளம் ஆகியவைகளின் செயல்களை ஊக்குவிக்கும் முப்பூச்களைச் சுரப்பிக்கின்றது. பிறப்புறுக்களின் கோளங்களாகிய விந்துப்பை (பீசம், விதை), சினைப்பை, சினைப்பையிலுள்ள பரிசினைகள், பீதகப்பைகள் ஆகியவற்றை ஊக்குவிக்கும் முப்பூக்களையும் சுவலிக்கோளம் சுரப்பிக்கின்றது. பொதுவாகப் பிறப்புறுப்பின் 'ஊக்குவி முப்பு'' எனப்படும். இதனில் (1) பரிசினைகளை முதிரவைக்கும் முப்பூ, (2) பீதகப் பையை ஊக்குவிக்கும் முப்பூ என இருவகை உண்டு. இவ்விருவகை முப்பூக்கள் காமக் கிளர்ச்சிக்கு முன்னும் பின்னும் இன்றியமையாத் தேவைப்படுகின்றன. (3) பீதகப் பையை வளர்விக்கவும் அதன் கிரியையை ஊக்குவிக்கவும் அதன் முப்பூவையும் சுரப்பிக்கச் செய்கிறது. கர்ப்பிணியின் கொங்கைகள் விம்மிப் பெருக்கின்றன. பால் சுரப்பிக்கத் தூண்ட வைக்கின்றது.

இப்பொழுது, கருப்பையில் நடக்கும் பூப்புச் சுழற்சியையும் சினைப்பையில் நடக்கும் சினைப்பை முப்பூக்களின் சுழற்சியையும் கவனிக்க வேண்டும். இன்றைய அறிவியலறிஞர்கள் 'காமச் கிளர்ச்சி', பூப்பு ஆரம்பித்த 12-வது, 16-வது நாட்களில் ஏற்படுகிறதென ஒரே ஒழுங்காகக் கூறுகின்றார்கள். இதனைப் பன்னிரண்டாவது நாளிலிருந்து கவனிப்போம்.

(1) சினைப்பையில் பீதகம் ஏற்பட்டு 14 நாட்களாக வளரும். வேப்பங்கொட்டை அளவு வளரும்.

(2) கருப்பை அறையில் இதே காலத்தில் சளிச் சவ்வு, தடிப்புறுங் காலமாகும். பரிசினையிலிருந்து விடுபட்ட 'சினை' கருப்பைக்குள் சினைப் பாதை மூலமாக ஊர்ந்து பயணம் செய்கின்றது. இதன் பயணம் ஏறத்தாழ எட்டு நாட்கள் ஆகின்றன, சினை, கருப்பை அறையைச் சென்றடைகின்ற காலத்தில் கருப்பையின் சளிச் சவ்வுத் தடிப்புற்றும், சஞ்சயமுற்றும் தளதளத்தும் காணும். மேலும் சுரப்புக் காலத்தின் ஆரம்ப நிலையிலிருக்கும். இதுதான் கருவுற்றச் சினையைச் சளிச் சவ்வில் பதிவுருவதற்குத் தகுந்த சூழ்நிலையாகும்.

இப்பொழுது இங்குக் கவனிக்கவேண்டிய முக்கிய கட்டம் உளது. சினை அதன் பயணத்தில் விந்துவோடு கூடி கருவுற்றதா, இல்லையா? என்று கவனிக்க வேண்டும்.

(அ) சினை, கருவுறாவிட்டால் கீழ்க்கண்ட மாறுதல்களை அடையும்:—

(1) சினைப்பையில் பீதகம் சுருங்க ஆரம்பிக்கும்; சிறுத்துப் பொய்ப் பீதகமாகும்.

(2) கருப்பையில் தடிப்புற்ற சளிச் சவ்வுக் கவசம் சின்னா பின்னமாக்கப்பட்டுக் குருதி ஒழுகல் ஆரம்பிக்கும்.

(3) சினையும் குருதி ஒழுகலோடு வெளித்தள்ளப்படும்.

இந்நிகழ்ச்சி சர்வ சாதாரணமாக நடக்கின்றது. எனவே கருத்தரிக்காமல் பூப்படையும்.

(ஆ) சினை கருவுற்று, சினை கருவாக இருப்பின் கீழ்க்கண்ட மாறுதல்களை அடையும்.—

(1) சினைப்பையில் பீதகம் சுருங்காமல் மெய்ப்பீதகமாகத் தொடர்ந்து வளரும்.

(2) தடிப்புற்றுச் சளிச் சவ்வில் கருவைப் பதிய வைப்பதற்கு ஏற்ற ஆவரகவில மாறுதல் மீணசெயல்களைப் பீதக முப்பூவினால் ஊக்குவிக்கும்.

(3) கருசினையைத் தானாகவே தடிப்புற்ற சளிச் சவ்வினூடே புதைத்து வைத்துக்கொள்ள ஆரம்பிக்கிறது.

இந்த நிகழ்ச்சிகளுக்குப் பிறகு தொடர்ந்தாற் போல் நாற்பது வாரங்கள் கருசினை மனிதவுருக் குழந்தையாக வளருகிறது. மகப்பேறு நடந்து பாலூட்டுங்காலம் வரை பூப்புவும் காமக் கிளர்ச்சியும் இல்லாமல் இருக்கும்.

கருவுற்ற சினையைத் தடிப்புற்ற, சளிச் சவ்வினுள் பதியவைக்காத போது கருப்பையில் குருதி ஒழுகல் எற்பட்டு வெளித்தள்ளப்படுதலே பூப்பு எனப்பட்டது. பூப்படைந்தால் சினை கருவடையவில்லை என்பதை விளக்கும். கருத்தரிக்காதவர்கள் பூப்படைந்து கொண்டே இருப்பார்கள். பூப்படைவதற்கு முதற்காரணம் சுவலி முப்பூக்களில் ஒன்றாகும். துணைக் காரணம் சினைப்பை முப்பூவாகும். ஆனால் சுவலி முப்பூவை ஊக்குவிக்க எது எதுவாய் உளது என்று இன்னும் தெரியவில்லை. ஆனால் சிலர், கிழ்ப்பார்வைத் தளம் சுவலியை ஊக்குவிக்கின்றது என்று கூறுகின்றார்கள். முடிவாக மகளிரின் வளர்சிதை மாற்றமே பூப்பிற்குச் சிறப்பான, தனிமையான காரணமென்று கூறுகிறார்கள்.

# பிரிவு இரண்டு

## அத்தியாயம் 6

### பூப்புக் கோளாறுகள்.

1. **பூப்புத் தடை.**—வேறு பெயர்கள்: சூதகத் தடை; சூதகச் சிக்கல்; சூதக வாயு என்பனவாம். ஒழுங்காக நடந்துகொண்டேயிருக்கும் ஒரு பூப்பு நிகழ்வோ, சில நிகழ்வுகளோ காணாமலிருக்குமேயாயின் சூதகத்தடை எனப்படும்.

சூதகத் தடை, குறி குணமாகுமே தவிர நோயாகாது. இது பெரும்பாலும் சூலின் சுகரணக் கிரியையேயாகும். சூதகத் தடை குகரணக் கிரியையானால் அதற்கு பிறப்புறுக்களே முக்கிய காரணமாகின்றன. அக்காரணத்தை இரு வகையாகக் கொண்டுள்ளனர். அவை (1) எந்த வயதிலுமே பூப்படையாமலிருப்பது, (2) பூப்பு நிகழ்வுற்று நடக்காமலிருப்பது. எனினும் சூதகத் தடை கீழ்வருமாறு பிரிக்கப்பட்டுள்ளது:—

1. போலி சூதகத் தடை.
2. மெய்ச் சூதகத் தடை (சுகரண)—
   (1) மங்கைப் பருவத்திற்கு முன்பு
   (2) சூல் காலங்களில்
   (3) பாலூட்டும் காலங்களில்
   (4) பூப்பு முடிவுக்குப் பின்.
3. மெய்ச்சூதகத் தடை (குகரண)—
   (1) பிறவிக் குறை
   (2) உள்ளிடைச் சுரப்பிக் கோளாறுகள்
   (3) பிறப்பு உறுப்புகளின் அழிவுகள்—
      (1) சிறப்பு நோய்கள்
      (2) அறுவை
      (3) "எக்ஸ்ரே" கிரணங்கள்
      (4) பொது நோய்கள்.

### போலி சூதகத் தடை.

இதில் பூப்புக் கசிவு பிறப்புறுப்பின் பாதையில் தேக்கப்படுவதாகும். பெரும்பாலும் பிறப்புறுக்கள் போதுமான அளவில் வளராமலிருப்பதாலும் அல்லது அவைகள் வளரக்காணாமையாலும் சூதகத் தடை நிரந்தரமாகவுள்ளது.

## மெய்ச் சூதகத் தடை.

சுகரணக் கிரியையால் சாதாரணமாக மங்கைப் பருவத்திற்கு முன்பும், சூல் காலங்களிலும், பாலூட்டும் காலங்களிலும் சராசரி எழுபது விழுக்காடு சூதகத் தடை நிகழ்கிறது. சூதக முடிவுக்குப் பிறகும் சூதகத் தடை காணப்படும்.

(1) **மங்கைப் பருவத்திற்கு முன்.**—பொதுவாக 12 வயது அல்லது 14 வயதில் பூப்பு நிகழ்ச்சி ஆரம்பமாகிறது. அபூர்வமாக, சில குழந்தைகளுக்குப் பூப்பு நடந்துள்ளதை அறியமுடிகின்றது. சுகரணச் சூதகத் தடையானது வயது, பரம்பரை, நாடு, காலம், உணவு ஆகியவைகளைப் பொருந்தி முடிவடைகிறது. சுமாராக நாற்பதாவது வயதில் முடிவடைகிறது.

(2) **சூல் காலங்களில்.**—சூலில் நாற்பது வாரங்கள் வரையில் சூல்தடை சாதாரணமாக நீடிக்கிறது. எனினும் சூலின் முதல் பன்னிரண்டு வாரங்களில் பூப்பு நிகழ வாய்ப்புள்ளது. பெரும் பாலானோருக்குச் சூதகத் தடை நாற்பது வாரங்களுக்கு நீடிக்கும்.

(3) **பாலூட்டும் காலங்களில்.**— பாலூட்டும் காலங்களில் சூதகத் தடை நிகழ்கிறது. பாலூட்டுவதை நிறுத்தியவுடன் பூப்பு ஆரம்பமாகிறது. முப்பது விழுக்காடு பாலூட்டும் காலங்களில், பூப்பு ஆரம்பமாகிறது என்பதைக் கண்டுள்ளனர். ஏன் பெரும்பாலானோருக்குப் பாலூட்டும் காலங்களில் சூதகத்தடை ஏற்படுகிறது? மற்றவர்களுக்கு ஏன் இல்லை? என்ற காரணம் இன்னும் புரியவில்லை.

(4) **பூப்பு முடிவுக்குப் பின்.**—பூப்பு முடிவானது சினைப்பையில் பரிசினைகளில் சுகரணக் கிரியை முடிந்து விட்டதான காரியமாகும். ஆகவே சூதகத் தடை ஏற்பட்டுள்ளது என்றெண்ண வேண்டும். எனினும் பரிசினைகளின் சுகரணக் கிரியை நின்றுவிட்டாலும் சில சமயம் பரிசினைகளை ஊக்குவிக்கும் சத்துக்கள் பாய்வதால் பூப்பு முடிவுக்குப் பின் குருதிக்கசிவு ஏற்படுவதுமுண்டு. இதனைப் பூப்புக கசிவு என்று கொள்ளலாகாது. பூப்பு முடிவுக்குப்பின் நிகழும் குருதிக் கசிவைப் பெரும்பாடு என்று யூகிக்க வேண்டும்.

பெரும்பாலானோருக்குப் பூப்பு முடிவு காலங்களில் பூப்புக் கசிவு படிப்படியாக நின்றுவிடும். ஆகவே பூப்பு முடிவு குறி குணங்களில்லாமலிருக்கும். பூப்பு முடிவு சூதகத் தடை அநேகருக்கு நாற்பத்தேழு வயது முதல் ஐம்பத்திரண்டு வயது வரையிலும் நிகழும். இவ்வயதிற்கு முன்னும் நடக்கலாம்.

## குகரணச் சூதகத் தடை

**பிறவிக் குறை.**—பிறப்புறுப்புக்களில் பிறவிக் குறைவு ஏற்பட்டதால் நிகழும் சூதகத் தடை அபூர்வமானதாகும். எனினும் பிறப்புறுப்புக் களில் பிறவிக்குறை ஏற்பட்டதால் சூதகத் தடை நிகழ்கிறது என்று உணரவும்.



படம் 14—இரு யோனிகள்



படம் 15—யோனி அடைப்பான



படம் 13—இரு யோனிகளோடு கருப்பைகள்.



படம் 17—இரு கருப்பை அறைகள்



படம் 18—அரை கருப்பை அறை.

**கருப்பை.**—கருப்பை சரிவர வளராக்குறையால் சூதகத் தடை ஏற்படலாதுவாகும். சிலருக்குக் கருப்பையே இல்லாமல் யோனிக்கு மேல் சிறிய பயிறு அளவுக்குத் தசை போல் அமர்ந்திருக்கும். இதனின் சூதகத்தடை நிலையானதாகும். யோனி இல்லாமலிருக்கலாம். ஆனால் சினைப்பை நன்றாக வளர்ந்து மங்கைப் பருவக் குணங்களெல்லாம் காணப்படும். சிலருக்குக் கருப்பை சரியாக வளராமல் குழந்தைப் பருவத்திலிருந்ததைப் போலிருக்கும். இதனை மகவு கருப்பை என்றும் கூறுவர்.

கருப்பையின் வளர்ச்சியில் அநேக ஊனங்களிருந்த போதிலும் கருப்பையின் சளிக் கவசம் இல்லாமலிருப்பதில்லை. சளிக் கவசம் இருப்பதால் பூப்பு நிகழும். சளிக் கவசம் இல்லாமல் போகும் காலங்களில் நிலையான சூதகத் தடை உண்டு. அது அபூர்வமாகும்.

**சினைப்பை.**—சினைப்பையில் பிறவிக் குறைகளேற்படுவது அபூர்வம். காணாமலிருப்பதும் துர்லபம். சினைப்பை தொழில்படாமலிருக்கும் நிலையில் தோற்றம் பெண்ணாக யிருந்தாலும் பெண்ணுக்குரிய குணமும் பண்பும் ஏற்படாது. சூதகத் தடை நிலையாக இருக்கும்.

**சுவலி.**—சுவலி வளர்ச்சியில் பிறவிக் குறைகள் ஏற்படுமானால் பெண் தன்மையே உண்டாகாது. இல்லை. சூதகத்தடை நிலையாக இருக்கும். விரைவில் கிழத்தன்மை உண்டாகும்.

(2) **உள்ளிடைச் சுரப்பிக் கோளாறுகள்.**—முன்னதாக, பூப்பு தொடர்ந்து நடந்து பிறகு சிலருக்கு சூதகத்தடை ஏற்படுவதுண்டு என்று கவனித்தோம். இவ்விதமான சூதகத் தடையானது உள்ளிடைச் சுரப்பிக் கோணங்களின் கோளாறுகளால் ஏற்படுவதாகக் கண்டுள்ளனர். இம் மகளிர்களுக்குப் பிறப்புறுப்புகள் செம்மையாக வளர்ந்திருக்கும். பெண்மைப் பண்புகளும் நிறைந்திருக்கும்.

**சினைப்பை.**—சினைப்பை முழுமையும் சுரப்பிக்கத் தவறினால், நிரந்தர சூதகத் தடை ஏற்படும். பூப்பு முடிவுக்குப்பின் ஏற்படல் சூதகத் தடையைப் போலாகும். அரைகுறையாகச் சுரப்பித்தால்

மகளிருக்குப் பெரும்பாடுண்டாகும். இவ்வகையில் தற்காலிகமாக சூதகத் தடை ஏற்பட்டு தொடர்ந்தாற்போல் பெரும்பாடு உண்டாகும். ஆகவே, சினைப்பைச் சுரப்பி குறைந்ததற்கு ஏற்ப சூதகத்தடையும், அது அதிகரித்ததற்கு ஏற்ப பெரும்பாடு உண்டாகும்.

மற்ற உள்ளிடை சுரப்பிகளின் கோளாறுகளினாலும் சூதகத் தடையோ பெரும்பாடோ ஏற்படுமென்றறியவும்.

(3) **பிறப்புறுப்புகள் அழிவு.**—நோய் சினைப்பையின் சிற்சில பாகங்கள் நோய்வாய்ப்பட்ட போது சூதகத் தடை ஏற்படுவதில்லை. சினைப்பையின் உட்கூறுகள் முழுமையும் நோயுற்ற போது சூதகத் தடை உண்டாகும்.

(4) கதிர் இயக்கத்தினாலும், 'எக்ஸ்ரே' கதிர் இயக்கத்தாலும் நிலையான சூதகத் தடை ஏற்படும்.

(5) அறுவையால் சினைப்பைகளைக் களைந்தெறிந்துவிட்டால் நிலையான சூதகத் தடை உண்டாகலாம்.

(6) நோய்கள்.—சிற்சில பொது நோய்களில் தற்காலிகமாகச் சூதகத் தடை ஏற்படும். அவைகளுக்குப் பரிகாரம் தேவையில்லை. நோய் குணமடைந்தால் பூப்பு தொடர்ந்து நிகழும்.

## பெரும்பாடு

பூப்புக் காலங்களில் குருதிக் கசிவு அதிகரித்துக் காணுவதைப் பெரும்பாடு என்பர். பூப்பு இடைக்காலம் சரியாகவும், பூப்புக் கசிவு சாதாரண அளவைவிட பெரிதும் அதிகரித்து பூப்புக் காலங்களில் காணுவதைப் பெரும்பாடு என்று கூறுவது மரபு.

பூப்பு இடைக்காலம் குறைந்தும் பூப்புக் காலம் சரியாகவுமிருந்தும் அல்லது பூப்பு இடைக் காலம் அதிகரித்தும் பூப்புக் காலம் சரியாகவுமிருந்தும் பூப்புக் கசிவு அதிகரித்திருந்தால் அதனை அபரிமிதப் பூப்பு என்பர். சிலருக்கு மங்கைப் பருவ முதல் இவ்வாறாகவேயிருந்தால் சுகப் பூப்பு எனக் கருத வேண்டும்.

பூப்புக் காலங்களில்லாமல் சுயேச்சையாகப் பூப்பு இடைக் காலங்களில் குருதிக் கசிவு ஏற்பட்டால் அதமப் பெரும்பாடு எனப்படும். இக் குருதிக் கசிவுக்கும் பூப்புக் காலத்திற்கும் தொடர்பிராது. உதாரணமாக இருப்பத்தெட்டு நாட்களுக்கு ஒரு முறை பூப்படைந்து ஐந்து நாட்கள் பூப்புக் காலமாக நடந்திருந்து இந் நாட்களுக்கு மத்தியில் குருதிக் கசிவு ஏற்படுமானால் அதமப் பெரும்பாடு எனப்படும்.

அதமப் பெரும்பாடு பூப்புக் காலத்திற்குத் தொடர்பில்லாமல் சுயேச்சையாகவும் நடப்பதாகும். அன்றியும் கலவிக்குப் பிறகும், சிறுநீர் கழிந்தவுடனும், உடற்பயிற்சிக்குப் பிறகும், பூப்புக் காலத்திற்குத் தொடர்பில்லாமல் நிகழும் குருதிக் கசிவை அதமப் பெரும்பாடு என்பர்.

மேற்சொன்ன பெரும்பாடு வகைகள் குறி குணங்களைக் குறிக்குமே தவிர குகரண வகைகளில் அடங்காது. எனினும், இவைகளுக்கு அடிப்படையான குகரண மாறுதல்கள் பிறப்புறுப்புக்களிலோ உள்ளிடைச் சுரப்பிகளிலோ காண வேண்டும். உள்ளிடைச் சுரப்பிக் கோளாறுகளின் காரணங்களை நிதானிக்குமுன் பிறப்புறுப்புக்களில் புற்று நோய்கள் ஏற்பட்டுள்ளதா என்று கவனித்தல் வேண்டும்; ஆகவே, இது இரு வகைப்படும். அவை சாதாரணப் பெருமபாடு, அசாதாரணப் பெரும்பாடு என்பனவாம்.

### சாதாரணப் பெரும்பாடு

**காரணம்.—(1) கருப் பாதை உறுப்புகளின் சேதங்கள்.—(1)** கழலைக் கட்டிகள் வளருதல் பொதுவாக ஏதுவாகிறது. (2) சினைப் பாதையும், சினைப்பையும் தாபிதமடைந்தால் பெரும்பாடு ஏற்படும். கூபகக் கட்டிகள் பழுத்து உடைந்து சீழ் வெளிப்பட்டு ஆறும் வரையில் பெரும்பாடு காணும். கருப்பாதை சயநோயால் பீடிக்கப்பட்டு ஆரம்ப நிலையில் பெரும்பாடு கண்டு நோய் முதிர்ந்தபோது சூதகத் தடையாக மாறும். ஆகவே, மேற்சொன்ன காரணமான நோய்களுக்குரிய மருந்துகளைக் கொடுப்பதே பிணி நீக்கமாகும்.

**(2) பொது நோய்கள்.**—சில உள்ளிடைச் சுரப்பிகளின் கோளாறு நோய்களில், குருதிப் பெருக்கு ஏற்படுவதுண்டு. குறைவீதனச் சத்து நோயில் சில மங்கையர்களுக்குப் பெரும்பாடு ஏற்படும். வயது முதிர்ந்த மகளிர்களுக்குப் பூப்பு முடிவு காலங்களில் மிகுதியான பெரும்பாடு காணும். இதய நோய்வாய்ப்பட்டவர்கள் பூப்பு காலத்தில் பெரும்பாடடை இன்றனர். பொது நோய்களுக்கான பரிகாரம் செய்வதே பெரும்பாட்டை நிறுத்தும்.

**(3) மனோ வேகங்கள்.**—மனநோயில் தற்காலிகமாக சிலருக்குப் பெரும்பாடு ஏற்படுவதுண்டு. சில சமயங்களில் திருமணமான ஆரம்ப காலங்களிலும், திருமணத்திற்காக நெடுநாளாகக் காத்திருந்து அதிலிருந்து தோல்வி அடைந்த காலத்தும், மறுமணம் ஆகாது என்ற ஏக்கத்தாலும் பெரும்பாடு நிகழ்வதுண்டு. இவ்விதமான பெரும்பாட்டிற்குப் பரிகாரம் அளிப்பது கடினம். ஏனென்றால் காரணங்களைப் பூர்த்தி செய்ய முடியாததாகிறது.

### அசாதாரணப் பெரும்பாடு

கருப்பாதை உறுப்புக்கள் ஒருவித காரணங்களாலும் பாதிக்கப்படாமலிருக்க, கருப்பையினின்று வெளியாகும் குருதி வெளிப் போக்கிற்கு அசாதாரணப் பெரும்பாடு எனப்படும். ஆனால் வெளித் தோற்ற பரிசோதனையால் கருப்பாதை உறுப்புக்கள் பாதிக்கப்படவில்லை என்று கணித்தால் மட்டும் போதாது. கருப்பைச் சுரண்டல் சோதனையால் தெளிவுபடுத்திக்கொள்ள வேண்டும். இல்லையேல் அபாயம் ஏற்படும். ஏனென்றால் கருப்பைக் காம்புக் கழலை நோயிலும், உள் கவசக் சய நோயிலும் ஆரம்ப நிலை புற்று நோயிலும் அசாதாரணப் பெரும்பாட்டின் குறி குணங்கள் காணலாம். குறைக் கருச்சிதைவில் ஏற்பட்ட பின்தங்கிய

சேத்தைகள் நோயாளிக்கும் மருத்துவருக்கும் தெரியாமலிருக்கலாம். அதனாலும் அசாதாரணப் பெரும்பாடு உண்டாகும். ஆகவே, இம்மாதிரியான காலங்களில் கருப்பையைச் சுரண்டல் தேர்வு செய்து கணிப்பது மிகவும் இன்றியமையாததாகும். கீழ்க்கண்ட காரணங்களால் அசாதாரணப் பெரும்பாடு உண்டாகலாம்:—

(1) கருப்பைச் சளிச் சவ்வு அங்குமிங்குமாக, திட்டு திட்டாக, சினைப் பைச் சத்துக்கும் பீதகச் சத்துக்கும் ஒழுங்கற்று தடிப்புறுகிறது. இவ்விதமாக, முடிவு பூப்படைதலுக்குச் சற்று முன் காலங்களில் காணலாம்.

(2) பூப்பு ஆரம்ப காலங்களில் பீதகச் சத்தின் நீடித்த ஆட்சியால் சளிச் சவ்வு முறையாகவும் ஒழுங்காகவும் உதிராமல் அங்குமிங்குமாக உதிருவதாகும்.

(3) சளிச் சவ்வானது ஈரமில்லா உலர்ந்த இணைப்புத் திசுக்களாக மாற்றப்பட்டாலும்.

(4) சளிச் சவ்வு அபரிமிதமாகத் தடிப்புற்றுத் தடித்து, கனத்ததினாலும் அசாதாரணப் பெரும்பாடு உண்டாகலாம் என்று கூறப் பட்டுள்ளது.

எனினு அசாதாரணப் பெரும்பாட்டை, குறி குணங்கள், வயது ஆகியவற்றைக் கொண்டு கீழ்க்கண்ட பிரிவுகளாக வகுக்கலாம். அவை—

(1) மங்கைப் பருவ வயதில் ஏற்படும் பெரும்பாடு.

(2) பிள்ளைப் பேறு வயதில் ஏற்படும் பெரும்பாடு.

(3) முடிவு பூப்பு ஏற்படும் காலங்களில் காணும் பெரும்பாடு.

**மங்கைப் பருவ காலங்களில் ஏற்படும் பெரும்பாடு.**—சில மங்கையர்களுக்கு முதற் பூப்புலிருந்து சில மாதங்கள் வரை பெரும்பாடு ஏற்படுவதுமுண்டு. பெரும்பாடு அதிகமாக இருந்தால் அயபற்ப செந்தூரங்களைக் கொண்டு பரிகரித்துப் பூப்புக் காலங்களில் ஓய்வு தருதல் வேண்டும். உணவாதிகள் சத்துள்ளதாகவும் குருதியைப் பலப்படுத்துவதாகவும் இருக்கவேண்டும். இன்னும் சிறுபான்மையோருக்கு அபரிமிதமான பெரும்பாடு ஏற்படும். குருதி பரிசோதனையில் அய செந்தவளத்தின் கூட்டு விகிதம் மிகவும் குறைந்து காணும். இதில் சினைப்பைச் சத்து மட்டும் உண்டாகி, கருப்பைச் சளிச் சவ்வைத் தூண்டுவிக்கிறது. அதே சமயத்தில் பீதகசத்து அனுசரணையாக ஒத்துழைக்க வருவதில்லை.

**பிள்ளைப் பேறு வயதில் ஏற்படும் பெரும்பாடு:**—பன் சூல்காரிகளுக்கு அபரிதமானப் பெரும்பாடு உண்டாவது சர்வ சாதாரணமாகும். பெரும்பாடு சுழற்சியாகவும் தொடர்ந்தாற்போலும், ஒழுங்கற்றதாகவும் ஏற்படலாம். இக் காலங்களில் கருப்பையானது பருத்தும் கனத்தும் காணும். மிக முக்கியமாக ஒழுங்கற்றப் பெரும்பாடு இங்கு உண்டாகும்.

**ஒழுங்கற்றப் பெரும்பாடு:**—இவ்வகைப் பெரும்பாடு பூப்படைந்தது முதல் பூப்பு முடிவு வரையிலும் உண்டாகலாம். பெரும்பான்மையாக நாற்பது வயதிற்குப் பிறகு வருவது அனுபவத்தில் கண்டதாகும். இருபது வயதிற்குள் சிறுபான்மையாகவும், முப்பது முதல் நாற்பது வரையில் அபூர்வமாகவும் காணுவதாக அறியப்பட்டுள்ளது. இது கரு

சிதைவுக்குப் பிறகும் மகப்பேறுக்குப் பிறகும் உண்டாகிறது. ஆரம்பத்தில் இரண்டொரு மாதங்களுக்குச் சூதகத் தடை உண்டாகி, பெரும்பாடு காணும். நாட்கணக்காகவும், வாரக்கணக்காகவும் பெரும்பாடு நடக்கும். சிலருக்கு அபரிதமான குருதிப்போக்குண்டாகும்.

பரிகாரம்:—எல்லாவித அசாதாரணப் பெரும்பாடு நோய்களைக் கருப்பைச் சுரண்டல் சோதனை செய்து பரிகாரம் நடத்த வேண்டும். எனினும் சில காலம் குறிகுணங்களுக்கேற்ற பரிகாரம் செய்யவும். சிலவேளை இப்பெரும்பாடு சுயேச்சையாகவே தன்னிலைக்குத் திரும்பும். இரும்பினால் முடிந்த பற்ப செந்தூரங்களை முதலில் கொடுத்துப் பரிகரிக்கவும்.

முடிவு பூப்பு வயதில் ஏற்படும் பெரும்பாடு:—முடிவு பூப்பு ஏற்படுங் காலங்களில் பெரும்பாலும் மகளிருக்குத் திடீரென்று ஒருவித மாறுபாடில்லாமல் பூப்பு நின்றுவிடும். இக்காலங்களில் சிலருக்குப் பூப்பு காலம் நீடிக்கும் அல்லது பூப்புச் சுழற்சி நீண்ட காலமாகும். சிலருக்குப் பூப்புக் காலம் குறைந்தும் குருதிப் போக்குக் குறைந்தும் படிப்படியாகப் பூப்பு நிகழ்வு நின்று விடும்.

ஆனால் முடிவு பூப்புக் காலங்களில் பெரும்பாடு உண்டாவது சர்வ சாதாரணமாக உள்ளது. அப்பெரும்பாடு ஒழுங்கற்றப் பெரும்பாடாகும். பூப்புக் காலம், பூப்புச் சுழற்சி, குருதி அளவு ஆகியவைகள் ஒழுங்கற்ற நிலையிலிருக்கும். திட்ட வட்டமாக எதையும் ஒழுங்காக அனுசரிக்காது. இதனால் மெய்யான ஒழுங்கற்றப் பெரும்பாடு உண்டாகிறது.

கருப்பைச் சுரண்டல் சோதனைக்கு உட்படுத்தினால், சினைப்பைச் சத்து ஊக்குவி இல்லாமலிருப்பதாகத் தோன்றுகிறது. சளிச் சவ்வின் சிற்சில பாகங்கள் தடிப்புற்றும், சில உதிர்ந்தும் சில சுருங்கியும் காணலாம். இவ்வகையான பெரும்பாடுகளில் கருப்பைச்சுரண்டல் சோதனை செய்தாகவேண்டும். இச்சோதனையால் புற்றுநோயின் தொடர்பைக் களைந்து ஒழுங்கற்றப் பெரும்பாடு என்று உணரலாம். புற்று நோய் அல்லவென்று கணித்த பிறகு உள்ளிடைச் சுரப்புச் சத்துக் களைக் கொடுத்துப் பரிகரிக்கலாம்.

யூகிமுனியை அடியொற்றி இனி, பெரும்பாட்டின் வகைகளைக் காண்போம்.

### 1. வாதப் பெரும்பாடு

கூறுமே தலைவலியுமேற கடுப்பும்
 கூருனமுதுகிடுப்புக் குடைச்ச லுண்டாம்
வாடுமே தேகமெல்லாங் கருக்கலாகும்
 மாதவிடாய் கரித்துமே மைந்தன் போலாம்
ஊடுமேவயிறூதி உடைச்சலாகி
 ஊற்றுமே செந்நிறமுங் கருகலாகத்
தேடுமே துற்கந்தஞ்சேர வொட்டா
 செகமறிய வாதத்தின் சிராவமாமே.

பொருள்:—தலைவலி, வயிறு கடுப்பு, குறுக்குவலி, குடைச்சல், உடல் கருத்தல் ஆகிய குறிகுணங்களைக் காட்டி அடிவயிறு ஊதி உடைச்ச லாகி, செந்நிறமும் கருநிறமும் கலந்து குருதி வெளிப்படும்.

## 2. பித்தப் பெரும்பாடு

ஆமென்ற வன்னத்தை இரங்கொட்டாது
அழுகின்ற மஞ்சள் நிறம் போல ஊற்றும்
வேமென்ற யோனியிலே வேக்காடுண்டாம்
மேனியுமோ வெளுத்துமே ரத்தம்போகும்
காமென்ற கால்கையும ழற்றலாகும்
கருகலாய்க் கட்டி போலுதிரம் வீழும்
தேமென்ற சிறுகடுப்பாமங்கமெல்லாம்
சீரியதோர் பித்தத்தின் சிராவமாமே.

**பொருள்:**—பசியின்மை ஏற்படும். அழுகிய மஞ்சள் நிறத்துடன் கூடிய குருதிபாயும். யோனித்தாபிதம் ஏற்படும். உடல் வெளுக்கும். கைகால் குடைச்சல், சிலவேளை கருநிறத்துடன் கூடிய குருதிக் கட்டிகள் விழும்.

## 3. சேட்பப் பெரும்பாடு

ஆதமே வெள்ளைநிறமாக ஊற்றும்
அலியான நாற்றந்தான் மிகவுண்டாகும்
வேகுமே வுடம்பெங்கும் விபூதிபூக்கும்
வெந்தழலாயுடம்பெங்கும் எரிச்சலாகும்
பாகுமே படபடப்புமூச்சு முண்டாம்
பாரமாங்கோழையொடு இருமலாகும்
தேகுமே யடிக்கடிக்கு மயக்கமாகும்
சேட்டுமத்தின் சிராவமென்றே செப்பலாமே.

**பொருள்;**—வெண்மை நிறத்துடன் குருதி வெளிப்பாயும். துர் நாற்றம் மிகுந்திருக்கும். உடலெல்லாம் சாம்பல் நிறமாகும். படபடப்பு, மூச்சுண்டாகும், இருமலோடு அடிக்கடி மயக்கமும் இருக்கும்.

## 4. தொந்தப் பெரும்பாடு

செப்பவேகருங் கல்லாய்ச் சிவப்புமாகும்
சேர்ந்ததிலே கட்டியாய்க் கருப்பாய் வீழும்
உப்பவே வயிறது முளைச்சலாகும்
ஊசலாநாற்றமுட னொழுக்கமாகும்
நம்பவே மஞ்சள் நிற நயப்புமாகும்
நாணியே தலைதானுநடுக்கலாகும்
துப்பவே வாய் நீருமிக வேலூற்றும்
தொந்தமாம் பெரும்பாடு சூட்டினோமே.

**பொருள்:**—குருதி, சிவப்பு நிறத்துடன் கூடிய கருப்பு நிறமுடன் கட்டிக் கட்டியாய் வெளிவரும். வயிறு உப்பி உளைச்சலாகும். துர் நாற்றமிருக்கும். தலைநடுக்கல், வாய்நீர் ஊறல் ஆகியவை காணும்.

## அத்தியாயம் 7

### சூதகவலி

அநேக மகளிர்கள் பூப்புக் காலங்களில் பூப்புக்கு முன்னும், பின்னுமாக, சூதக வலியினால் துன்புறுகிறார்கள். முக்கியமாக, திருமண மானதும், கருத்தரிக்கின்ற வயதில் சூதகவலி பெரும்பாலும் உண்டாகிறது. எனினும் திருமணமாகாத பெண்களுக்கும் காணுவதும் உண்டு. பூப்புக் காலங்களில், வலியுள்ளவர்களுக்குக் குமட்டல், வாந்தி, வயிறு பொருமல் போன்றவைகள் தொடர்ந்தாற்போல் ஏற்படலாம்.

சாதாரணமாக, பூப்புக்காலங்களில் வலியில்லாததென்றாலும் வாந்தி, குமட்டல், வயிறு பொருமல் போன்றவைகள் மகளிர்களால் சகித்துக் கொள்ளும் தன்மையிலிருக்கும். ஆனால் சூதக வலி மட்டும் எல்லோருக்கும் ஒரே தரமாகயிருக்காது. சிலருக்குச் சூதகவலி பொறுத்துக் கொள்ளும் தன்மையிலிருக்கும். அன்றாட வேலைகளைச் செய்ய ஒருவித சங்கடமில்லாமல் சூதகவலியிருக்கலாம். எப்பொழுது சுகமாக அன்றாட வேலைகளைச் செய்ய ஒட்டாமல் மகளிரைத் துன்புறச் செய்கிறதோ அந்நிலையைத்தான் சூதகவலி என்று கூறப்படும்.

இதனாலன்றோ சூதகவலியை அநேக விதங்களாகப் பாகுபடுத்தியுள்ளனர். அவைகளை ஒன்றிலின்று பிரித்து இன்னதென்று கூறவும் கடினமாகிறது. இதனை வகுக்குங்கால் அநேக பிழைகளும் ஏற்பட்டுள்ளன. எனினும் வழக்கில் இரண்டு பிரிவாகப் பிரித்துள்ளனர்.

(1) அகச் சூதகவலி;—இறுதிச் சுருங்கல் வலி—உடலிலேயே அகக் காரணத்தால் ஏற்பட்ட வலியாகும்.

(2) புறச் சூதகவலி;—சஞ்சித சூதகவலி—புறக் காரணங்களால் ஏற்பட்ட வலியாகும்.

இருபெரும் பிரிவுகளாக வகுத்ததில் அநேக மருத்துவ அறிஞர்களுக்குத் திருப்திகரமாக இல்லை. ஆகவே மேலும் மூன்று பிரிவாகப் பிரித்தனர். அவை :—

(1) கூபக நோய்களில் ஏற்படும் சூதகவலி.

(2) இறுதிச் சுருங்கும் சூதகவலி.

(3) சஞ்சித சூதகவலி.

கூபக நோய்களில் ஏற்படும் சூதக வலி—இதில் உணரும் வலி மகளிருக்கு மகளிர் விகற்பப்படும். பூப்பு நிகழ்வுக்குப் பத்து நாளைக்கு முன்பே வலி ஆரம்பமாகும். இம்மாதிரியான வலி சினைப்பாதை தாபிதத்திலும் கருப்பை உள்கவசத்தாபிதத்திலும் ஏற்படலாம். அடி வயிற்றிலும் முதுகிலும் நமநமவென்ற வலி காணும். சிலவேளை இதே வலி இரண்டு தொடைகளிலும் பிரதிபலித்துக் காணும். தீவிர வலியும் பூப்புக் காலங்களில் தோன்றும். புச்ச சாய்வுற்ற கனத்த கருப்பையுள்ள மகளிருக்கு முதுகுவலி கடுகடுத்து வலிக்கும். இம்முதுகு வலி பூப்புக் காலத்திற்கு முன்போ பூப்புக் காலத்திலோ காணும். சிலவேளை, கருப்பையில் கழலைக் கட்டியுள்ள மகளிருக்குக் குடல்

புரட்டல் வலி ஏற்பட்டு இறுகிச் சுருங்கும் சூதகவலியைப் போல் காணலாம். கூபக நோய்களில் ஏற்படும் சூதக வலியில், வலிமட்டும தனியாகக் காணாது. மற்ற கூபக நோய்களின் குறி குணங்களோடு கலந்தே காணும். அதாவது, பெரும்பாடு, புணர்ச்சி வலி, மலடு போன்றவைகள் காணலாம்.

**இறுகிச் சுருங்கும் சூதக வலி:**—பெரும்பான்மையாக மகளிர்க்குக் காண்பது இறுகிச் சுருங்கல் வலியாகும். மங்கையர்களுக்குப் பெரிதும் உண்டாகும் வலி இன்ன ரீதியில்தான் உணரப்படுகிறது என்று ஒரே தரமாக கூற இயலாததாகும். தாங்கொணா வலி சிலருக்கே உண்டு. எனினும் பெரும்பான்மையோருக்கு வலியால் அன்றாட வழக்கமான வேலைகளைச் செய்ய முடியாததாகும்.

சூதக வலி இறுகிச் சுருங்கும் வலியாகும். குடற் பிரட்டல் வலியைப் போல் தோன்றும். அதாவது குடக்கிமுடக்கி மேல் எழும்பி வலிக்கும், பூப்புவின் முதல் நாளிலே ஆரம்பமாகும். சிலருக்கு சில மணி நேரம் வலி நீடிக்கும். சிலருக்கு பூப்புக் காலம் வரையுமிருக்கும். குருதிக் கசிவு சிறிதளவாக இருக்கும். குருதிக் கசிவு அதிகரித்துப் பாய ஆரம்பித்தால் வலியும் குறையும். சிறு சிறு குருதிக் கட்டிகளோ, சளிச் சவ்வுத் துகள்களோ வெளிவரும். சளிச் சவ்வு முழுமையும் உதிர்ந்து வெளிவரும்போது கடுமையான வலி ஏற்படும். இதனைத் தனிப்பட்ட சூதக வலியாகவும் கருதுகின்றனர் எனவே, அதற்குச் சளிச் சவ்வு சூதகவலி என்பர். ஆனாலும் இறுகிச் சுருங்கல் வலியின் ஓர் வகை எஃறே கொள்ளவேண்டும்.

**பரிகாரம்:**—மாலை நேரங்களில் வெட்ட வெளியில் தேகப்பயிற்சி செய்வித்தல் வேண்டும். பொது சுகாதார முறைகளை அனுசரிக்கச் செய்யவேண்டும். மலச் சிக்கலைக் களைய வேண்டும். மனோவிகாரங் களைப் போக்கி, மகளிர்களை இதமான வார்த்தைகளைச் சொல்லி சுக வாழ்விற்கான முறைகளை உபதேசிக்கவேண்டும். வலி வருங் காலங் களில் சுடுநீரில் குளிக்கலாம். உடலைத் தளரவிட்டு ஓய்வாகப் படுக்க விக்கவும். கருப்பைப் பேசிக்கும் நரம்புக்கும் வன்மையைக் கொடுக்கும் படியான மருந்துகளைப் புகட்டவேண்டும். மயக்க மருந்துகளையோ மூட மருந்துகளையோ கொடுக்கலாகாது.

**சஞ்சித சூதகவலி:**—இது முப்பது வயதைக் கடந்த மகளிருக்குப் பெரும்பாம்பான்மையாக வருகிறது. பூப்புக் காலத்திற்கு முண்பு வரும் பூப்புத் தோன்ற பத்து நாளைக்கு முன்பிருந்தே அடி வயிற்றிலும் முதுகிலும் வலியுண்டாகும். சில்ருக்குப் பூப்பு நிகழ்வு உண்டானதும் வலி நின்றுவிடும். இம் மகளிர்களுக்குப் பற்பல மனோவிகாரங்கள் ஏற்படும். எரிச்சல், கடுகடுத்துப் பேசல், மந்தம், சோம்பல், அசதி, சோர்வு, வெறுப்பு போன்ற குணங்கள் தோன்றும். தலைவலி, மனம் எதிலும் நாட்டம் கொள்ளாமை, கொங்கைகளில் வீநோதமான துன்பம் ஆகியவைகள் உண்டாகலாம்.

**பரிகாரம்:**—முக்கியமாக முதலில் பேதி மருத்துவம் கொடுத்தல் நன்மையைப் பயக்கும். உப்புக்களால் ஆன பேதி மருந்து கொடுப்பது நன்று. மனதைச் சாந்தப்படுத்த மருந்துகளைக் கொடுக்கவும்.

## புணர்ச்சி வலி

புணர்ச்சியின்போது உண்டாகும் வலிக்குப் புணர்ச்சி வலி எனப்படும். இவ்வலிக்குரிய காரணங்களை மூவகையாகப் பிரிக்கலாம். அவை;—

(1) பிறப்புறுப்புக்களின் பாதையில் துன்பங்கள்.

(2) புணர்ச்சி செய்ய முடியாமல் பாதையில் தடங்கல்கள்.

(3) பிறப்புறுப்புக்களில் ஒருவித காரணமின்றி ஏற்படும் வலியும் தடங்கலும்.

1. **பிறப்புறுப்புப் பாதையில் துன்பங்கள்:—**

(1) அகல், யோனி ஆகியவைகள் தாபிதமடைந்திருத்தல்.

(2) பெண்சலவாகி தாபிதமடைந்திருத்தல்.

(3) பூப்பு முடிவுற்று அகலும் யோனியும் சுருங்கி உலர்ந்து விட்டபோதும்.

(4) சில நோய்களில் யோனித் துவாரக் குழல் குறுகியபோதும்.

(5) கன்னிச் சவ்வு கனத்தும் யோனியை அடைத்து, சிறிய நுழை வாசலானாலும்.

(6) ஆசன வெடிப்பு, மூலம் ஆகியவைகளிருந்தாலும் புணர்ச்சியில் வலியை உண்டாக்கும்.



படம் 19—சலப்பை பிதுக்கம்



படம் 20—விரேகி பிதுக்கம்

**2. புணர்ச்சி செய்ய முடியாமல் பாதையில் தடங்கல்கள்;—**

பொதுவாக இவ்வகையில் தம்பதிகளுக்குப் புணர்ச்சியின் நுட்பம் அறியாமையாகும். இதைத் தவிர புணர்ச்சிப் பாதையில் சில தடங்கலும் உள.

(1) யோனி நடு சுவரால் இரண்டு சிறிய யோனிகள்,

(2) தடித்தக் கன்னிச் சவ்வு,

(3) யோனியே இல்லாமை,

(4) யோனியில் கழலைக் கட்டிகள்,

(5) கருப்பை முகம் நீண்டு யோனியை நிறைவு கொள்ளல்,

(5) கருப்பையில் கழலைக் கட்டிகள்,

ஆகியவைகள் புணர்ச்சி செய்ய தடங்கலாகும்.

**உறுப்புக்களில் ஒருவித காரணமின்றியும் புணர்ச்சியில் வலி.**

1. சில சிரா குண மகளிர்களுக்கு—(1) சூல் கொள்வதால் ஏற்படும் பயம் (2) கணவனிடம் பிரியம் இல்லாமை, (3) மற்ற புணர்ச்சியில் வெறுப்புக்கான மனோவிகாரங்கள், (4) புணர்ச்சிக்கான மனோபாவனை கள் இன்னும் வளராமை ஆகிய காரணங்களால் புணர்ச்சிப் பாதை உறுப்புகளின் பேசிகள் இறுகிச் சுருங்கலாகிறது. அன்றியும் தொடை பேசிகளும் சுருங்கிப் புணர்ச்சிப் பாதையை மேலும் இறுகி மூடப் பண்ணுகின்றன. இந்நிலையில் புணர்ச்சி செய்ய முயன்றால் புணர்ச்சிக்கு வலியும் தடங்கலுமேயாம் இதனை யோனிச் சுருக்கு என்பர். பலாத் காரமாகப் புணர்ந்தாலும் யோனிச்சுருக்கு ஏற்படும்.

பரிகாரம்:—காரணங்களை நீக்குவதே பரிகாரமாகும். கலவியின் நுணுக்கங்கள் அறியாமைக்குப் பழகப் பழக நாளடைவில் சரிகட்டலாம். பழக்கத்தில் திருப்பமேற்படவில்லையானால் அனுபவசாலிகளின் ஆலோசனையைக் கடைப்பிடித்தால் திருப்ப மேற்படும். சிலருக்கு நெய்ப்புப் பசை அல்லது கொழுப்புப் பசையை யோனித் துவாரத்தில் தடவினால் யோனிச் சுருக்குத் தீரும். புணர்ச்சிக்கு முன் நீண்ட நேர ஓய்வு கொடுத்தாலும் போதும். யோனித் தாபிதங்களையும், கூச்சத்தையும் உடனே போக்கவேண்டும்.

## அத்தியாயம் 8

### மலடு

குழந்தைகளைப் பெறாத தன்மைக்கு 'மலடு' என்பர். மலட்டை (1) சுத்த மலடு, (2) கதலி 'மலடு' (3) காக மலடு என்று மூவகையாகப் பகுத்துள்ளனர்.

**சுத்த மலடு.**—ஒரு முறையாகிலும் கருத்தரித்ததே கிடையாத நிலைமைக்குச் சுத்த மலடு என்பர்.

**கதலி மலடு.**—வாழை மரம் ஒரு முறை குலை தள்ளியதும் மீண்டும் குலை தள்ளாமல் நின்று விடும். அதுபோல் சிலர் ஒரு மகவை ஈன்று மேலும் கருதரிப்பதேயில்லை. இதற்கு கதலி மலடு என்று பெயர்.

**காக மலடு.**—காகமானது இரண்டு இனத்தைப் பெருக்கி விட்டதன் பேரில் மீண்டும் தன் இனத்தைப் பெருக்குவதில்லை. அதுபோல் இரண்டே மகவை ஈன்று மேலும் கருதரிப்பதேயில்லை. இதற்கு காக மலடு என்று பெயர்.

ஈதன்றியும் கன்ம மலடு என்று நான்காவதாக ஒன்றையும் வகுத்துள்ளனர்.

**கன்ம மலடு.**—சூல் கொள்வர். ஆனால் கருச் சிதைவு அடிக்கடி ஏற்பட்டு சூல் காலத்தை நீடிக்க வொட்டாமல் தடுக்கும் நிலைக்குக் கன்ம மலடு என்று பெயர்.

**காரணங்கள்.**—மகளிர்க்குப் பூப்பு நிகழ்வு நடப்பதால் கருத்தரிக்கப் படுவாள் என்று நிரந்தரமாகச் சொல்லுவதற்கில்லை. சிலருக்குக் காமக் கிளர்ச்சியில்லாமலே பூப்பு நிகழ்ச்சி நடைபெறுகிறது. இவர்கள் கருதரிக்க முடியாது. சினைப்பையில் பரிசினை முதிர்ந்து சினை வெளிப்பட்டு வருவதில்லை. ஓரோர் வேளை வந்தாலும் கருப்பைச் சளிச் சவ்வு சினையைப் பதிய வைக்கத் தடிப்புறுவதில்லை. ஆகையால் கருத்தரிக்கப்படாமல் மலடாகின்றார்கள்.

மகளிருக்குக் கருத்தரிப்பதில் சினைப்பாதை மிகவும் பங்கு கொள்கிறது. சினைப்பையினின்று கழன்று வெளிப்பட்ட சினை குஞ்சாந்தத்தால் உறிஞ்சப்பட்டு, சினைப்பாதையை அடைகிறது. சினைப்பாதைக் குழல் சினையைக் கருப்பை அறையை நோக்கி உந்தச் செய்கிறது. உந்திக் கொண்டே செல்லும் சினை விந்து அணுக்களைச் சந்தித்துக் கருக் கொள்கிறது. ஆகவே, சினைப்பாதை சிற்சில நோய்களில் தாமிதமடைந்து, குழலில் திசு வளர்ச்சி ஏற்பட்டு சினையும் விந்துவும் சந்திக்க வாய்ப்பில்லா காரணத்தால் மகளிர் கருத்தரிப்பதில்லை.

ஆண்களில் சிலருக்கு விந்து நீரில் விந்து அணு காணப்படுவதில்லை. மகளிருக்கு பிறப்புறுப்புகளிலும் பூப்பு நிகழ்வுகளிலும் இன்னல்கள் இல்லாமலிருந்தும் கருத்தரிக்கவில்லை என்றால் கணவனுடைய விந்து நீரைச் சோதிக்க வேண்டும்.

சில சமயம், புணர்ச்சியில் ஏற்பட்ட யோனிக் கசிவு, கருப்பை முகக் கசிவு ஆகியவைகள் விந்து அணு உயிர் வாழத்தக்கதாக இல்லா விட்டால் கருப்பை அறையை அடைவதற்கு முன்பே வன்மையிழந்து மடிந்து விடுகின்றன.

மகளிருக்குப் பிறப்புறுப்புகளில் தாபித நோய்கள் ஏற்பட்டிருந்தாலும், பிறப்புறுப்புக்கள் சரிவர சுகரணரீதியாக இல்லாமையாலும் சுய நிலையிலில்லாமல் மாறுபட்ட நிலையிலிருந்தாலும், கருப்பையில் கழலைக் கட்டிகளிருந்தாலும் கருத்தரிக்க முடியாது, மலட்டுத் தன்மை உண்டாகும்.

இனி மலட்டுத் தன்மைப்பற்றி யூகி முனி கூறியவற்றைக் காண்போம்.

**ஆண் மலட்டின் குணம்.**

பார்க்கவே ஆண்மகனின் விந்து தானும்
பதமான தித்திப்புயில் லாத தாலும்
ஏற்கவே சலமீதில் மிதந்த தாலும்
எழிலாக வுயிர்ப்பற்றுயிருப்ப தாலும்
சேர்க்கவே மூத்திரத்தில் நுரைதான் போலும்
செயலான கருவதுவும் தரிக்க மாட்டா
தீர்க்கவே யூகிமுனி சிகிச்சா சாரம்
தெளிவாகப் பாடி வைத்தார் திறமி த்தானே.

**பொருள்.**—ஆண்களின் விந்துவை நீரிலிட மிதந்தாலும், இனிப்புச் சுவையில்லாமலும், உயிர்ப்பில்லாமல் இருந்தாலும் புணர்ச்சியுரினும் கருத்தரிக்காமல் இருக்கின்ற குறிகுணங்களைக் கொண்ட செய்கைக்கு ஆண் மலடு என்று பெயர்.

**பெண் மலட்டின் குணம்**

தாமேதான் மாதாந்த ருதுசாலத்தில்
தக்கான ரத்தமது சிவந்து காணும்
வேமேதான் மஞ்சள்நிறங் கருமை யாகும்
வினையானநீலநிறஞ்சீழ்போ லாகும்.
போமேதான் ரத்தமது வுருண்டை யாகும்
பொல்லாத மலமூத்திரநிறமே யாகும்
நாமேதான் சொன்னபடி சிகிச்சா சாரம்
நாட்டுளோர்க் கறியவென்று நவின்றிட்டாரே.

**பொருள்.**—மாதா மாதம் நிகழ்வுறுகின்ற பூப்புக் காலங்களில் ஏற்படும் பூப்புக் கசிவு நன்கு சிவந்திருந்தாலும், மஞ்சள் கருமை நிற மாகவும், நீலநிறச் சீழ் போலவும் சிற்சிறு உண்டைகளாக வெளிப் போந்தாலும், நோயுற்ற காலங்களில் இழியும் மலம் சிறு நீர்களை யொத்தாலும் போன்ற இக்குறி குணங்களைப் பெற்றிருப்பதற்குப் பெண் மலடு என்று பெயர்.

### நிரந்தர மலட்டின் குணம்.

நவின்றிடவே யிடுப்புவியிற் பெருத்துக் காணும்
நலமான மேனியது வூதிக் காணும்
குவின்றிடவே மும்மடிப்பு வயிற்றில் தோன்றும்
குணவதியாந் தேவதா பெண்ணா னாலும்
நவின்றிடவே சன்மத்தின் மலடே யாகும்
சதாகாலங் கருப்பமதுதரியா தென்று
புவின்றிடவே வூகிமுனி சிகிச்சா சாரம்
புகன்றிட்டார் லோகத்து மாந்தற்காமே.

பொருள்.—உடலின் மற்ற பாகங்களைவிட இடுப்பும் வயிறும் பெருத்திருத்தல், உடல் அதைத்துக் காணல், உந்தியில் மூன்று மடிப்புகள் காணுதல் ஆகிய குறி குணங்களைக்கொண்டு என்றுமே கருதரிக்காமலிருக்கும் தன்மைக்கு நிரந்தர மலடு என்று பெயர்.

### கதலி மலட்டின் குணம்.

நவிலவே கன்னியர்கள் கதலிபோலாம்
நாட்டவே வாழைமரத்தாறு போல
கவிலவேமைந்தனாங் கருப்பமொன்று
காதலியாளீன்றபின் கருப்பமில்லை
தவிலவே கருப்பகுழி மறைந்ததுமே தான
தங்கியேமுழுகுநாள் தடையுண்டாகும்
புவிலவே யூகிமுனி சிகிச்சா சாரம்
பூதலத்தில் மானிடற்குப் பூட்டினாரே.

பொருள்.—குலை ஈன்ற வாழை மறு முறை குலை ஈனாத் தன்மை போல மங்கையர்கள் ஒரு குழந்தையை ஈன்ற பின்னர் கருப்பைக் குழி செயலற்று பூப்புத் தடை ஏற்பட்டு, புணர்ச்சியுற்ற போதும் மறுமுறை கருதரிக்காத தன்மைக்குக் கதலி மலடு என்று பெயர்.

### காக மலட்டின் குணம்

ஆமேதான்காகத்தின் மலடேயாகும்
அப்பனேகருப்பையில் சோரி கெட்டு
போமேதான் கருப்பையுந்துந்துமே தான்
போக்கானகாயுடனேகதடுபோலாம்
வேமேதானிரண்டு பேர்மைந்தனுண்டாம்
வேறுவகை கருப்பமதுமலடேயாகும்
நாமேதான் சொன்னபடி சிகிச்சாசாரம்
நாட்டுளோர்க் கறியவென்று நவின்றிட்டோமே.

பொருள்.—இரண்டு மகவை ஈன்று கருப்பையானது சோரி கேடுற்ற ஏதுவினால் மறுமுறை கருதரிக்காது விளங்குகின்ற தன்மைக்குக் காக மலடு என்று பெயர்.

## அத்தியாயம் 9

### யோனிக் கசிவு

மகளிரின் மிகவும் பொதுவான துன்பங்களில் யோனிக் கசிவும் ஒன்றாகும். இக் கசிவுத் தன்மை மகளிர்தம் பெரும் கவனத்தை ஈர்க்கிறது. கசிவுப் போக்கின் அளவிற்குத் தக்கவாறு அவர்கள் கவலையும் அதிகரிக்கிறது. சாதாரணக் கசிவைவிட சிறிது அதிகரித்து இருந்தபோதும், மருத்துவரைக்கண்டு ஆலோசனைக் கேட்பார்கள். இதற்கு நேரிடையாகச் சிலருக்கு அதிக நாற்றமுள்ள கசிவு ஏற்பட்டிருந்த போதிலும் மருத்துவன் கேட்டும் ஒன்றுமே அறியாதவர்கள் போல் மறுத்துரைப்பார்கள். ஆகவே யோனிக் கசிவைப் பற்றி விசாரிக்கும்போது மிகவும் திறமையாகவே கேட்கப்புக வேண்டும்.

நல உடல் மகளிருக்குக் கருப்பை அறை சளிச்சவ்வுக் கசிவு, கழுந்து சளிக் கசிவு, யோனி வபா நீர், யோனி உட்சுவரினின்று உதிர்ந்த விலங்கள் ஆகியவைகள் சேர்ந்து பால் ஆடையைப் போன்ற பிசு பிசுத்த கசிவு உண்டாகிறது. மகளிர்க்கு யோனிக்கசிவு அமிலத்துவமாகும் ஆனால் மங்கைப் பருவத்திற்கு முன்பும் பூப்பு முடிவு நடந்த பிறகும், யோனிக்கசிவு அமிலத்துவம் இல்லாததாகும். அதனாலன்றோ குழந்தைப் பருவத்திலும், முதிர்ந்த பருவத்திலும் யோனி தற்காப்புச் சக்தியிழந்திருப்பதால் யோனித் தாபிதம் ஏற்படுகிறது. ஆகவே குழந்தைகளுக்கும் வயது முதிர்ந்தவர்களுக்கும் யோனி, அகல் தாபிதம் உண்டாவது மரபு. குழந்தைகளுக்குப் பெரும்பாலும் அன்னிய பதார்த்தங்கள் உள் நுழைவதால் தாபிதம் ஏற்பட ஏதுவாகும். அசுத்தமானதும் அழுக்கு நிறைந்துள்ள நீரில் குளிப்பதாலும் தாபிதம் நேரிடலாம். மற்ற சஞ்சார நோய்களினால் பாதிக்கப்பட்டு பலமிழந்து இருக்கும் வேலையிலும் அகல் யோனித் தாபிதம் உண்டாகிறது. பூப்பு முடிவுற்று நெடு நாளாகிய பிறகு சில மகளிர்களுக்குத் திடீரென்று யோனி அகல் தாபிதம் மிகக் கடுமையாகவும் உண்டாகும்.

யோனிக் கசிவு அல்லது ஒழுகல் காரணமாகவும் குகரணமாகவும் உண்டாகும். சூல் காலங்களில் பெரும்பான்மையாக, கருப்பை அதிக சஞ்சிதங் கொள்வதால் கருப்பை முகத்திலிருந்து சளி போன்ற கசிவு யோனி மூலமாக ஒழுகும். இதற்குப் பரிகாரமே தேவையில்லை. சிலருக்கு மங்கைப் பருவ முதல் கொண்டு பூப்புக் காலங்களுக்குச் சற்று முன்பாக, சளிக் கசிவு ஒழுக ஆரம்பிக்கும். இது இவ்வாறாக நெடுநாட்களிலிருந்து நாட்பட்ட தாபித நோயாக மாறிவிடும். அநேகமாக அதிகம் வேலை செய்கிறவர்களுக்கும், விசனம் ஏற்பட்டபோதும், பலவீனத்தாலும் மற்ற தீவிர சஞ்சார நோய்களில் பாதிக்கப்பட்டாலும் உண்டாவதுண்டு. இதனைப் பரிகரிக்காமல் வளரவிட்டால் கருப்பை முகம் தாபிதம் கொள்ளும். கசிவும் வெண்ணிறச் சளிச் சவ்வு கசிவாக மாறி சிறிது மஞ்சளாகவும் சீழும் கலந்து விழும். கருப்பை அறை, முகம், யோனி ஆகியவற்றின் சுவர்கள் தாபிதமடைந்தால

இவ்வித கசிவு வெளிவரும். முக்கியமாக யோனி வந்தைகளால் உண்டாகும். ஈதன்றியும் யோனியில் பொருத்தமற்ற ரப்பர் வளையங்களை அடைத்து வைப்பதாலும், கருச்சிதைவுக்காக உலோகத்தினால் செய்யப்பட்ட குடும்பக் கட்டுப்பாடு திட்டத்திற்காக நுழைத்த கருவிகளாலும் பரிகாரத்திற்காக யோனியில் வைத்துவிட்ட சிறப்பான கருவிகளை எடுக்கத் தவறியதுமல்லாமல் மறந்துவிட்டாலும் மேற்சொன்ன தாபிதம் ஏற்பட்டு சீழ் கலந்த யோனிக் கசிவு ஏற்படும் சில சமயங்களில் கருப்பைக் கழலைகள் புண்ணாகி அவைகளின்று சீழ் வடிவதுமுண்டு. எனவே யோனிக் கசிவு என்று கண்டால் முன் சொன்ன காரணங்களைக் கவனிக்க நோயாளியை முழுமையும் பரிசோதிக்க வேண்டும்.

யோனிக் கசிவு என்று கேட்டதும் அதன் அளவு, நிறம், மணம் போன்றவைகளையும் கேட்டறிவது முக்கியமாகும். பிறகு பரிசோதனைக் குட்படுத்துவது அவசியம். யோனி விரிப்புக் கருவியைக் கொண்டு சோதிக்கவும். ஆனால் சிறு பெண்களுக்கும் மணமாகாத பெண்களுக்கும் இச் சோதனை பொருந்தாததோடு கூடாததுமாகும். யோனி விரிப்புக் கருவி உபயோகிப்பதால் கன்னிச் சவ்வு கிழிந்துவிடும். இதனால் அநேக துன்பங்களும் நோய்களும் பெண்களுக்கு வந்து சேரும். அவசியமாக இச் சோதனை நடத்தியாக வேண்டுமென்று கருதினால் முன்னமேயே நோயாளிகளுக்குத்தான் செய்யப்போகும் யோனி விரிப்புச் சோதனையையும் அதன் விளைவையும் சொல்லியாக வேண்டும்.

யோனிக் கசிவை நிற, மண வேறுபாடுகளால் கீழ்க்கண்டவாறு பிரிக்கலாம்.—

(1) **சீழ் கலந்த மஞ்சள் நிறக் கசிவு:—** இது பெரும்பாலும் யோனி வந்தை சஞ்சார நோய்களில் உண்டாகும். கலவியால் ஏற்படும் வந்தைகளாலும் அன்னியப் பொருள்களாலும் இவ்விதக் கசிவு ஏற்படும்.

(2) **சளியுடன் சீழ் கலந்த மஞ்சள் நிறக் கசிவு:—** இது சாதாரணமாக கழுந்து முகத்திலிருந்து கசியும். கழுந்து முகத் தாபிதத்திலும் கழுந்து முக ஆறாப் புண்ணிலும் இக் கசிவு உண்டாகும்.

(3) கசிவானது நீர் போன்றும் அதனுடன் சிறு சிறு வெண்ணிறக் கட்டிகளும் வெளிவரும். இது யோனி பாசி வந்தைகளால் ஏற்படும்.

(4) **மிகு வெள்ளை யோனிக்கசிவு**(வெள்ளை நோய்);—சாதாரணமாக நடக்கிற வெள்ளை யோனிக் கசிவைவிட தீவிரமாகவும் மிகுதியாகவும் காணப்படுவதற்கு வெள்ளைக் கசிவு அல்லது ஒழுக்கு எனப்படும். இது பெரும்பாலும் பூப்பு நிகழ்வுக்குப் பின்னும் சூல் காலத்திலும் சுகரணரீதியாக விழும். இம்மாதிரியான வெள்ளை, மற்ற சஞ்சார நோய்களிலும் விழும். சில சமயங்களில் புணர்ச்சியின் இடர்பாடுகளாலும் மனோவிகாரங்களினாலும் வெள்ளைப்படும். சிலருக்கு வெள்ளைப் படுதல் அதிகமென்று நினைத்து பலவித கரைச்சல் மருந்தைக் கொண்டு யோனியைக் கழுவுதலால் மேலும் வெள்ளை நோயைப் பிறப்பிக்கிறது.

(5) **குருதி கலப்புற்றக் கசிவு :—** பூப்பு நிகழ்வுக்கு இடையில் கழுந்து காம்புக்கழலையிலிருந்தோ, கழுந்து ஆறாப்புண்ணிலிருந்தோ அல்லது கருப்பைப்புற்றுக் கழலைக் கட்டிகளிலிருந்தோ குருதி தோய்ந்த கசிவு யோனியினின்று வெளிவரும்.

(6) சிறுநீரும் மலமும் யோனியினூடே வர ஏதுவுண்டு யோனிச் சலவாஷ் பகந்தரத்திலும் யோனி விரேகிப்பகந்தரத்திலும் முறையே சிறுநீரும் மலமும் யோனியினூடாக வெளிவரும்.

### அகல் நமை

அகல் பாகத்தில் தீவிரமாக நமைச்சல் உண்டாகி அப்பாகத்தைச் சொறிந்தால் நமைச்சல் அடங்கும். அகல் தாபிதத்தை அகல் நமையில் சேர்ப்பது கூடாது. தாபிதமிருந்தால் வலியிருக்கும். வலியிருந்தால் சொறியக் காரணமில்லை. ஆகவே நமை ஒரு குறி குணமே தவிர நோயல்ல.

நமையின் தீவிரத்தில் அநேக மாறுதல்களுண்டு. இந் நமையில் அநேகர் சொறிய ஆரம்பித்துவிட்டார்களேயானால் நமை இன்னும் அதிகமாகு மென்று தெரிந்திருந்தும் சொறிவதை நிறுத்த முடிவதில்லை. வெப்ப மான படுக்கையில் படுத்திருக்கையில் தூக்கத்தின்போது சொறிய விழிப்பு உண்டாகும். பார்த்தால் குருதி கசியும்.

**காரணம்:**—(1) நெடு நாட்பட்ட யோனிக் கசிவு இருப்பதாலும் (முக்கிய மாக மதுமேக நோயால் பாதிக்கப்பட்டவர்கள்).

(2) மூத்திரக் கிரிச்சரங்களாலும்

(3) விரேகி நமையாலும்

(4) மனோவிகாரங்களாலும் அகல் நமை ஏற்படலாம்.

**பரிகாரம்:**—காரணத்திற்கேற்ற பரிகாரம் செய்வது நன்மையைத் தரும். முக்கியமாக சொறியவேண்டுமெனும் எண்ணத்தைத் தடுக்க வேண்டும் இரவில் தூக்க மருந்து கொடுத்து சொறியாதிருக்கச் செய்யலாம் ஊதலங்களால் முடிந்த மருந்துகளை மேல் பூசக்கூடாது. பன்றிக் கொழுப்பு தேங்காயெண்ணெய், தேன்மெழுகு ஆகியவைகளில் மருந்துகளைச் சேர்த்து பூசவும். சவுக்காரம், எண்ணெய் முதலியன இட்டுக் கழுவுவது கூடாது. உள்ளுக்கும் நமையை ஒழிக்கும் மருந்துகளைக் கொடுக்கவும். அகலைச் சுத்தமாக வைக்க மருத்துவ சாலைகளில் சேர்த்துப் பரிகரிக்கவும்.

### முதுகு வலி

பெண்களில் பெரும்பாலோர் அநேகமாக முதுகு வலியால் துன்புறுகிறார்கள். பெண்கள் முதுகு வலியால் துன்புறுகிறார்கள் என்றால் உடனே கூபக உறுப்புக்களின் வலி, முதுகில் பிரதிபலிக்கிறதென்று எண்ணலாகாது. முதுகு வலி பெண்களுக்குப் பலவித காரணங்களால் ஏற்படுகின்றன. அவையாவன;—

**களைப்பு;**—அதிக வேலை செய்த களைப்பால் முதுகு வலி ஏற்படும். அது மாலை வேலைகளில் அதிகரிக்கும். ஓய்வு எடுத்தாலும் சில சமயம் மல்லாக்கப் படுத்திருந்தாலும் வலி மறையும். பணக்காரச் சீமாட்டிகளுக்கு வீட்டு வேலைகளைச் செய்யாமல் உடற் பேசிகள் பலவீனமுற்றிருக்கின்றமையால் களைப்பு முதுகு வலி ஏற்படும். அதிலும் முடிவு பூப்பிற்குப் பிறகும், உடம்பு தூலகமாகப் பருப்பதாலும் முதுகு வலி மிகும். வலி, முதுகு வம்சிகளின பாகங்களில் காணப்படும்.

**ஆங்கியம்**:—தொழில் புரியுங்கால் ஆங்கியங்கள் மாறுவதாலும், அநேக சூல் காலங்களில் ஆங்கியம் மாறுவதாலும், உயர்ந்த உள்ளங்கால் காலணி அணிந்து நடப்பதாலும், முதுகு வலி உண்டாகும். மாலை வேளைகளில் அதிகரிக்கும். களைப்புற்றிருக்கையில் மிகவும் கடுமையாய் வலிக்கும். மேலும் உடல் கனத்து தூல தேகம் மிகப்பருத்தாலும் முதுகு வலி தீவிரமாகக் காணும்.

**குறுக்கு முதுகு வலி**:—மகப் பேற்றிற்கு பிறகு ஓய்வில்லாமல் உடனே குடும்பக் காரியங்களில் ஈடுபடுவதால் குறுக்கு வலி காணும். ஈதன்றியும் மற்ற காரணங்களாலும் குறுக்கு வலி ஏற்படுவதால் எக்ஸ்ரே எடுத்து நோயைக் கணிக்கவும்.

**புச்சபாலிகக் களைப்பு முதுகுவலி**;—மகப்பேறு காலங்களிலோ கனமான பளுவை எடுத்ததால் ஏற்பட்டதாலோ காயம் உண்டான நாள் முதற் கொண்டோ வலித்துக் காணும். புச்ச பாலிகைப் பொருத்துக்களை அழுத்தினால் வலி அதிகரிக்கும். சூல் காலங்களில் தளர்ச்சியுற்ற பொருத்துக்கள் பாலூட்டுங் காலங்களில் தாய் உடனே குடும்ப காரியங்களைக் கவனிக்கப் புகுந்து விடுவதால் அவைகள் நன்னிலையில் வர அவகாசம் கொடுப்பதில்லை. அதனால் உண்டானதுதான் புச்சப் பாலிகை வலிகளாகும்.

**பேசி தாபிதம்**:—இந்நோயில் வலி காலையில் காணும், சில சமயங்களில் பேசிகளின் வலியால் தூக்கத்திலிருந்தும் விரைவில் எழுப்பச் செய்யும். தாபிதமடைந்த பேசிகள் விரைத்து விம்மி இருக்க, கருப்பை நோய் அல்லது அதன் நிலை மாறுதல்களால் முதுகு வலி ஏற்படும்.

மகப் பேற்றிற்கும் கருச் சிதைவிற்குப் பிறகும் கருப்பை முன்னுக்கோ பின்னுக்கோ மடிந்து சாயும். அக் காலங்களில் முதுகு வலி உண்டாகும். இவ்வலி இழுக்கும் வலியைப் போலிருக்கும். அது முதுகு பக்கம் பிரதிபலித்துக் காணும். ஓய்வு கொடுத்தால் நின்று விடும். பூப்புக் காலங்களிலும் வலியிருக்காது. கருப்பை அடி தள்ளுதல் கருப்பை இறங்கல் போன்றவைகளுள் இம்மாதிரியான வலி காணும்.

**தாபிதம்**:—கூபக உறுப்புக்களில் தாபிதம் ஏற்பட்டிருந்தால் அவசியம் முதுகு வலி தோன்றும். அவைகளின் தாபிதத்தால் ஏற்பட்ட வலியே பிரதிபலித்து முதுகில் வலி காணும். அன்றியும் கழுந்து கசிவு அல்லது யோனிக்கசிவு அல்லது குருதிப்பெருக்கும் காணலாம்.

**புற்றுக் கழலைக் கட்டிகள்**:—பிறப்புறுப்புக்களில் புற்று நோயோ புற்று சம்பந்தமான கழலைக் கட்டிகளோ தோன்றி வளர்கின்ற காலங்களில் முதுகு வலி உண்டாகும்.

## அத்தியாயம் 10

### பிறப்புறுப்புக்களின் தாபிதம்

**அகல் தாபிதம்;**—அகலின் தோல் பரவலில் மயிர்க்கால்கள் சஞ்சார மடைகின்றன. அதனால் சிறு சிறு குறு கட்டிகள் அல்லது கொப்புளங்கள் உண்டாகின்றன. வாசனைக் கிரந்தி கோளங்கள் வீங்கிப் பருக்கின்றன. ஆகவே, முதலில் அகலைச் சுத்தப்படுத்த வேண்டும். கொப்புளங்கள் கிளம்பியுள்ள மயிர்க்கால்களிலிருந்து மயிர்களைக் களைந்தெறியவும். அதனால் கொப்புளக் கட்டிகள் உடைந்து விடுகின்றன. சீழ் வெளிப்படும். தக்க களிம்புகள், பற்றுகள் இட்டு ஆற்றவும். சில சமயங்களில் கொப்புளக கட்டிகள் வேரூன்றி அகத்தே செல்லும். அவைகள் பழுத்து உடையும் வரையில் வலியைத் தரும். இவைகளுக்கு வெந்நீரால் ஒற்றடமிடவும். பழுத்து உடைய தக்க பற்றுகளை இடவும். மற்ற பாகங்களில் தோல் நோய்கள் கண்டு பரவினாலும் அகலிலும் அந்நோய் காணும். முதற் நோய்க்கான பரிகாரம் செய்தால் அகலில் கண்ட நோயும் தீரும்.

**யோனித் தாபிதம்;**—யோனித் தாபிதங்களில அகலும் தொடர்ந்தாற் போல் தாபிதமடைகிறது. ஆகையால் யோனி அகல்தாபிதமெனக் கருத வேண்டும். யோனித்தாபிதம் வயதிற்குத் தகுந்தாற்போல் மாறுதலடைவதால் வயதிற்கேற்றவாறு தாபிதங்களும் வகுக்கப்பட்டுள்ளன



படம் 21—யோனித் தாபிதம்

**குழந்தை மற்றும் சிறு பெண்களுக்கேற்படும் யோனி அகல் தாபிதம்;**—பிறப்புறுப்பு [illegible] இதில் பெரிதும் பங்கு கொள்கின்றன. பெற்றோர்களிடமிருந்தோ, பள்ளியில் மற்ற பிள்ளைகளிடமிருந்தோ, வீடுகளிலேயோ சஞ்சார நோயாகத் தோன்றுகிறது. மருத்துவ மனைகளிலும்கூட மருத்துவப் பணியாளர்கள் மூலமாகவும் பரவுகிறது. சிறு குழந்தைகளும் சிறு பெண்களும் விளையாட்டாகக் கருதி கற்கள், தான்யம், குச்சி

போன்றவைகளை யோனிக்குள் இட்டுக்கொள்வதாலும் யோனி வந்தைகள் யுளர்ந்து விருத்தியாகி, தாபிதம் ஏற்படுகின்றது. சில சமயங்களில் நகம வுண்டான காலை விரல்களை யோனித் துவாரத்திற்குள் விட்டு குடைவதினாலும் தாபிதம் ஏற்படும். இம்மாதிரியாகவே, குடற்புழுக்கள் வீரேகி மூலமாக வெளிவந்து நமையை ஏற்படுத்தலாம். அவ்வமயம் சொரிவதால் ஏற்பட்ட சிறு காயத்தினால் சஞ்சாரம் ஏற்பட்டு யோனிக்கும் அகலுக்கும் தாபிதம் பரவும்.

குறிகுணங்கள்:—அகல் கசிவு வெளிப்படும். யோனி வாசலும் அகலும் வலிக்கும். சிவந்து காணும். சிறுநீர் கழியும்போது பொறுக்க முடியாத எரிச்சலும் வலியும் மிகுந்து காணும். அகல் அதைத்துத் தோன்றும் பொறுமையிழந்தவர்களாக இருப்பர். குழந்தைகள் சதா சிணுங்கிக் கொண்டேயிருக்கும். காரணத்தை நீக்கினால் தாபிதமுற்ற பாகம் நன்னிலையடையும்.

அபூர்வமாக, சில பெண் குழந்தைகளை யோனித் தாபிதத்திற்கு சோதனைக்குட்படுத்தும்போது விந்து அணுக்கள் காண்பதுண்டு. வெள்ளை நோயுற்ற ஆண், சிறுபெண்கள்பால் புணர்ச்சியுற்றால் தன் நோய் தீரும் என்ற நம்பிக்கையுண்டு. மற்றும் சிலர் காம விகாரத்தால் பெண் குழந்தைகளிடம் பலாத்காரமாகப் புணர்ச்சி செய்ய அகல், யோனித் துவாரம் போன்றவைகள் படுகாயமுற்று தாபிதமடையும். இக்காலங்களில் மருத்துவன் சிறு பெண்களைச் சரிவர பரிசோதிக்க வேண்டும்.

ஒரு பெண்ணுக்கு இந்நோய் ஏற்பட்டால் மற்ற தன் போன்ற பெண்களுக்கும் தொற்றுவது இயற்கையாகும். துணிமணிகள், குளிர் நீராடல், விளையாட்டுக் கருவிகள் போன்றவைகள் இந்நோயைத் தோற்றுவிக்க உதவிக் கருவிகளாக இருக்கின்றன.

(2) **நடுத்தர வயதான மகளிரின் யோனித்தாபிதம்**:—நடுத்தர வயதினருக்கு யோனித்தாபிதம் நேர்வது மிகவும் அசம்பாவிதமாகும். ஏனென்றால் யோனிச்சுவரின் உள் கவசங்கள் மிகவும் எதிர்த்து நிற்கும் சக்தியுள்ளவைகளாக அமைந்திருக்கின்றன. எனினும், காயத்தினால் யோனித்தாபிதம் ஏற்படும். அதாவது மகப்பேறு, கருச் சிதைவு காலங்களில் காயம் ஏற்படும்போது யோனித்தாபிதமடைகிறது. சில வேளை குறடுகளினால் மகப்பேறு நடத்துவதாலும், யோனியுள்படான மாத்திரைகளை உள் செலுத்துவதாலும், மிகுந்த சூடான கரைந்த மருந்தினால் யோனிப்பீச்சு கொடுப்பதாலும் யோனித்தாபிதமடைய ஏதுவாகிறது. சிலருக்கு யோனியுள் வளையங்களை உள் செலுத்தி நீண்ட நாள் புதைத்து வைப்பதாலும், அல்லது செலுத்திய வளையங்களைப் பின் வெளி எடுக்க மறந்துவிட்டாலும், மறந்துபோன யோனிச் சொறுகல்களினாலும் யோனித்தாபிதமடையும்.

பிறப்புறுப்பு வந்தைகளால் சலவாகியோ, சமுந்தோ தாபிதமுற்றால் யோனியும் தாபிதமடையும் என்பதையும் மறந்துவிடக்கூடாது. மிகவும் கவனத்தில் வைக்கவும்.

குறிகுணங்கள்:—அடிவயிற்றிலும், கூபகத்திலும் ஏதோவொருவித வேதனை, நீரறுகல், உடல் முழுவதும் வலி, சோம்பல், அசதி, அகல் அதைத்தல், யோனிக்கசிவு போன்ற குணங்கள் காணப்படும். இம் மாதிரியான குறி குணங்களோடு வந்தால் மகளிரைப் பரிசோதனைக் குட்படுத்துவது அவசியம். அகல், யோனி ஆகியவைகளின் நிலை, காயங்கள் ஏதேனும் ஏற்பட்டுள்ளதா என்றெல்லாம் ஆராயவேண்டும். இதனோடு, பலாத்காரப் புணர்ச்சியினால் உண்டானதா என்ற ஐயத்தையும் நிவர்த்திக்கவும்.

பரிகாரம்:—வெதுவெதுப்பான நீரால் இருவேளை ஒற்றடம் கொடுக்கவும். சலவாகியும் தாபிதம் கொள்ளாமலிருக்கக் கவனிக்கவும். படுக்கையிலிருக்கச் செய்யவும், தக்க மருந்துகள் கொடுத்து பொதுப் பரிகாரம் செய்யவும்.

(3) முடிவு பூப்புக் கடந்த மகளிரின் யோனித் தாபிதம்;—முடிவு பூப்புக் கடந்தவர்களின் பிறப்புறுப்புக்கள் தளர்ச்சியுற்று வன்மையற்றுமிருக்கும். இவர்களுக்குத் தாபிதம் ஏற்படுவதற்கு அதிக வாய்ப்பு இல்லை. எனினும் சிற்சில சமயங்களில் யோனிந்தாபிதம் அடைவதுண்டு. வளையங்களை எடுக்க மறந்துவிட்ட காரணத்தினால் தாபிதம் வருவது அவசியமாகிறது. முக்கியமாக புற்றுநோய் ஆரம்ப நிலையில் யோனித் தாபிதமடைவதைக் காணலாம்.

யோனிவந்தைத் தாபிதம் :—வந்தைகளால் ஏற்பட்ட தாபிதத்தில் யோனி தீவிரத்தாபிதமடைகிறது. இந்நோய் ஆண்களின் வாயிலாய் மகளிருக்குப் புணர்ச்சியால் பரவுகிறது. சவுக்கார கட்டி, துணி போன்றவைகளைப் பொதுவாக எல்லோரும் குடும்பத்திலோ, விடுதியிலோ உபயோகப்படுத்துவதினாலும் பரவுகிறது. மருத்துவ மனைகளிலும் கருவிகளைத் தூய்மை செய்யாமல் யோனி சோதனைக்கு உபயோகித்தாலும் இந நோய் பரவுவதற்கு ஏதுவாகின்றது.

குறி குணங்கள்:—அபரிமிதமான யோனிக் கசிவு நாற்றத்துடன் வெளிவரும். எரிச்சலையுண்டாக்கும். திடீரென்றும் உண்டாகும். முதலில் ஒரு தரம் கண்டும், விட்டுவிட்டு கண்டும் மறையும், அடுத்து அடுத்து வந்து தீவிரமாக ஆரம்பமாகும்.

பரிகாரம்:—வெள்ளைப் பாடாணத்தால் முடிந்த பற்பங்களையும், தங்கவுரம் போன்ற மருந்துகளை உள்ளுக்குக் கொடுத்து யோனியின் தாபிதத்தை நீக்கி சில பற்றுகளை மாத்திரைகள் மூலமாக யோனியில் உள்ளிடவேண்டும். சுத்திசெய்த வெள்ளைப் பாடாணம், வெங்காரம், படிகாரம் போன்றவைகளைச் சீக்கிரத்தில் கரையும்படியாக தேன் மெழுகிலிட்டு யோனிக்குள் விடலாம். வெதுவெதுப்பான வெந்நீர் யோனிப் பீச்சாக இரு வேளை கொடுக்கவும்.

இனி பூதி முனிவரின் அடியொற்றி, சில யோனி நோய்களைக் காண்போம்.

## பெண்குறிரோகப் படலம்

### 1. வாத யோனி ரோகத்தின் குணம்

சொல்லவே யல்குலிலே வாயுதங்கி
சொறசொறத்துச் சர்மமது கறுப் காணும்
வெல்லவே கிருமியது நெளிவதாகும்
வியர்வையுடன் நுரைதள்ளி சிவப்பு தோனறும்
புல்லவே கடுகையுடன் சோரிவீழும்
புகலவே யடிவயிறு கனத்தலாகும்
முல்லவே கவுட்டியது நோயுண்டாகு
மூத்தமனே வாதத்தின் யோனியாமே.

பொருள் :—வாதயோனி நோயில் அதனை ஆட்சி புரியும் நரம்புத் தாதுகள் சீர்கேடடையும். அதனால் கிருமி நெளிவது போன்ற உணர்ச்சி தோன்றும். மகளிர் தோல் சொற சொறப்புற்று, கறுட்புறும். யோனிக கசிவு சுரிகையுடன் வடியும். யோனித் தாபிதத்தைத் தொடர்ந்து கருப்பையையும் பாகிப்பதால் அவ்வுறுப்பு கனக்கவே அடிவயிறு கனத்துக் காணும். வஞ்சணகாத இடுக்குகளில் வபாக் கழலைகள் அடித்து வீங்கி வலியுண்டாக்கும்.

### 2. பித்தயோனியின் குணம்

ஆமே தான் பித்தமது வதிகமாகி
அல்குலிலே நாற்றமது மிகவே காட்டும்
தாமேதான் கறுப்புநிற மஞ்சள் போலாம்
தணியான நுரைதானுஞ் சிவந்து காணும்
வேமேதான் விரிச் சுடனே ரத்தம்பாயும்
விடாவான தாகமுடன் சுரமுண்டாகும்
போமேதானக் கினியின் சுவாலை வீசும்
பொல்லாத நூர்க்கந்தம் காணும் பாரே

பொருள்:—சுகயோனியில் சளி போன்ற பிசுபிசுத்த கசிவு உண்டு. பித்த நரம்புகள் கேடுற்றபோது யோனிக்கசிவின் சுரப்பை அதிகரித்தோ குறைத்தோ செயலாற்றுகிறது. ஆகவே இங்கு யோனிக்கசிவு அதிகமாகி துர்நாற்றத்துடன் வெளிப்பாயும். அதன் நிறம் கறுமஞ்சளாகும். யோனிக்கசிவில் கார்க்குருதியும் வெளிப்பாயும். இவைகளுடன் சுரம் காணும். நீர் வேட்கை அதிகரிக்கும்.

## 3. கபயோனியின் குணம்

பார்க்கவே சேத்துமத்தின ரணங்கள் காணும்
பாழான சீதளமு மிகுத்துக் காட்டும்
ஏர்க்கவே சீதளமுந் தினவுங் காணும்
எழிலான வேதனையு மிகப்புண்டாக்கும்
ஆர்க்க வேவல்குலிலே வெளுமை காணும்
அப்பனே நீர்க்கசிவுமதிகமாகும்
தீர்க்கவே யூகிமுனி சிகிச்சாசாரம்
தெளிவாகப் பாடிவைத்தார் திறமிதாமே.

பொருள்:—அல்குலானது வெளுத்துக் காணும், தொடுவதற்கு சில்லிட்டிருக்கும். தினவு காணும். தினவின் காரணமாக சொரிவதால் அவ்விடம் புண்ணாகும் உடனே பரிகாரம் செய்யாவிடில் அப்புண் அகல முழுதும் பரவி யோனியையும தாக்கும். இதனால் வலி வேதனை மிகவும் காணும். யோனிக் கசிவு அதிகமாகும்.

## 4. குருதி யோனியின் குணம்

திறமானவுபத்திரவ மதிகங் காணும்
தெளியாத ரத்தமுடன் சீழ்நீர்ப் பாய்ச்சல்
கறமான நுரையுடனே நோயுண்டாகும்
கடின மாஞ்சதையுடனே குத்தல் காணும்
நிறமான மஞ்சளுடன் கசரோகந்தால்
நிலையாது வல்குலிலே புழுவோமெத்த
மலமான சொல்லதுவு முளுத்தாற்போல
மஞ்ஞளுயானிறம் போல் மசக்கும்பாரே.

பொருள்:—யோனியில் அதிக வலியுண்டாகி தெளியாத குருதியும் சீழும் கலந்து வெளிப்பாயும். குத்தல் வலியிருக்கும். நமைச்சல் ஏற்படும். யோனிச் சுவரில் சிறுசிறு புண்கள் ஏற்பட்டு அவைகள் பள்ளம் விழுந்து யிளுத்த துவாரங்களைப் போல காணும். யோனித் துவாரம் பார்ப்பதற்கு உமல் நிறம் போல் காணும்.

### 5. வலியோனியின் குணம்

பசக்கான வல்குலிலே சர்மம்நைந்து
　　மகத்தான பஞ்சடித்தகளம் போலாகும்
கசக்கான யோனியது திரைந்து போகும்
　　கடினமாஞ்சதைதானு முப்பலாகும்
திசக்கானஸ் தனமது சுட்கிக் கொள்ளும்
　　தெளிவான வெண்மை நிறமதிகமாகும்
பிசக்கில்லை யூகிமுனி சிகிச்சாசாரம்
　　பேருலகில் பாடிவைத்தார் பெருமைபாரே.

பொருள்:—யோனிச் சுவரின் உள் கவசங்கள் நசைந்து பஞ்சடித்தது போல் காணும். யோனித் துவாரம் சற்றே திரைந்திருக்கும். யோனிச் சுவரின் சதைக்கவசம் வீங்கிக் காணும். ஸ்னிச் சவ்வுக் கவசம் சுருங்கிக் காணும். பார்வைக்கு வெந்நிறமாக இருக்கும்.

### 6. குருதிச்சீழ் யோனியின் குணம்

பாரேதான் வேதனையு மிகவுண்டாகும்
　　பாங்கான சீழுடனே ரத்தங்காணும்
சீரேதான் ஒழுக்குடனே நாற்றமாகும்
　　சிதறியே பலபேத வண்ணங்காட்டும்
நேரேதானிதம்பத்தின் ஸ்தானந்தன்னில்
　　நெடிதான ரோகத்தை மேவச் செய்யும்
வேரேதான் சொன்னபடி சிகிச்சாசாரம்
　　விரித்திட்டார் யூகிமுனி விளக்கந்தானே.

பொருள்:—யோனியில வேதனை மிகவுண்டாகி குருதியும் சீழும் கலந்த ஒழுக்கு விழும். துர் நாற்றமிருக்கும். சில சமயம் பலவித நிறங்களோடு கூடியும் இழியும். கருப்பைக்கும் இத்தாபிதம் பரவி கொடிய கருப்பை நோயையும் உண்டாக்கும்.

### 7. கொதிப்பு யோனியின் குணம்

தரனானவல்குலிலே கொதிப்பு காணும்
　　தாக்கான சுடுகையுடனுதிரந்தோன்றும்
யேனான கெற்பத்தில் சூடேதங்கி
　　வெளிதள்ளுஞ் சிசுவைத்தான் மேவிக் கொல்லும்
கோனான காசரோகம் விஷ ரோகந்தான்
　　குடிகெடுக்கும் சண்டாள ரோகம்பாரு
தேனான யூகிமுனி சிகிச்சாசாரம்
　　தெளிவாகப் பாடிவைத்தார் தேசத்தோர்க்கே.

பொருள்:—யோனியில் சதாகாலமும அழற்சியுற்றிருப்பதால் அது எப்பொழுதும் சூடுகையுடன் இருக்கும். இச்சூடானது கருப்பைக்கும் பரவி கருப்பை அழற்சியை உண்டாக்கும், ஏதும் பரிகாரம் செய்யாமல் போனால் அழற்சி நோய் தாபிதமாகி, கொடுமையான யோனித்தாபித நோயாக விளங்கும். அக்காலங்களில் கருத்தரித்தாலும் மகவை வாள வொட்டாமல் கொல்லும்.

## 8. சூலை யோனியின் குணம்.

பாடியேசை யோக காலந்தன்னில்
படுக்கையிலேஸ்தானமது பேதாபேதம்
நீடியேசை யோகமிகுதியாக
நேரவே விடங்கொடுக்கும் பருவகாலம்
கூடிய மாதருக்கு வாயுதங்கி
குவிக்கவும் யோனியது விரிக்கக்கூடா
நாடியே நரம்புதனில் பூவொதுங்கி
நடுக்கமாம் வேதயுஞ் சூலையாமே.

பொருள்.—அகால்காலங்களிலும், சரியான படுக்கையுமில்லாமலும் அசாதாரணப் புணர்ச்சி நிலைகளிலும், தம்பதிகள் புணர்ச்சியுற்றால் யோனியில் அழற்சியும் தாபிதமும் ஏற்பட்டு, சூலத்தால தாக்குவது போன்ற வலியை யுண்டாக்கும். ஈதன்றியும் நெடுநேரப் புணர்ச்சியாலும் சூலையோனி நோய் உண்டாகலாம். இந்நோயில் நாளடைவில் யோனித் துவாரம் குவிக்கவும் விரிக்கவும் முடியாததாகும். முடிவில் கருத் பையோ கருப்பையின் கழுத்தோ ஒதுங்கி நிற்கும். அக்காலங்களில் நடுக்கத்துடன் சூலை வலி உண்டாகும்.

## 9. சுட்க யோனியின் குணம்.

சூலையாம் ருதுகாலந்தன்னிலேதான்
சுகமாக புணர்ச்சியை விரும்பினோர்க்கும்
காலையாஞ்சை யோக விருப்பத்தாலே
கடினமாமலமூததிரச் சிக்கல் தோன்றும்
வேலையாங்கடிதடத்தில் சூம்பலாகும்
வேண்டிய வுபத்திரவமிகுதியாகும்
சேலைபோல் விழியாளே யிந்த ரோகம்
சீவியநாள் காலமட்டுஞ்சிதையாதன்றே.

பொருள்.—பூப்புக் காலங்களில் புணர்ச்சியுற்றதனால் மற்ற சுக காலங்களில் புணர்ச்சியுறும்போது கடிதடத்தில் சூம்பல் ஏற்படும். அதாவது புணர்ச்சியின்போது சுகமின்றி வலியேற்படும். மலம், சிறு நீர்ச் சிக்கல் ஆகியவை ஏற்படும், இவை தீராத நோயாக விளங்கும்.

## 10. கோழை யோனியின் குணம்.

சிதையாமல் பிரசவித்த பெண்களுக்குச்
சிறப்பான வாறாநாளே ழாநாளில்
குதையாமல் வாயுவினால் கருப்பைக்குள்ளே
கூசவே கோழைபோல் கபந்தான் வீழும்
பகையாமலுபாதியது மிகவேகாட்டும்
பளிச்சென்று வல்குலிலே கோழைவீழும்
வதையாமல் வாந்தியது யெடுத்தாற்போல்
வலித்ததுமேயுபாதியைத்தான் வகுக்குந்தானே

**பொருள்.**—பகப்பேறடைந்த ஆறு அல்லது ஏழாவது நாட்களில் சிலருக்குக் கருப்பையினின்று கோழை விழும். இக் கோழையானது திடீரென்று வலியுடன் வாந்தி யெடுத்தாற் போன்று வெளித்தள்ளப் படும்.

## 11. சிவப்பு யோனியின் குணம்.

தானானவாத பித்தகபத்தினாலே
தணியான யோனிக்குள் ளுதிரந்தங்கி
வேனான யீரமுடன் காயலாகி
வெடிப்பான சிவந்த நிறமதிலே தோன்றும்
கோனானயெரிச்சலுடன் சுட்கித் தேதான்
கொடிதானவுதிரத்தை வாட்டச் செய்யும்
தேனான யூகிமுனி சிகிச்சா சாரம்
தெளிவாகப் பாடிவைத்தார் திறமிதாமே.

**பொருள்.**—யோனியானது தாபிதமடைந்து புண்ணாகி, சிவந்து எரிச்சலுடன் காணும்.

## 12. வடியோனியின் குணம்.

தாமேதான் சதாகாலசை யோகத்தில்
சடுக்கான தும்மலையுமேவச் செய்யும்
வேமேதான் யேப்பத்தையடக்கிக் கொல்லும்
வெகுசுறுக்காம் வேதனையுங் கறுப்பு மஞ்சள்
போமேதான் ரத்தமொலிகனப்பு பேதி
பொல்லாதவரோகமுங்குத்தல் தோன்றும்
நாமேதான் பிட்டமதுகவுட்டிலேதான்
நணுகுமே சில்ரோகம் நணுகுந்தானே.

**பொருள்.**—சதாகாலமும் புணர்ச்சியுற்றோர்க்கு அடிக்கடி தும்மல் ஏற்படும். யோனிக் கசிவானது கருப்பு மஞ்சள் நிறத்துடன் வெளிப்படும். பெருங் கழிச்சல் உண்டாகும். பிட்டத்திலும் கவுட்டியிலும் குத்தல் வலியுடனும் சுரம் காணும்.

### 13. மகா யோனியின் குணம்.

நணுகவேவல்குலிலே வாயுதங்கி
நாட்குநாள் கருப்பையில் பூரித்தேதான்
அணுகவே வயந்தனிலே நோயுண்டாகும்
அல்குலிலே மாம்ஷ முமதிமாகி
கணுகவேயிடமது தான் விசாலமாகும்
கடினமாம் நோயுடனே கனத்த கோழை
நுணுகமா யூகிமுனி சிகிச்சாசாரம்
நூற்படியேயளவிட்டு நிகழ்த்திட்டாரே.

பொருள்:—கருப்பையில் ஊண்தாது பெருகி, கழலைக் கட்டிகள் உண்டாகி நாளடைவில் கொடிய கழலைக் கட்டிகளாகி அதினின்று வலியுடன் குருதி வெளிப்படும். அதனால் யோனித்துவாரம் விசால மடையும். யோனிக் கசிவு கோழையான சீழ் போலவும் குருதியுடன் கலந்து வீழும்.

### 14. நபோஜக யோனியின் குணம்.

புகழவே கருப்பருவகாலந்தன்னில்
புருஷனார் விந்ததுவுங் கனலேயாகி
நிகழவே யோனியது வெந்து புண்ணாய்
நெடுநாளில் ஸ்தனமதுவுமுலர்ந்து போகும்
இகழவே புருஷனையும் விரும்பாள் மங்கை
இகழ்ச்சியாய் சொற்பனத்தில் துதிக்கமாட்டாள்
மகிழவே யூகிமுனி சிகிச்சாசாரம்
மதிப்புடனே பாடிவைத்தார் மாந்தற்காமே.

பொருள்;—ஆண்குறி நோயுற்ற ஒருவரோடு புணர்ச்சியுற்ற மங்கையரது யோனியானது தாபிதமடைந்து புண்ணாகும். நாளடைவில் கொங்கையும் வற்றிவிடும். இந்நிலையில் அம்மங்கையர் புணர்ச்சி யையும் விரும்பார், ஆடவரையும் எறெடுத்தும் பாரார்.

### 15. அதிசரண யோனியின் குணம்.

ஆமேதானாண்குறியும் பருத்த தூணாம்
அதிகமாஞ்சையோகத்தன்மையாலே
வேமேதானல் குலிலே வீக்கங்காணும்
வேதனையுமுபத்திரவமுமிகுதியாகும்
போமேதான் சஞ்சாரமிகுதியாலும்
போக்கான பலயீன மிகுதியாலும்
நாமேதான் சொன்னபடி சிகிச்சாசாரம்
நாட்டுளோர்க்கறியவென்று நவின்றிட்டாமே.

பொருள்.—பெரிய ஆண்குறியையுடைய ஆடவன் மங்கையரை வலுக் கட்டாயமாகப் புணர்ச்சியுற்றால் யோனியானது வீங்கி வலியுடன் வேதனை யுண்டாக்கும். இதனால் மங்கையர்க்கும் சஞ்சார நோயுண்டாகும், வெளுப்பு நோய் காணும்.

## 16. தூலித யோனியின் குணம்.

நவின்றிட வேவாதா திவெஸ்துதன்னை
நட்குநாள் மிதமின்றியருந்தலாலும்
கவின்றிடவே புணர்ச்சியது விரும்பலாலும்
கலவியிலே வாயுவது மிகவேதங்கி
துவின்றிடவே தூலத்தைப் பெருக்கச் செய்து
துவாரத்தைத் தானடைத்து கடினமாக்கும்
புவின்றிட வேவலுவந்த புணர்ச்சியாலே
பிறக்குமே சோரியிட ரோகமாமே.

பொருள்.—சில மங்கையர்கள் வாதப் பொருள்களை விரும்பி நெடுநாட்கள் மிதமிஞ்சி உண்பதாலும், அளவுக்கு மீறி புணர்ச்சியை விரும்பி புணர்ச்சியுறுவதாலும் உடலானது தூலிப்பதுமல்லாமல் யோனித் துவாரமானது தடித்து கனத்துச் சுருங்கும். அக்காலத்தில் வலு வந்தமாய்ப் புணர்ச்சியுற நேரிடும். அதனால் வலியும் வேதனையும் யோனித் தாபிதமும் ஏற்படும்.

## 17. பூப்புக்கால யோனியின் குணம்.

சோரியாம் ருதுகாலப் பருவந்தன்னில்
சுகமுடனேசை யோக விருப்பத்தாலே
வாரிபோலு திரமது கெட்டுமே தான்
வாகான வல்குலிலே நிறமுங்குன்றி
மாரிபோல் சோரியது கலங்கி மிக்க
மகத்தான குத்தலுடன் கவுட்டி நோயாம்
எரிபோலிளமுதிரம் பரவிக் கொல்லும்
எழிலாகயூகி முனியெடுத்தவாறே.

பொருள்.—பூப்பு அடையாப் பெண்கள் ஆடவரைப் புணர்ச்சி செய்தால் யோனியானது தாபிதமடைந்து உதிரங் கலங்கி நிறங்கெட்டு வீழும். நடு முதுகில் குத்தல், கவுட்டியில் வலி ஆகியவை தோன்றும்.

## 18. கிருமியோனியின் குணம்.

வாறானசை யோகமிகுதியாலும்
வல்குலிலே சோரியது கெட்டு மேதான்
தூறான கிருமிகளுமிகவுண்டாகி
தொடருமே நமைச்சலுடன் விருப்பங்காணும்
நாறன நாற்ற முடனுதிரந்தோன்றும்
நவில் வேமுடியாது களையின் வேகம்
காறான யூகிமுனி சிகிச்சா சாரம்
கருதினார் லோகத்து மாண்பருக்கே.

பொருள்.—அதிகப் புணர்ச்சியால் யோனியானது தாபிதமடைந்து அதனால் கிருமிகள் அதிகம் சேர்ந்து யோனிக் கசிவை மிகுதியாக்கும். அதியோனிக் கசிவினால் யோனியில் எப்போதும் நமைச்சல் ஏற்படும். இந்த நமையுணர்ச்சியால் புணர்ச்சியில் எப்பொழுதும் விழைவு ஏற் படும். நமைச்சலைத் தவிர்க்காமல் மேலும் மேலும் புணர்ச்சியில் ஈடுபடின் துர்நாறறத்துடனும் வலியுடனும் இழியும்.

### 19. தாமரைக்கா யோனியின் குணம்.

மாண்பானதை யோகமிகுதியாலும்
மதிப்பானவாயுவது மிகவேதங்கி
பாணபானவல்குலிலே துவாரந்தன்னால்
பாயுமே வாயுமது ருட்சிகாணும்
ஊண் பானவுதிரமது தசைவைய மேவி
உற்பனமாந்தாமரைக் காய்போலே தொங்கி
வீண்பான விழுதிவிட தன்மை போல
விளைவிக்கும் ரோகமது விளையுந்தானே.

பொருள்.—மிகுந்த புணர்ச்சியால் யோனியிலும் கருப்பையிலும் குருதி சஞ்சயம் அதிகமாகின்றது. நாளடைவில் ஊண் கவசங்கள் பெருத்து தாமரைக் காயைப் போலும் ஆலம் விழுதினைப் போலும் கருப்பையின் அறையினுள் தொங்கும். அன்றியும் சில சமயங்களில் கழுந்தும் விரிந்து கொடுக்க ஆலம் விழுதைப் போலுள்ள சதைகள் யோனியிலும் தொங்கும்.

### 20. விபரீதப் புணரோனியின் குணம்

தானான மோகமதுவதிகமாகிச்
சதாகால லீலைவகைமனதிற் கொண்டு
பானானபுருஷனைத் தான் மனதிலெண்ணி
பார்வைக்குள் வைத்திருக்கும் பாவைமாற்கு
தேனானவல்குலிலே மதோற்சலந்தான
தெளியாது வெந்நீரநதியக் கமெத்த
கேடானதுர்ப்பலத்தைக் கொடுக்குமென்று
கூறினார் யூகிமுனி கூறினாரே.

பொருள்;—தக்கப் பருவமடைந்த மங்கையர்கள் அதிக காம உணர்ச்சி வயப்பட்டு நினைத்த போதெல்லாம் பலவித கலவியை மனதில் எண்ணி ஆடவனைப் புணர்வதற்கு எஞ்ஞான்றும், எண்ணத்தில் கொண்டிருந்தால் யோனியானது மிகு சஞ்சயமுற்று, தடித்து விம்மி மாறுமல் இருப்பதால் பலமிழக்கச் செய்யும்.

### கழுந்து தாபிதம்

பெரும்பான்மையாக மகளிர்களுக்குக் கழுந்து தாபிதம் மிகவும் துன்பத்தைத் கொடுக்கும்படியான தாபித நோயாகும். பிறப்புறுப்புக்களில் துன்பத்தைக் கொடுக்கும்படியான கழுந்தாகிறது. மகப்பேறு காலங்களில் கழுந்து நசைந்து விடுகிறபடியால் அதன் சுவர்கள் தடம் புரண்டு நிற்கின்றன. ஈதன்றியும் பிறப்புறுப்பு வந்தைகளாலும் கழுந்து தாபிதம் மிகச் சுலபமாக ஏற்படும். குடும்பக் கட்டுப்பாட்டிற்காக உலோகங்களினாலோ இரசாயனப் பொருள்களினாலோ செய்த கருவிகளை நீடித்த காலம் உபயோகப்படுத்தினாலும் கழுந்து தாபிதம் உண்டாகும்.

குறிகுணங்கள்;—சதா தொந்திரவைக் கொடுக்கும்படியான யோனிக் கசிவு வெளிவரும், சில வேளை, யோனியும் அகலும் அதைப்புறும். கருப்பை அறையும் தாபிதமடைவதால் பூப்புக் கசிவு அதிகரிக்கும். புச்சப் பாலிகைப் பொருத்து வலிக்கும். இதனால் குறுக்கு வலியும் பிரதிபலித்துக் காணலாம். நீர் அறுகலடைந்து சிலர் அடிக்கடி சிறுநீர் கழிவார்கள்.

கழுந்து நீண்டு பருத்திருக்கும். தாபிதமடைந்து வீக்க முற்றிருக்கும். கழுந்தை அழுத்தினால் வலிக்கும். நீண்ட காலமானால், ஆறாப்புண் வடிவு பெற்றிருக்கும்.

**கணிப்பு;**—யோனி பாகக் கழுந்து வீங்கிக் கசிவு ஏற்பட்டிருந்தால் சாதாரணத் தாபிதமெனலாம். கருப்பை பாகக் கழுந்து வீங்கித் தாபிதமடைந்திருந்தால் புற்று சம்பந்தமான நோய்க்கு ஆரம்ப நிலை என்றறியவும்.

**பிணி நீக்கம்;**—தேர்ச்சி பெற்ற மருத்துவரைக் கொண்டு பரிகாரம் செய்யவும்.

## கருப்பை உள்கவசத் தாபிதம்

**காரணம்;**—சூல் பூப்புச் சஞ்சாரத்தினால் உண்டாகிறது. முக்கியமாக சஞ்சார வந்தைகளின் படையெடுப்பால் தோன்றுகிறது. சிட கருச்சிதைவிலும் பிறப்புறுப்பு வந்தைகளாலும் அநேகமாக வருவது வழக்கமாகயிருக்கிறது கருப்பைச் சுரண்டல் முயற்சியாலும் ஏற்படலாம்.

**குறிகுணங்கள்:**—உடல் காங்கை கொள்ளும். படுக்கையிலிருத்தல். பசியின்மை, தூக்கம் கெடுதல் ஆகியவைகள் காணும். அடிவயிற்றில் கனம், பொறுமல் வலி போன்றவைகள் தோன்றும். சோதனைக்குக் கருப்பை பருத்துக் காணும். தொடுதலுக்கு வலிக்கும். ஏராளமான அழுக்குடன் சேர்ந்த குருதிக் கசிவு நாற்றத்துடன் வெளிப்படும்.

**பரிகாரம்;**—படுக்கை அவசியம். தகுந்த உணவாதிகளைக் கொடுத்து திருப்திகரமாக தூங்க வைக்கவும். கந்தக சம்பந்தமான பற்ப செந்தூரங்களைக் கொடுத்தால் மிக்க பயனைத் தரும். நல்ல பயனை உடனே அளிக்காவிட்டால் மருத்துவமனைக்கு அனுப்பிவிடுவது சாலச் சிறந்ததாகும்.

## சினைப்பைத் தாபிதம்.

சினைப்பைத்தாபிதம் முக்கியமாக, சூல் பூப்புச் சஞ்சார நோய், கருச்சிதைவு, பிறப்புறுப்பு வந்தைகளாலும் உண்டாகிறது. சில சமயங்களில் நாங்கூழ் தாபிதமடைந்து வலது சினைப்பையோடு நேரிடையாகத் தொடுவதால் அதன் தாபிதம் வலது சினைப்பையிற்கும் பரவும் கடைக் குடல், சில பாசங்களின் சிறு குடல்களின் தாபிதம் பேராவளிகையைப் பாதிக்கின்றபோது அதனோடு சம்பந்தப்பட்ட சினைப்பையையும் தாக்குகிறது.

**குறிகுணங்கள்;**—சினைப்பைத் தாபிதமடைந்த நாள் முதற்கொண்டு நோயுறுவாள்; அடிவயிற்றில் கடுகடுத்த வலி சிறுகயிருக்கும். நடமாடினாலும் வலி அதிகரிக்கும் சதா படுக்கையை நாடுவாள். மலச்சிக்கல் ஏற்படும். நாடி படபடத்து ஓடும். உடற்காங்கை உயரும். நாக்கு வரண்டு பாவு படிந்திருக்கும், பிசுபிசுத்த சளி போன்ற கசிவும் ஒழுக ஆரம்பிக்கும். தொடர்ந்தாற்போல் கழுந்தும் தாபித முற்றால் கசிவும் அதிகரிக்கும். இதனால் பூப்புக் காலங்களில் பெரும்பாடு ஏற்படும்.

ஆரம்ப நிலையில் அடிவயிற்றை அமர்த்திப் பார்க்க உதரப் பேசிகள் விரைத்து நிற்பதை அறியலாம். சிற்சில பாகங்களில் வலிக் கூச்சம் ஏற்படுவதைக் காணலாம். கருப்பையை அசைத்துப் பரிசோதிக்கையில் வலி காணும். இச்சோதனையில் வலியில்லையானால் திடமாகச் சினைப் பைத் தாபிதமில்லையென்றே சொல்லலாம். மற்ற உபாதைகள் தொடர்ந்து நேராமல் சினைப்பாதை மட்டும் தாபிதமடைந்திருந்தால், அன்றாட வேலையைச் செய்துகொண்டு காலத்தைக் கடத்துவார்கள். எனினும், உடல் நலம் குன்றிக் காண்பதை உணர முடியும். சிறு வேலையும் கடினமாகத் தெரியும். சாதாரணப் பூப்பு நிகழ்வு நடப்பது அரிது. பெரும்பாடு காணும். பூப்பு வலியும் ஏற்படும், பூப்புக் காலத்திற்கு முன்பு வலிகண்டு பூப்புக் கசிவு ஏற்பட்டவுடன் வலி நின்று விடும். சூதகவலியுடன் அடிவயிற்றிலோ, முதுகிலோ நமநம என்று வலி சிறிது இருக்கும். புணர்ச்சி வலியும் உண்டு. கழுந்திலிருந்து அதிகரித்த கசிவு வெளிப்படும்.

மேற்சொன்ன குறிகுணங்கள் இந்நோயிற்கு எல்லாமே பூர்த்தியாக இருக்கவேண்டுமென்ற நியதி இல்லை. ஓரிரண்டு முதன்மையாகவும் சில மறைந்துமிருக்கும். சிலருக்குச் சடக்குறிகள் சினைப்பைத் தாபிதத்தை உணர்த்தினாலும் மேற்சொன்ன குறி குணங்கள் கூறப்படுவதில்லை.

சினைப்பைத் தாபிதத்தை நெடுநாட்களாகப் பரிகரிக்காமல் வளரவிட்டால், கடைசியில் வெளுப்பு நோயில் முடியும். அன்றியும் சூதக வலியாலும் நிரந்தர வெள்ளை ஒழுகலாலும் மகளிர்கள் நலிவுற்று வாத நோய்களுக்கும் மனோவிகார நோய்களுக்கும் பலியாகின்றார்கள். மேலும், இந்நோயில் வருந்துபவர்கள் பிறவலிகளான குன்மம், அசதி, குடைச்சல் போன்ற வலிகளைப் பெற்றிருப்பதாகக் கூறி முக்கிய நோயிற்கான பிணி நீக்கத்தை இழக்கிறார்கள். இதனையும் கவனிக்கத் தக்கதாகும்.

சினைப்பாதைத் தாபிதம் என்று கண்டவுடன் தகுந்த மருத்துவ மனைகளுக்கு அனுப்பிவிடுவது நன்று.

## புணர்ச்சி நோய்கள்.

### 1. மகளிர் கொருக்குநோய்.

கொருக்குப்புண்;—இப்புண் சாதாரணமாக கழுந்திலும், அகல் போன்ற இடங்களிலும் கொங்கைக் காம்பு, விரல், உதடு போன்ற உறுப்புக்களிலும் முக்கியமாக வருவதைக் காணலாம்.

கொருக்குப்புண் மற்றப் புண்களைப் போலல்லாமல் அடிகனத்தும் நடுவில் பள்ளம் விழுந்தும் பித்தான் போன்ற தட்டையான உருவமாகவுமிருக்கும். புண்ணிற்கு அருகாமையிலுள்ள வபாக்கழலைகள் பருத்து வீங்கும். வலியிராது.

கொருக்கு நோயின் பொது குறிகுணங்களைச் சித்த மருத்துவ நூலில் காண்க. பரிகாரமும் அங்குக் கண்டு கொள்க.

## 2. மகளிர் வெள்ளை நோய்,

வெள்ளை ஒழுக்கானது புணர்ச்சி நோய்களில் ஒன்றாகும். பெரும்பான்மையாக மனித சமுதாயத்தைச் சுற்றி இந்நோய் பற்றிக் கொண்டிருப்பதைக் காணலாம். இவைகள் பிறப்புறுப்புக்கள் வந்தைகளினால் உண்டாகிறது. நுண்ணிடையான இருபிருக்க வடிவமுள்ள வந்தைகளாக இருக்கின்றன. இந்நோயுள்ள கழுந்துக் கசிவைச் சோதித்தால் அதில் பிறப்புறுப்பு வந்தைகளிருந்தால் வெள்ளை நோய் என்று திடமாகச் சொல்லலாம்.

பொதுவாக, புணர்ச்சியினால் இந்நோய் ஆண்களிலிருந்து பெண்களுக்கும், பெண்களிலிருநது ஆண்களுக்கும் பரவும். நோயுற்ற பெண்களுக்க உபயோகித்த கருவிகளைச் சரிவர சுத்தம் செய்யாமல் மற்ற மகளிரைச் சோதனை செய்யும்போது இவைகளை உபயோகிப்பதாலும் இந்நோய் பரவும். பள்ளிக்கூடங்களில் குழந்தைகளுக்கும், மருத்துவ மனைகளில் மகளிர்க்கும் இந்நோய் சுலபமாகத் தீவிரமாகப் பரவும்.

**குறிகுணங்கள்:**—குறிகுணங்கள் எந்தெந்த உறுப்புக்களைப் பற்றியதோ அந்தந்த உறுப்புக்கேற்றதாக உள்ளன. பெரும்பான்மையாக அகல் யோனி, சலவாகி, கழுந்து, கருப்பைக் காண்டம், சினைப்பை, விரேகி ஆகியவைகள் பாதிக்கப்படுகின்றன.

**கணிப்பு;**—மகப்பேறு இல்லாமலும், கருச்சிதைவு இல்லாமலும் திடீரென்று வலியுடன் வெள்ளை ஒழுக்குக் காணுமேயானால் பிறப்புறுப்பு வந்தைகளால் ஏற்பட்ட வெள்ளை ஒழுக்கு நோய் என்று கொள்ள வேண்டும். கழுந்துக் கசிவைச் சோதித்துப் பார்த்துத் திடப்படுத்தலாம்.

# அத்தியாயம் 11

## மகளிர்க்கு ஏற்படும் சில நோய்கள்

### சிறுநீர் வேகக் கோளாறுகள்

மகளிர் பிறப்புறுப்புக்கள் நோய்வாய்ப்பட்ட போதும் அவை அறுவை சிகிச்சைக்கு உட்பட்ட போதும் சிறுநீர் வேகம் மிகவும் பாதிக்கப்படுகிறது. சலப்பையானது கழுத்து முகம், யோனி முன் சுவர் ஆகியவைகளோடு நெருங்கிய தொடர்பாய் அமைந்துள்ளது. கூபகமாக, சலவாகியானது கூபகக் கழலைகளோடு சரிந்துபோகும். ஆகையினால் மகளிருக்கு ஏற்படும் சிறுநீர் வேகக் கோளாறுகளை அறிந்துகொள்வது அவசியமாகும்.

மகளிருக்குச் சிறுக சிறுக அடிக்கடி சிறுநீர் அறுகல் ஏற்படுவது வழக்கமாக உள்ளது. அதன் காரணங்களைக் கீழ்க்கண்டவாறு வகுக்கலாம்;—

(1) சிறுநீரின் மாறுதல்கள்

(2) சிறுநீர்ப்பாதையின் காயங்கள்

(3) சிறுநீர்பாதையின் வெளிப்பாக காயங்கள்.



படம் 22—கருப்பை அடி தள்ளல்



படம் 23—கருப்பை பின் சாய்தல்



படம் 24—கருப்பை பின் சாய்தல்

(1) சிறுநீரின் மாறுதல்கள்:—

சிறு நீரில் அதிகப்படியான உப்புக்கள் தோன்றியிருந்தால் சலப்பையின் உட்சளிச் சவ்வை எரிச்சலுக்கு உட்படுத்துகிறது. அதனால் சலப்பை எரிச்சலுற்று சிறுநீர் வேகம் மிகுந்து சிறுகச் சிறுக அடிக்கடி சிறுநீர் கழிய

(2) சிறுநீர்ப்பாதையின் காயங்கள்:—

வந்தைகள் சலப்பையினுள் நுழைந்துவிட்டால் சலப்பைத் தாபிதம் ஏற்படும். வந்தைகள் நுழைவதற்கு அநேக காரணங்களுண்டு. அவைகள் பின்வருமாறு:—

(1) மகப்பேறு காலங்களிலோ அல்லது பிறப்புறுப்புகளின் அறுவைப் பரிகாரத்தின் போதோ சலப்பை காயமடைதல்.

(2) அன்னியப் பொருள்கள் அதாவது சலவாசிக் கருவியை அடிக்கடி பிரயோகிப்பதாலும் சலப்பைச் சஞ்சார நோய் ஏற்படும்.

(3) சலப்பை யோனி பகந்தரம், பிறப்புறுப்புகளில் தசை வளர்ச்சிகள், சலப்பைப் புற்று நோய் போன்றவைகள் சலப்பைத் தாபிதத்தை உண்டாக்குகின்றன.

குறி குணங்கள்:—கீழ் வயிற்றில் நமநமவென்ற வலி; அமர்த்தல் சோதனைக்கு வலிக் கூச்சம் ஏற்படும்; பகலிலும் இரவிலும் சிறு நீர் அறுகல்; எப்பொழுதும் சிறுநீர் கழிய வேண்டுமென்ற அவா, சலப்பை சுருங்கி இருக்கும் சமயத்தில் வலி; சிறுநீர் கழிந்தவுடன் அடிவயிற்றில் வலி, சலவாகியும் தாபிதமடைந்திருந்தால் சிறுநீர் கழியும்போது நெருப்பு அனல் போன்ற எரிச்சல் ஆகியவை காணும். ஆரம்பத்தில் சுரம் காணும். நாட் செல்லச் செல்ல உடற் காங்கை அதிகரிக்கும்.

சிறுநீர் பிசுபிசுத்து, சற்றுத் தடிப்பாகக்காணும். அநேக, கீழ் விலங்கள் வந்தைகள், தடித்த சீழ் போன்றவைகள் சிறுநீரில் காணலாம்.

பரிகாரம்:—சுரக் காலங்களில் சுரத்துக்கான பரிகாரம் செய்து சிறு நீரின் கலங்கலைத் தெளிய வைக்க வேண்டும். நெய் சட்டிக் கீரை தைலம் நீர் முள்ளிக குடிநீர் போன்றவைகளைத் தக்க அளவில் உள்ளுக்குக் கொடுக்கவும்.

(3) சிறுநீர்ப் பாதையின் வெளிப்பாக காயங்கள்:—

கூபகத்தில் யாதாவதொரு உறுப்பில் வீக்கம் ஏற்பட்டால் சலப்பையின் மீது அழுத்தம் ஏற்படுகிறது. இதற்கு எடுத்துக்காட்டாக சூல் கொண்ட கருப்பையை கூறலாம். சூல் கால ஆரம்ப காலங்களில் கருப்பை, சலப்பையை அழுத்துகிறது: அன்றியும் சூல் கால முடிவில் மகவின் தலை கூபகத்தில் நுழையும் போதும் சலப்பையைப் பெரிதும் அழுத்து கிறது. இவ்வழுத்தம் சலப்பையை அதிகமாக எரிச்சல் கொள்ளச் செய்கிறது. அதனால் சிறுநீரைச் சிறுக சிறுக அடிக்கடி இழியச்செய்கிறது. ஈதன்றியும் கருப்பைக் கழலைக்கட்டிகள் அல்லது சினைப்பைக் கழலைக் கட்டிகள் இவ்வாறே செய்கின்றன.

(4) வலியோடு கூடிய சிறுநீர் வேகம் .—

சலப்பைத் தாபிதத்தில் பொதுவாக சிறுநீர் கழியும் போது வலி இருக்கும். அதனோடு சலவாகியும் தாபிதம் அடைந்தால் வலியிருந்து காணும். சலவாகித் தாபிதம் முதன்மையானால் வலி மாத்திரம் இருக்கும். சிறுநீர் அறுகல் இராது. அகல் நோய்களில் வலியுடன் கூடிய சிறுநீர் கழிதல் ஏற்படும்.

## நிதம்பசூலை

தயங்குகின்ற நிதம்பமாம் சூலை தன்னைச்
சாற்றிடவே பிள்ளையது தனைப்பெற றக்கால்
உயங்குகின்ற யோனிவாய் வருத்த மாகி
உள்ளடக்கி சலமிரத முளைத்தேங் காய்போல்
அயங்குகின்ற யோனிவாய டைத்துக் கொண்டு
அசைக்கிலக்கு நீர்ப்பெருகி சகனத் துள்ளே
மயங்குகின்ற சரீரமெல்லாம் வாடி வூதி
மாசற்ற சடந்தாலும் வெளுப்பு மாமே.

பொருள்:—மகப்பேறுக்குப் பின் சூல் பூப்புப் பராமரிப்புச் சரிவர கடைபபிடிக்காவிடில் யோனிவாய் மெலிவடைந்து தேங்காய் முளைகளைப் போல் காம்புக்கழலைகள் ஏற்படும், முதலில் கழுந்து அறையினில் தோன்றி பிறகு கழுந்து முகத்தினூடே பிதுங்கி யோனியினுள் தொங்கும். நாளடைவில் பெருத்து யோனியையும் அடைத்துக்கொள்ளும் பூப்புக் காலங்களில கருப்பையில் தாங்கொணா வலியுண்டாகும். உடம் பெல்லாம் ஊதி வெளுத்துக் காணும்.

## கர்ப்ப சூலை

பாச்சல் கெற்பசூலையினைப் பகரக் கேளாய்
பண்பான மருந்தீட்டின் குணத்தினாலும்
வாச்சவஞ்சலையாலும் சூனியத்தாலும்
மாசற்ற காயமது வேட்கையாலும்
பீச்சவே மகப் பேறிலு திரத்தாலும்
பிரண்டு சிக்கிக் கீழ்வயிற்றில் வலி ரத்தம் வீழ்ந்து
கேச்சலாய்க் கெற்பம் போற்பிரள் வற்றூறிக்
கீழ்வயிற்றில் வலி தோன்றி மயக்கமாமே.

பொருள்;—மருந்தீட்டினாலும், வஞ்சனையாலும், சூனியத்தாலும், காம வேட்கையால் மாசற்ற காயம் ஏற்பட்டதாலும்; மகப்பேறு காலத்தில் ஏற்பட்ட உதிரசலையாலும் கருப்பை பெயர்ந்து பிரண்டு சிக்கி, கீழ்வயிற்றில வலித்துக்காணும. பிறகு குருதிக் கசிவு உண்டாகும்.

## தூரசூலை

கீழ்வயிற்றிற்று ரமாஞ்சூலை கேளாய்
கெடியுண்டிமறுத்தமே வாய் நீறூறிப்
பாழ்வயிற்றில் செரித்த தீரல் பற்றிப்
பக்கமன்றிச் சிரத்தோடு வயிறு மூதி
ஆழ்வயிற்றிற்றிரண்டுமே பிரள்புற்றே தான்
அடிக்கடி வந்தமர்ந்றெழதுங்கியெழும்பி மீளுங்
கீழ்வயிற்றில் வெளிப்பட்டு திரஞ்சிக்குமே
கிளத்துமலாலதானுஞ்சிக்கிப் போமே.

பொருள்;—பூப்புக் காலத்திற்கு முன்னரோ, பின்னரோ அல்லது பூப்பு நிகழ்வு காலத்திலோ ஏற்படும் பூப்பு வலியைத் தூரசூலை என்பர். பசியின்மை, உணவைக் கண்டால் மறுத்தல் போன்றவைகள் கண்டு குடல் புரட்டல் போல் அடிவயிற்றில் வலியுடன் புரளுவதைப் போலவும், அவ்வாறு புரண்டு அடிவயிற்றை மூட்ட அமருவதைப் போலவும் தென்படும் மறுபடியும் மீளும்.

## கர்ப்பக் கிராணி

வளைச்சுமே வயிற் கழியுங் கடுப்புண்டாம்
வாடியே கால்கையு மவெச் சென்றாகும்
களைச்சுமே கண்தானுமஞ்சளாகும்
கழியுமே பலவிதமாய்க் கடினதாகம்
உளைச்சமே வெப்பந்தானுயருங்காலம்
உருவன்னம் வரந்திபாயமலையாகும்
முளைச்சமே கர்ப்பந்தான் கீழே வீழில்
முடுகாது கர்ப்பமாங்கிராணி தானே.

பொருள்:—மகப்பேறுக்குப் பிறகு பத்திய உணவுகளை உண்ணாமல் வாடிக்கையான உணவை உடனே உண்ண ஆரம்பித்தவர்க்குக் கழிச்சல் ஏற்படும். கடுப்புண்டாகும். கால், கை ஓச்சலாகும். விரைவில் பரிகாரம் செய்யாவிடில் கண் மஞ்சளித்து, காமாலை நோய் உண்டாகும். பலவித வண்ணங்களாகக் கழிச்சல் இழியும். உளைச்சல், வெப்பம், வாந்தி முதலியவைகள் காணும். அடிக்கடி முக்குவதால் கருப்பையும் கீழே இறங்க ஏதுவுண்டு.

## சூல்மகோதரம்

மகோதரம் போற் சூலான மங்கையர்க்கு
மாவருத்தமுண்டாகி மயக்கமாகும்

அகோதரமாயங்க மெல்லாம் மழர்சியாகும்
அன்னந்தான் சொல்லாத தண்ணீர் வேண்டும்

சகோதரமாங்கால்கையுஞ் சந்து வீங்கும்
தழலான காச்சலொடு அரூசியாகும்

உகோதரமாயுடம்பெல்லா முளைச்சலாகும்
உற்றசூல் மகோதரத்தினுண்மைதானே.

பொருள்:—மங்கையர்க்குச்சூல் குறிகுணங்களோடு மகோதரம் காணும். யூகக் குறி குணங்களாகப் பெரும்பாலும் காணப்படும். உண்மையில் இது சூல் நிகழ்ச்சியல்ல. அம்மாது கர்ப்பிணியல்ல. கர்ப்பிணியைப்போல் மங்கையர்க்குக் காணுவதைச் சூல் மகோதரம் என்பர். இந்நோயில் தொந்தியில் நீர் சேர்த்துப் பெருத்துக்காணும், மயக்கம், பசியின்மை, சுவையின்மை, உடம்பெல்லாம் குடைதல், கைக்கால் பொருத்துக்கள் வீங்குதல், தாகம் அதிகரித்துக் காணல் போனற குறி குணங்களும் இருக்கும் என்றறியவும்.

## மாமிச மகோதரம்

போக்கான மாமிசந்தான் வளர்ந்து மீறி
பொருமியே அடிவயிற்றில் கல்லைப் போலத்

தாக்கான சடந்தானுமுலர்ந்து வற்றித்
தவிக்குமேயடிக்கடி தான் கண்ணீர் தேடி

வாக்கான மதுரமொழி குளறிப் பேசி
வாய்வு நானடிக்கடிக்கு மேலே நோக்கும்

நீக்கான மலசலமதில் மாமிசங்காணும்
நேரான மாமிசமகோதரத்தினேரே.

பொருள்.—மங்கையரின் கருப்பையில் மாமிசம் வளர்ந்து அடிவயிற்றில் கல்போன்று உருட்டி காணும். மிக்க கண்ணீர் வடியும்படியான துன்பவலி உண்டாகும். சதா வலியிருப்பதால் வழக்கமாகப் பேசுவதைப் போலல்லாமல் துன்பத்தில் பேசுவதைப் போல் பேசுவார்கள். யோனிக்கசிவில் மாமிசத் துண்டுகளும் விழக்காணலாம். சில சமயம் சிலருக்கு யோனி விரேசி பகந்தரமேற்பட்டிருந்தால் மலத்திலும் மாமிசத்துண்டுகள் காணப்படும்.

# அத்தியாயம் 12

## வன் கழலைகள், புற்று நோய்கள்

### 1. தசை வன்கழலைகள்

**கருப்பைத் தசைக் கழலை.**—கருப்பையின் சுவரில் பொதுவாக தசை வன்கழலைகள் புதிதாக வளர்வது இயற்கை நியதியாகவுள்ளது. தசைக் கவசத்தில் மிக விரைவாக வளர்கிறது. அவ்வளர்ச்சியானது ஒரே தரமாக இருப்பதில்லை. சில சிறிய தானியங்களைப் போலவும் சில அதி விரைவாக வளர்ந்து உந்தி முழுவதும் பருத்தும் வளரும். பெரும்பாலும் வன் கழலைகளாகவே இருக்கும். முக்கியமாக கழலைகள் மெல்லிய சவ்வு போன்ற உறையால் மூடப்பட்டிருக்கும். இவ்வாறு கருப்பைத் தசைக் கவசத்தினுள் அதிவிரைவாக வளர்ந்து கொண்டே வருகின்றபோது கருப்பைச் சுவர் மெல்லியதாகின்றது. அதனால் வன்கழலைகள் கருப்பை அறையினுள்ளோ அல்லது கருப்பை வெளிக் கவசத்திற்கு வெளியிலோ பிதுங்கியது போல காணும்.








காரணம்:—இது உண்டாகும் காரணம் இன்னும் தெளிவாகத் தெரியவில்லை. தற்கால ஆராய்ச்சியின் பயனாக சினைப்பைச் சத்துதான் காரணமாகின்றது என்று கூறியுள்ளனர். பண்டைக் காலத்தில் கர்ப்பநோயின்பால் சேர்க்கப்பட்டுள்ளது. இவ்வன்கழலைகள் தாய்மை கொள்ளும் காலங்களில் ஆரம்பமாகின்றன. ஆனால் அவ்வமயம் வளர்வதில்லை. பூப்பு முடிவடைந்ததும் முன்பே வளர்ந்து கொண்டிருந்த வன்கழலைகள் திடீரென்றோ சற்று நிதானமாகவோ வளர்ச்சியடைகின்றன. இவைகள் பூப்பு முடிந்ததும் புதிதாகத் தோன்றி வளர்வதில்லை என்று மட்டும் கவனிக்கவும். பூப்பு நிகழ்கின்ற காலங்களில் தீவிரமாகத் தோன்றாமல் பூப்பு முடிவடைந்ததும் தன் சுய குணத்தைக் காட்டி விடும். கருத்தரிக்காத மகளிரிடமே பெரிதும் காணப்படுகின்றன. தசைவன் கழலைகள் கழுந்து முகத்திலும் ஏற்படலாம்.

முடிவு:—தசை வன்கழலைகள் மெதுவாகப் பருத்து வளர நெடு நாளாகும். சிலருக்குக் குறிகுணங்கள் ஒன்றுமேயில்லாமல் அதிகமாகப் பருக்காமலும் சில ஆண்டுகள்வரை வளரும். சிலருக்கு அதிவிரைவில் பருத்து வளர்ந்து தீவிர குணங்களைக் காட்டும். பெரும்பாடு காணும் சிறுநீர் அடிக்கடி அறுகலாகும். கருத்தரித்தால் வன்கழலைகளை அதிகமாக வளரச் செய்யும். பூப்பு முடிவில் கழலைகள் சுருங்கிக் குறையும். ஆனால் சிலருக்குப் பற்பல விதமாக முடிவடைகின்றன. முக்கியமாக உக்கிர மாறுதல்களை அடைகின்றன. அதாவது உக்கிர வன்கழலைகளாக மாறுகின்றன.

ஆகையினால் தசை வன்கழலைகள் தோன்றுவது புற்று நோய்க்கு முன்னோடிகளாகத் தோன்றுகின்றன.

வன்கழலைகள் வளர வளர கருப்பையும் அவைகளோடே பெருத்துக் கொண்டே செல்லும். கருப்பை அழுத்த முறுகிறது. சிறுநீர் அறுகல் ஏற்படும். கால்களில் நாளங்கள் புடைத்துக் காணும். மூலம் தென்படும்.

## குறிகுணங்கள்

தசை வன்கழலைகள் சிறியதாக உள்ளபோது மகளிருக்கு யாதும் குறிகுணம் காட்டுவதில்லை. அது பெரிதாக வளர்ந்து உந்தியையும் சேர்த்துப் பெருவயிறாகக் காணும் போதுதான் நோயாளியின் கவனத்தை ஈர்க்கிறது. அமர்த்தலுக்குக் 'கல்' போல் உறுத்தும் கழலைகள் எதும் வலியைத் தோற்றுவிப்பதில்லை. சில சமயங்களில் முதுகு வலித்தும் உடல் கனத்தும் காணும். முன்பெல்லாம் பூப்புக் காலங்களில் வலியில்லாமலிருந்து இப்பொழுது வலி காணும்.

குருதி ஒழுக்கானது, மகளிர்கள் மருத்துவரைப் பரிகாரத்திற்காக நாடச் செய்கிறது. இங்கு இடைப்பூப்பில் நிகழும் குருதிப் பெருக்கு அளவும் காலமும் நாளடைவில் அதிகரித்துக் கொண்டே செல்லும். இதனால் வெளுப்பு நோய் உண்டாகி உயிருக்கே ஆபத்துண்டாகும். மூச்சு வாங்கல், மார்பு படபடத்தல், அசீரணக் கோளாறுகள் ஆகிய குறி குணங்கள் வலுத்துக் காணும். நாற்பது வயது கடந்த மகளிர்

தங்களுக்குப் பூப்பு முடிவு காலம் நெருங்குகிறது, இனி நோயினால் உபாதையிருக்காதென்று எதிர்பார்ப்பார்கள். அதற்கு நேர்மாறாக, குருதிப் பெருக்கும் அதிகரிக்கும். எதிர் பார்த்ததில் தோல்வியுறுவார்கள். வன்கழலையினால் பெரும்பாடு உண்டானவர்களுக்குப் பூப்பு முடிவு 55 வயதிற்குத் தள்ளிப் போகும். யோனிக் கசிவு அநேகமாகயிருப்பதில்லை. சிற்சில கருப்பை நோய்களும் தொடர்ந்திருந்தால் துர்நாற்றத்தோடு கூடிய யோனிக் கசிவு ஒழுகும். சூதகவலியைத் தவிர மற்றவிதமான வலிகள் காணா.

**கணிப்பு** :—கருப்பைத் தசை வன்கழலைகளைக் கீழ்க்கண்டவைகளி லிருந்து பிரித்து நோயைக் கணிக்க வேண்டும். அவை;—

1. **கருப்பைத் தாபிதம்**;—இதில் மூன்று மாதத்துச் சூல் கருப்பை வளர்ச்சிக்கு மேல் காணப்படுவதில்லை. இடைப்பூப்பு, சூதகவலியோடு காணும்.

2. **சினைப்பைக் கழலை**:—பூப்பு நிகழ்ச்சியில் கோளாறுடன் ஆரம்பமாகும். கருப்பைத் தசைக் கழலைகள் நிதானமாக வளரும். சினைப்பைக் கழலை அதிவிரைவாக வளரும். இது கல்லைப்போல் கடினமாகவும் தொடர்ந்தாற் போல் நீர்ப் பெரு வயிறும் காணும்.

**கூப தாபிதக் கழலைகள்**:—கருப்பையில் ஏற்படும் தாபிதக் கழலைகள் மிகவும் கடினமாகவும் கருப்பையோடும் ஒட்டிக் கொண்டிருக்கும் கீடகக் கருச்சிதைவு, சஞ்சாரச் சூல்பூப்பு, வெள்ளை போன்றவைகளே இந்நோய் உண்டாகக் காரணமாகின்றன. இடைப்பூப்பு நிகழும். அமர்த்தலில் வலிக்கூச்சம் போன்றவைகள் தோன்றினால் வன்கழலை என்று கணிக்க இடமில்லை.

**சூல்** :—சினைப்பைக் கழலை ஒன்றினிடத்து மட்டுமே சூல் கொண்ட குறிகுணங்களையுடையதான ஒற்றுமை காணலாம். ஆரம்ப நிலையில் குழப்பம் உண்டாகலாம். சில மாதங்களுக்குப் பிறகு சூல் கொண்டதா அல்லது சினைப்பைக் கழலையா என்று கணிக்கலாம்.

**பரிகாரம்** :—அனுபவமும் தேர்ச்சியும் பெற்ற மகளிர் மருத்துவரிடம் அனுப்பிவிடுவது நலம்.

## காம்புக் கழலை

கருப்பையின் உள் கவசத்தினின்று தேங்காய் முளைகளைப் போல் தனித்தோ பலவோ வேர் விட்டுத் தோன்றுவதைக் காம்புக் கழலை என்பர்.

அநேகமாக, குறிகுணங்கள் சிலருக்கு அறியப்படுவதில்லை. ஆனால் புணர்ச்சிக்குப் பின்பும் யோனிப பீச்சுக்குப் பின்பும் அல்லது யோனி சோதனைக்குப் பின்னும் குருதிக் கசிவு ஏற்படுவது வழக்கமாக வுள்ளது. சில வேளை, சளிக் கசிவும் உண்டாகும். பெரிய காம்புக் கழலைகளை யோனி சோதனையில் காணலாம். சிறியவைகளை யோனி விரிவுக் கருவியினால் சோதிக்கும்போது காணலாம். சாதாரணக் காம்புக் கழலைகளானால் அறுவை சுட்டிகை போன்ற பரிகாரங்களால் பரிகரிக்கலாம். உக்கிரக் காம்புக் கழலைகளானால் புற்று நோயாக மாறும். காம்புக் கழலைகளை நன்றாகப் பரிசோதித்து அவைகள் சாதாரணக் கழலைகள் என்று தெளிவாகக் கணித்த பின்பே அறுவையோ, சுட்டிகையோ செய்ய வேண்டும்.

## கருப்பைப் புற்று

மகளிர்களுக்குக் கருப்பையும் கொங்கையும் பெரும்பாலும் புற்று நோயால் பாதிக்கப்படுகின்றன. கருப்பைக் காண்டத்தையோ கருப்பைக் கழுந்தையோ மிகவும் சுலபமாக, புற்று நோய் பற்றுகிறது.



படம் 28—கழுத்துப் புற்று



படம் 29—கருப்பைப் புற்று

## கழந்துப் புற்று நோய்

கழுந்தப் புற்றுநோய் பெரும்பாலும் 45 வயது முதற்கொண்டு 55 வயது வரையுள்ளவர்களுக்குக் காணப்படுகிறது. பொதுவாக மகப்பேறுற்றவளுக்கே பிரத்தியேகமாகக் காணப்படுகிறது. கன்னிகளுக்குக் காண்பது அரிதாகும்.

**குறிகுணங்கள் :**—முதற்கண் ணுண்டாகும் குறி குணம் குருதி ஒழுக்காகும், முதலில் ஒழுங்கற்றதாகும். சிறுநீர் இழியும்போதும் புணர்ச்சியின் போதும் யோனிப்பீச்சுற்ற போதும் குருதி ஒழுக்காகக் காண்பார்கள். பூப்பு

நிகழ்ந்து கொண்டிருக்கிற வயதில் குருதி ஒழுகலேற்பட்டால் மகளிர் வாடிக்கையான பூப்பு நிகழ்வு என்று கருதுவார்கள். மற்றும் சிலர் பூப்பு முடிவின் கோளாறுகள் என்று வாளாவிருந்துவிடுவார்கள். இவ்வாறான தவறான கருத்துக்களால் இந்நோயை வளரவிட்டு மருத்துவரிடம் வாராமல் ஒதுங்கியே இருப்பார்கள். ஈதன்றியும் புற்று நோயால் வரும் குருதிப் பெருக்கு வலியுள்ளது என்ற தப்பெண்ணத்தால் ஒழுங்கற்ற குருதிப் பெருக்கையும் கவனியாமல் அசட்டையாக இருப்பார்கள். எனினும் பூப்பு முடிவுற்ற பின் குருதிப்பெருக்கு வருமேயானால் மிகவும் தீவிரமான உக்கிர நோய் என்று கருதவேண்டும்.

அடுத்தாற் போல் கசிவு தோன்றும். முதலில் தின்மையான நீர் போன்றும் கசிவுற்ற பிறகு துற்நாற்றத்துடன் வெளிவரும், நோய் முற்றினபோது வலியுண்டாகும். புற்றுநோய் அதிகரிக்க அதிகரிக்க குருதிப் பெருககுச் சர்வசாதாரணமாக இருந்துகொண்டே இருக்கும். யோனித் கசிவும் அதிகரித்து மிகுந்த துற்நாற்றத்துடன் வெளிப்படும். முதுகு குறுக்கு வலியுண்டாகும். கடைசியாக நீர் அறுகல் ஏற்பட்டு பிறகு மலசலமும் வெளித் தள்ளப்படாமல் தங்கிவிடலாம். மரணம் சம்பவிக்கும்.

பரிகாரம்:—புற்று நோய் என்று கணித்தவுடன் மகளிரை மருத்துவ விடுதிகளுக்கு அனுப்பிவிடுவது சாலச் சிறந்ததாகும்.

### மகளிர் நோய்களினால் ஏற்படும் மனோவிகற்பங்கள்

சாதாரணமாக, மகளிர் மருத்துவர் தன் மருத்துவ விடுதிக்கு வரும் மகளிர்களைப் பரிசோதிக்கும்போது பிறப்புறுப்புகளில் கோளாறுகள் ஏற்பட்டிருப்பின் அந்நோயினைக் கணிப்பதில் சிறிது நேரம் ஆகின்றது. உதாரணமாக, கருப்பை இறங்கியிருக்குங்கால் பரிசோதனையில் நோயினர் வெகுவிரைவில் நோயின் குறிகுணங்களைக் கூறிவிடுவர். அதற்கான அறுவைப் பரிகாரத்திற்கும் உடனே இணங்கிவிடுவர். எவ்வித தயக்கமும் கொள்வதில்லை. ஆனால், வெளிப்படையாக, தெரியாத குறிகுணங்களையுடைய மற்றைய மகளிரைப் பரிசோதிப்பதற்கு மிக்க நேரம் ஆகும். இவர்கள் பற்பல இனம் புரியாத குறிகுணங்களைக் கூறி மருத்துவரைக் குழப்புவார்கள் நேரத்தையும் வீணாக்குவார்கள். ஆனால் திறமையான மருத்துவர்கள் இவர்களிடம் நேரத்தை வீணாக்கினோமே என்று கருதுவது தவறாகும், இவ்வகையான நோயுற்ற மகளிர் உந்தியில் வயிறு பொறுமல், வலி, புரட்டல் போன்ற குறிகுணங்கள் சதா உளது என்று கூறுவார்கள். ஆனால் அவர்கள் நன்கு உணர்ந்திருந்த குறிகுணங்களாகிய குருதிப்பெருக்கு, அடிக்கடி சிறுகசிறுக சிறுநீர் கழிதல், முதுகுவலி போன்றவைகளைக் கூற மாட்டார்கள். மருத்துவரே அரும்பாடுபட்டு கேட்டு அறிந்து கொள்ளவேண்டுமே தவிர அவர்களாகவே கூறுவது கடினம். மேலும் தலைவலி, சோர்வு, அவா போன்றவைகள் கண்டிருந்தும் அவைகளை நோயின் குறிகுணங்களாகக் கருதாததால் மருத்துவரிடம் கூற விரும்பார்கள். இன்னும் சிலர் வினோதமான சிக்குமுக்கலான குறிகுணங்களையும் கூறுவார்கள். இம்மாதிரியான நோயினரிடத்து "சதா நோயினால் துன்புறுவர். ஆனால் நோயினர் அல்லர்" என்ற தத்துவத்தைக் கையாள்வதா?

நீண்ட நேர அபிநய குறிகுணங்களைக் கேட்டு மருத்துவர் உடனே உடலுறுப்புகளில் ஏதோ தீவிர கோளாறு ஏற்பட்டுள்ளது என்று தீர்மானம் செய்தல் ஆகாது. சட பரிசோதனை செய்து முடிந்த பிறகே நோயினைக்

கணிக்கவேண்டும். இல்லையேல் ஆபத்துக்குள்ளான பிழை ஏற்படும் என்று அறியவும். உடலுறுப்புகளில் நோயுற்ற மகளிர்கள் கூட அபரிமிதமான மனோகிளர்ச்சிகளால் எப்பொழுதும் முழுமனதார எதையும் சொல்லமாட்டார்கள். மணமாகாத மங்கையர்கள் பூப்புக் காலங்களில் ஏற்படும் சூதகவலியை வெளிப்படையாகக் கூறினால் ஏதோ கருப்பை நோயினால் அவதியுறுகிறாள் என்று பிறர் எண்ணினால் மணமாவதற்குத் தங்கட்குத் தடை ஏற்படும் என்று அஞ்சுவதாலும், திருமணமானவர்களாயிருப்பின் மகப்பேறு எய்தாமல் போகுமோ என்ற நினைப்பாலும் சுய குறிகுணங்களைக்கூறார். குழந்தை பெறாத மலடுகளும் இவ்வாறே. இவ்வித எண்ணங்களை எல்லாம் தவறாக உணர்த்தியவர்கள் அவர்கள் தோழிகளும், நண்பாகளுமேயவர் நன்றாக சடபரிசோதனை செய்து முடித்த மருததுவர் இவைகளைக் களைந்து அவர்களுக்கு ஆறுதல் கூறுவது முதற் கடமையாகும். இவைகளைவிட இன்னும் சில எண்ணங்கள் சிலரிடம் மனதில் வேரூன்றியிருக்கும். அவைகளை ஆய்வது மனோதத்துவ ரீதியாகும். மகளிர் மருத்துவ மனைகளில் மகளிர் நோயினரைக் கூர்ந்து கவனிக்குமளவில் அவர்கள் மனோ கிளர்ச்சி விவகாரங்களையுடைய சிக்கல்களைச் சடக்குறிகளாக வெளிப்படுத்துகிறார்கள் என்றாலும் இவ்வகையான உண்மையான மனோ விகர்ப்ப எழுச்சிகள் சடக் குறிகளாக உள்ளிடைச் சுரப்பிக் கோளங்களின் கோளாறுகளினால் ஏற்படும் என்றும் அறியவும். முக்கியமாக, சூதகத் தடை, பெரும்பாடு போன்றவைகள் காணலாம்.

மகளிரின் மனோதத்துவத்தை விளக்கமாக வேறொரு மனோதத்துவ தர்க்க நூற்களில் கற்றுணர வேண்டுமேயொழிய, இம்மருத்துவத்தில் எழுதவும் இடம் போதாது, அவைகளை விளக்கமாக எழுதிடச் சொல் வன்மையும் இல்லை. இங்கு மகளிரின் மனோதத்துவத்தைக் கீழ்க்கண்ட வரிகளால் சுருக்கமாக, தெளிவுபடுத்த முடியும் எனலாம். அவையாவன:—

(1) இளமைப்பருவத்தில் மனதில் தேங்கிய மனோபாவனைகள் பிற்கால மங்கைப் பருவத்தில் கிளர்ந்து மனோவிகற்பமாக ஏற்படல்.

(2) இளமையில் தாய் தந்தையரின் முக்கியமாக, தாயின் அன்பான பராமரிப்பு இல்லாக் குறை; அதனால் உறவு சம்பந்தம் இன்னதென்று அறியாமை போன்றவைகளால் பிற்காலத்தில் கணவன் மனைவி உறவு தெரியாமலாகிறது.

(3) உடை, அலங்காரம், உணவு முதலியவைகளிலேயே நெடுநேரம் செலவழித்தல், பெற்றோர்கள் அவைகளைத் தம் மகளிரிடம் வற்புறுத்தல்; புற உலக விவகாரங்களில் ஈடுபடாமை ஆகியவைகள்.

(4) பெற்றோர்களின் கடுமையான ஒழுக்க உத்திரவுகள் (பெண்களின் பண்புகளான அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு ஆகியவைகள் மிகவும் அளவு கடந்து காணல்).

(5) காமக் கிளர்ச்சிக்கான கிரியையில் ஈடுபடுவது குற்றம் என்று இளமையில் அறிவது.

(6) இளமையில் தற்செயலாக ஆண்கள் சேர்க்கையால் ஏற்பட்ட வடுக்கள்; பிற்காலத்தில் அவ்வடுக்களுக்குப் பயந்து கலவியை வெறுத்தல் அல்லது கலவிக்குப் பயப்படல்.

(7) உள்ளூர தன் தாயோடு வெறுப்பு.

(8) இளமையில் தற்செயலாக ஏற்பட்ட பயம் பிற்காலத்தில் ஆண்களைக் கண்டால் வெறுப்பு அதனால் பெண்மை கோலத்தை வெறுத்தல்.

இன்னும் எத்தனையோ இளமையில் ஏற்பட்ட காரணங்கள் மங்கைப் பருவத்தில் சடக் குறிகளாக மகளிரைப் பாதிக்கின்றன, இவைகளை மனோதத்துவ அறிவியலறிஞர்கள் ஆய்வுற்று நூற்களாக விளக்கமாக எழுதியுள்ளனர். அதனை மருத்துவ மாணவர்கள் கற்றுணரவும. அஃறியும் மகளிர்களுக்கு வாழ்வில் முறையாக நடக்கும் நிகழ்ச்சிகளான (1) பூப்பு அடைதல (2) பூப்பு (3) புணர்ச்சி (4) சூல் கொள்ளுதல (5) பாலூட்டல் (6) பூப்பு முடிவெய்தல் போன்றவைகள் எல்லாம் மகளிரின் மகத்தான மனோ நிலையை மாற்றமடையச் செய்யும் நிகழ்ச்சிகளாகும். இளமைப்பருவ முதல் பூப்பு முடிவடையும்வரை வரிசை முறையாக மனோதத்துவங்கள் அடுத்தடுத்து மாறி மாறி அவைகளோடு மிதந்து செல்லும் வாழ்க்கையாக மகளிர்களுக்கு அமைந்துள்ளன. அதற்கேற்ப உடலமைப்புகளும் அலங்காரங்களும் சேர்கின்றன.

பொதுவாக எல்லோர்க்கும் பயத்தினால் இதயம் படபடப்பதும், பேரவாவினால் சீரணக் கோளாறுகள் உண்டாவதைப் போல் மகளிர்களுக்குச் சூதகக் கோளாறுகளில் மனோ எரிச்சலோ சோர்வோ ஏற்படுவது மரபாக உள்ளது. மகளிர்களுக்குச் சூதகக் கோளாறுகளினால் மட்டுமே மனோவிகாரங்கள் ஏற்படுவது என்று கருதுவது தவறு. வாழ்க்கையில் பயம், துக்கம், சரியான வீடு வசதி இல்லாக்குறை, பழைய வீட்டை விட்டு வேறு புதிய வீட்டிற்கு மாறுதல், தொழில் மாற்றம், உற்றார் உறவினரை இழத்தலினால் உண்டாகும் துன்பம், குடும்ப மாற்றம் போன்றவைகள் மகளிர் நோய்களை உண்டாக்கக் காரணங்களாகின்றன என்று உணர வேண்டும். குடும்பத்தில் ஆதரவும் அன்பும் பெறாத குறையினாலும் சீரண நோய்களும் மகளிர் நோய்களும் உண்டாகின்றன என்பது கண்கூடு.

மனித சமுதாயத்தில், பண்பாட்டு ஒழுக்க அதிகரிப்டாலும், சாதி மத கொள்கைகளைக் கடைபிடிப்பதாலும், அதன் வேறுபாட்டாலும், ஏழை பணக்காரர் என்ற பாகுபாட்டாலும் தொழிலாளி முதலாளி என்ற தத்துவத்தாலும், பெரும்பாலும் பாதிக்கப்படுபவர்கள் மகளிர்களே ஆவர். அதனால் அவர்கள் மனோ விகாரமடைகின்றனர். அம்மனோவிகாரங்கள் நாளடைவில் மகளிர் நோய்களாகப் பிரதிபலிக்கின்றன இளமையில் மங்கையர்களிடத்து சுயேச்சையாய் காம உணர்வு செய்திகளைப் பெற்றோர்கள் நேர்முகமாகப் பேசாததினால் அவர்கள் அவைகளைப் பேசுவதும் கலந்து ஆலோசிப்பதும், கற்பதும் குற்றம் அல்லது பாவமான செயல் என்று எண்ணுவது, பெற்றோர்கள தம் பெண்களைக் காம உணர்ச்சிக்கு வசப்படக்கூடாது என்று அடிக்கடி போதிப்பது; காம உணர்ச்சிகளைப் பருவக் காலங்களில் வெளிவிடாமல் அடக்குதல், திருமணம் காலந்தவறி மணப்பது போன்ற நிகழ்ச்சிகளால் மகளிர்பால் பெருத்த துன்பச்சுமை ஏற்படுவதால் மகளிர் நோய் ஏற்படுகின்றன. மேலும் காம உணர்ச்சியைப் பூர்த்தி செய்துகொள்ள பிறபொருள்களால் சுய புணர்ச்சியில் ஈடுபடுவது போன்றவைகள் பிற்காலத்தில் ஏதோ பெரியகுற்றம் செய்த குற்றவாளிகளைப்போல் பயப்படுவதும், வரப்போகும் அவத்தைகளை யூகித்துத் துன்புறுவதும் போன்றவற்றிற்கு ஆளாகிறார்கள். புணர்ச்சி நுட்பங்களை தெரியாமை; பணச் செல்வாக்கில்லாத குறையால் நீண்ட காலம் புணர்ச்சியைத் தள்ளிப்போடுவது; அல்லது திருமணம் செய்து கொள்ளாமலிருப்பதால் நேர்மையற்றப் புணர்ச்சியில் ஈடுபட்டுக் கருச்சிதைவு உண்டாக்கிக் கொள்வது போன்றவைகள் ஏற்படுகின்றன.

புணர்ச்சிக்கு இச்சை இன்மையும் புணர்ச்சி வலியும் ஒன்றோடொன்று தொடர்புடையன. இவைகள் முக்கியமாக, பெண்பாலார்க்கு விருப்பமின்மையும் யோனிச் சளிச் சுரப்பு இல்லாக் காலத்தும் புணர்ச்சி வலி உண்டாகும். மனோதத்துவர்கள் பெண்களுக்குப் புணர்ச்சியில் ஈடுபட விருப்பமில்லாவிட்டால் மேற்சொன்னவைகள் ஏற்படும் என்று கூறுகிறார்கள். சிலர் மகளிர் புணர்ச்சியைத் 'தீமை' என்று கருதுபவர்கள் ஏதோ மனைவி என்ற கடமைக்காகப் புணர்ச்சிக்கு இசைவார்கள். ஆனால் உண்மையான காம உணர்ச்சிக்கு வசப்பட்டு புணர்ச்சிக்கு உடைந்தையானவர்களாகார். இளமையில் பெற்றோர்கள் ஆடை அலங்காரங்களில் முக்கிய கவனம் செலுத்தினால் இளம் பெண்கள் பிறப்புறுப்புக்களின் நிகழ்ச்சிகளைக் கொடூரமான 'அழுக்கு' 'தீட்டு' என்று நினைத்து அதிலே மனதைச் செலுத்தி அந்நிகழ்ச்சிக் காலங்களில் அவைகளைப் பெரும் பாவமான அழுக்கு என்று வெறுப்பு கொண்டு அவைகளைச் சீர்மையாக வைக்காமல் மகளிர் நோய்களை உண்டாக்கிக் கொள்வார்கள். இளமையில் அறியாத்தன்மையால் வாலிபர்களின் வலுக்கட்டாயப் புணர்ச்சியின் பயங்கர நினைவுகள், மங்கைப் பருவத்தில் சாதாரண புணர்ச்சிக்கு மறுப்பது காரணமாகின்றன. புணர்ச்சியின் நுட்பம் தெரியாமல் தாறுமாறாக, காம உணர்ச்சிகளை உண்டாக்கி, துன்பப் புணர்ச்சியால் புணர்ச்சி வலி உண்டாகும். ஆகையால் மருத்துவர் இரு தரத்தாரோடு நிதானமாகப் புணர்ச்சி நுட்பத்தை விவாதித்து ஆலோசனை கூறினால் சரியாகும். புணர்ச்சிக்கு முன் காம ஊடல் பேச்சுக்கள் நிகழ்த்தி ஆண்கள் அவசரப்படாமல் நிதானமான புணச்சியை நிகழ்த்தினால் புணர்ச்சி வலியை ஒருவாறு பரிகரிக்கலாம்.

சில சமயங்களில் திருமணமான மங்கையர்களுக்குச் சூல் கொள்ள ஏக்கமுற்றவர்களுக்குப் புணர்ச்சியில் வலியுண்டாகும். அல்லது சூல் கொள்ளுமே என்ற பயத்தினாலும் புணாச்சி வலியுண்டாகும். புணர்ச்சிக்குப் பிறகு முதுகு குறுக்கு வலி ஏற்பட்டால் வலி நோய் எனலாம் ஆனால் புணர்ச்சியில் நிறைவு கொள்ளாவிட்டாலும் முதுகு குறுக்கு வலி ஏற்படலாம் என்பதையும் உணர்தல் வேண்டும். சில வேளை ஆண்கள் காம உணர்ச்சியைத் திருப்திகரமாக பூர்த்தி செய்யாததினாலும், புணர்ச்சியை விட்டுவிட்டு நெடு நேரம் செய்தும் திருப்திகரமாக முடியாவிட்டாலும் முதுகு வலியுண்டாகலாம். இவர்களுக்கு வேறு முறை புணர்ச்சி வகைகளைக் கூறவேண்டும்.

எந்நாட்டிலும் இளம் பெண்களுக்குப் பூப்படைதலை இன்னவிதமாக நிகழும் என்று முன்கூட்டியே பெற்றோர்களும் சரி, பூப்படைந்த மங்கையர்களும் சரி சொல்லுவதில்லை. பூப்படைந்த பிறகு தோழியர்கள் ஒருவரோடு ஒருவரும் அதைப்பற்றி பேசுவதில்லை. திடீரென்று எதிர்பாராத காலத்தில் முதல் பூப்படைந்த மங்கை பூப்பு நிகழ்ச்சியைப் பயத்தோடு கோழையாக ஏற்கிறாள். இக்காலங்களில் மங்கையர்களைத் தீண்டாமை, அசுத்தமானவர்கள், தினசரி அலுவல்களை நிறுத்திவிடுவது போன்ற ஆசார வழி முறைகளைப் பலவந்தமாகக் கடைப்பிடிப்பதனால் சூதகவலிகள் உண்டாகின்றன என்று கண்டுள்ளனர். கருவுண்டாவதின் நிகழ்வுகளை அறியாமையால் பற்பலவிதமாக, பயங்கரமான கதைகள் கேள்விப்படுவதால் மங்கையர்கள் மகப்பேறு காலங்களில் கோழைகளாகி மகப்பேறு வலியைத் தாங்க முடியாமல் அநேக அவத்தைகளுக்குள்ளாகிறார்கள்.

பண்பாட்டு ஒழுக்கங்களினால் சில மூட நம்பிக்கைகள் உண்டாவதில்லை எனலாம். ஆனால் சில மூதாட்டிகள் பொழுதுபோக்காக, குதூகலமாக சில கட்டுக்கதைகளைப் பெண்கள் சமுதாயத்தில் பரப்புவார்கள். அவைகள் மங்கையர்களைப் பெரிதும் பாதிக்கின்றன. இதைவிட பூப்பு முடிவைப் பற்றிக் கேட்கத் தகாத கதைகளைப் பரப்பியுள்ளனர். இதனால் அநேக மகளிர் பூப்பு முடிவில் துன்பமடையபோகிறோமே என்று பயத்துடன் எதிர்நோக்குவார்கள். ஆனால் தற்கால மருத்துவப் பிரச்சாரத்தினால் எத்தனையோ கட்டுக் கதைகள் தகர்த்தெரியப்பட்டன. ஆனால் சிலர் பூப்பு முடிவில் அவுத்தையுறுவது மறுக்க முடியாத உண்மையாகும் என்பதும் கவனிக்கத்தக்கதாகும்.

குழந்தையினைப் பெறாத மகளிருக்குப் பூப்பு முடிவடைய போகிற நிலவரம் பெரும் ஏக்கத்தையுண்டாக்கும். அதனால் மனோவியாகூல நோய் உண்டாகும். மேலும் பூப்பு முடிவு காமக் கிழத்தியாக இருக்க முடியாமல் மூதாட்டி ஆவதை எண்ணிப் பெரும் ஏக்கம் கொள்வார்கள்.

பூப்பு முடிவு காலத்தில் தீவிரப் பெரும்பாடு, கருப்பைப் புற்றுநோய் வருகிற குறியானபடியால் அதில் மகளிருக்குச் சொல்லொணாப் பயம் ஏற்படும். பூப்பு முடிவடைவது கருப்பையின் அபரினாமச் செயலைகயால் இரவில் தூக்கமின்மை இனி புணர்ச்சியில் ஈடுபட முடியாமை என்ற ஏக்க உணர்ச்சிகள் ஆகியவை உண்டாகும். கணவன்மார்கள் தங்களை நிராகரிப்பார்களோ என்ற பயம் ஏற்படும். இவர்கள் தகுந்த மருத்துவர் களைக் கண்டு பரிகாரம் தேடவும். இல்லையேல் இவர்கள் தற்கொலை செய்து கொள்ளவும் துணிவார்கள்.

எனவே, மகளிர் நோயைக் கணிக்கப் புகுங்கால் சடபரிசோதனை முதற்கண் செய்து உடலுறுப்புகள் பாதிக்கப்படவில்லை என்று தீர்மானித்த பிறகே மனோவிகற்ப நோய் எனக் கொள்ளவேண்டும். மகளிர் கூறும் குறி குணங்களைக்கொண்டு திடீரென்று நோயைக் கணிப்பது தவறாகும்.

முதல் சந்திப்பிலேயே மருத்துவர் மகளிரின் மனோ நோயைக் கணிப்பதும் கடினம். இம்மாதிரியான காலங்களில் குடும்ப மருத்துவர்பால் அனுப்பி விடவும். குடும்ப மருத்துவர் இல்லாத காலங்களில் அவகாசமாக அம்மகளிரை வினாவுதல் வேண்டும். குடும்ப பராமரிப்பு, குடும்பக் கதை கள், உறவினரின் பராமரிப்பு, தொழில், செல்வாக்கு, வசதிகள் போன்ற வைகளை நன்றாக ஆராய வேண்டும். அக்கம் பக்கத்திலுள்ள சூழ் நிலைகள் உற்றார் உறவினர்களின் பராமரிப்பு போன்றவைகளைக் கவனமாக கேட்டுணர வேண்டும். சடபரிசோதனையினால் அறிந்த குறி குணங்களையும் குடும்ப வரலாற்றையும் பழக்க வழக்கங்களால் ஏற்பட்ட குறி குணங்களையும் ஒத்திட்டு பார்த்திடல் வேண்டும்.

மன நோயால் பாதிக்கப்பட்ட மகளிர்களை இருவகையாகப் பிரிக்கலாம் (1) மதி நுட்பமுடைய நோயினர் (2) மதி நுட்பமிலா நோயினர். முதல் தரத்தார் அதிகமாக பேசுவார்கள். புதிய புதிய குறி குணங்களைச் சுயமாகப் பிறப்பித்துச் சொல்வார்கள். ஆனால் அவர்களோடு விவாதித்து ஆலோசனை கூறி சரிப்படுத்தலாம். மற்றவர்களைச் சரிப்படுத்துவது கடினம். ஆகையால் இவ்வகையானவர்களை மனோதத்துவ அறிவியலறி ஞர்களிடம் விட்டுவிடுவது நல்லது. இல்லையேல் "இவர்கள் என்றும் நோயினர்; உண்மையில் நோயினர் அல்லர்" என்ற தத்துவத்திற்கு விளக்கம் காணமுடியும்.

---